1575
25-3-09

வெளியீடு : 26-9-2008 Issued : 26-9-2008

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

திங்கட்கிழமை, மே 12, 2008—தொகுதி 54—எண் 2

Monday, the 12th May 2008—Volume 54—No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

D
V211,31P08
P08.54.2
228413

[Price Rs. 3.00

12–5–2008

# உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| 1 **வினாக்கள்–விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 285-326 |
| 2. **அறிக்கைகள் அளித்தல்—** | |
| மதிப்பீட்டுக் குழு .. .. | 327 |
| 3. **மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்**—*தொடர்ச்சி* | 328-405 |
| (அ) கோரிக்கை எண் 22–காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)<br>(ஆ) கோரிக்கை எண் 23–தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)<br>(இ) கோரிக்கை எண் 37–மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 328-405 |
| *திரு. குத்தாலம் க. அன்பழகன் .. | 328-338 |
| *திரு. டி. சுதர்சனம் .. .. | 338-356,377 |
| திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் .. | 356-366, 368-377 |
| மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 377-400,403 |
| 4. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** .. | 406-407 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2039, சித்திரை 30

## 2008 மே 12, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

**"காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்**
**மீக்கூறும் மன்னன் நிலம்."**

காட்சிக்கு எளிமையும், கடுஞ்சொல் கூறாத இனிய பண்பாடும் உடைய அரசைத்தான் உலகம் புகழும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள். வினா எண் 241, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. லட்சுமணன், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**241—**

### கட்டடம்

***10502—திரு. ச. லட்சுமணன்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போடிநாயக்கனூர் தொகுதி, போடிநாயக்கனூரில் இயங்கி வரும் நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் தொகுதி, போடியில் இயங்கி வரும் நீதிமன்றங்களுக்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கான நிலம் தேர்வு

[2008 மே 12

செய்யப்படவில்லை. நிலம் தேர்வு செய்யப்பட்ட பின்பு, கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. லட்சுமணன்.

**திரு. ச. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது போடிநாயக்கனூரில் இயங்கி வரும் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றமானது, மாண்புமிகு தானைத் தலைவர் முதல்வர் கலைஞர் அவர்கள் நான்காம் முறையாக முதல்வராக இருந்தபோது கொண்டு வரப்பட்டது. தற்போது நகராட்சிப் பயணியர் மாளிகையில் இயங்கி வருகின்றது. போதுமான இட வசதி இல்லாமல் இருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அதற்குக் கட்டடம் கட்டித் தருவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றங்கள் கட்டுவதற்கு இடத்தைத் தேர்வு செய்து தரவேண்டியது உயர் நீதிமன்றத்தினுடைய பொறுப்பு. அதன் அடிப்படையில்—போடிநாயக்கனூர் நகரத்திற்குள் எங்கும் இடமில்லை—3 ஏக்கராவது நிலம் தேவை என்று பார்த்திருக்கிறார்கள். பொதுவான இடங்களில், எந்த இடமும் கிடைக்காத காரணத்தால் பக்கத்தில் வேளாண்மைத் துறைக்குச் சொந்தமான ஓர் இடம் இருப்பதாகவும், அதைப் பெறுவதற்கு உயர் நீதிமன்றம் முயற்சி எடுத்ததாகவும், ஆனால் வேளாண்மைத் துறை அந்த நிலத்தைத் தருவதற்கு இசைவு தரவில்லை என்றும் உயர் நீதிமன்றத்திலிருந்து அரசுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனாலும், மீண்டும் முயற்சித்து அந்த நிலத்தினை வாங்குவதற்கு உயர் நீதிமன்றமும் முயற்சித்துக் கொண்டிருக்கிறது. அரசும் முயலும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. லட்சுமணன்.

**திரு. ச. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போடி–தேவாரம் [illegible] முறை விற்பனைக் கூடத்திற்குச் சொந்தமாக 5 [illegible] நிலம் உள்ளது. [illegible]மிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் [illegible]யற்சித்து அந்த நிலத்தைப் பெ[illegible]று, கட்டடம் கட்டித்

22843
சென்னை-600 008



2008 மே 12]

தருவதற்கு ஆவன செய்யுமாறு தொகுதி மக்களின் சார்பாக வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. திருநாவுக்கரசு.

**திரு. கே. திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்களில், சொத்து மதிப்பீடு ரூபாய் ஒரு இலட்சம் வரை உள்ள வழக்குகளைப் பதிவு செய்யலாம் என்று இருப்பதை, தற்போது பணத்தின் மதிப்பீடு அதிகமாக இருப்பதால் பொதுமக்கள் நலன் கருதி ரூபாய் 5 இலட்சம் வரை மதிப்பீடு உள்ள வழக்குகளை மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்களிலேயே பதிவு செய்வதற்கு நிதிநிலை அதிகார வரம்பை–pecuniary jurisdiction– உயர்த்த, நமது அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றங்களைப் பொறுத்தவரையில் எந்த நிலைப்பாட்டை எடுக்க வேண்டுமானாலும் உயர் நீதிமன்றத்தினுடைய பரிந்துரையோடுதான் எடுக்கப்பட வேண்டும். மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை உயர் நீதிமன்றத்திற்குத் தெரிவிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகத்தில் இயங்கிவரும் சார்பு நீதிமன்றமும் குற்றவியல் நடுவர் நீதிமன்றமும் மிகவும் பழுதடைந்த நிலைமையில் உள்ளன. இவற்றுக்குப் புதிய கட்டடம் கட்டித் தர இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு 22 நீதிமன்றங்களுக்குக் கட்டடம் கட்டுவதற்காக அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை மானியக்

[2008 மே 12

கோரிக்கையின்போது தெரிவித்தேன். தமிழ்நாட்டில், மதுராந்தகத்தைப்போல் பல பகுதிகள் இருக்கின்றன. எல்லா ஊர்களில் இருக்கின்ற நீதிமன்றங்களும் அரசுக் கட்டடங்களிலே இயங்க வேண்டும் என்பதுதான் அரசினுடைய கொள்கை. அதற்காகத்தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள், சென்ற நிதிநிலை அறிக்கையிலே 300 கோடி ரூபாயும், இந்த நிதிநிலை அறிக்கையிலே 100 கோடி ரூபாயும் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆக, இந்த ஆட்சியில், 4 ஆண்டுக் காலத்திற்குள்ளாக எல்லா நீதிமன்றங்களும் அரசுக் கட்டடத்தில் இயங்குகின்ற வகையில் நிதி ஆதாரத்தை ஒதுக்கி நடவடிக்கை எடுக்கப்படும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மதுராந்தகத்தைப்பற்றி அதிகமான அக்கறை இருந்தால், அடுத்த ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் எடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

*முற்பகல் 9–35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போன வருடமே கொடுத்துவிட்டார்கள். கடந்த நிதிநிலை அறிக்கையில் நம்முடைய மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் திருப்பூரிலே ஓர் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டுவதற்கு அனுமதியளித்தார்கள். அவர் குறிப்பிட்டதைப்போல, உயர் நீதிமன்றத்தினுடைய குழு திருப்பூருக்கு வந்து இடங்களையெல்லாம் ஆய்வு செய்தது. தற்போது நீதிமன்றம் செயல்படுகிற அந்தப் பகுதியிலேயே கட்டினால் அது நீதிமன்றத்திற்குரிய இடமாக இருக்கிறது. ஆனால், அந்த இடத்திலே இல்லாமல் வெளியிலே கட்ட வேண்டும் என்ற கருத்து வந்தபோது, அறநிலையத் துறைக்குச் சொந்தமான ஓர் இடத்தைப் பார்த்தார்கள். ஆனால், அறநிலையத் துறை அதை நமக்கு ஒப்பளிப்பதற்கான சில தயக்கங்கள் இருக்கின்றன. ஆகவே, இதுமாதிரி முக்கியமான பல திட்டங்கள் அரசு அறிவிக்கிறபோது, அந்த இடம் ஒரு பெரும் பிரச்சினையாக இருந்து கொண்டேயிருக்கிறது. ஆகவே, அரசினுடைய ஒரு துறைக்குச் சேர்ந்த இடத்தை அது அதற்குப் பயன்பாடு இல்லையென்றால், இன்னொரு துறைக்கு உரிய முறையில் மாறுதல் செய்தோ அல்லது ஒரு guideline value-படி விலை நிர்ணயம் செய்தோ அல்லது 90, 99 வருடத்திற்கான lease என்ற முறையிலாவது, ஒரு துறையினுடைய இடத்தை, இன்னொரு அரசுத் துறைக்கு மாறுதல்



2008 மே 12]

செய்து கொடுத்தால் இதுபோன்ற இடப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட ஒரு வாய்ப்பு இருக்கிறது. அப்படிப்பட்ட ஓர் ஒருங்கிணைப்பை, துறைகளின் வாரியாக ஒருங்கிணைப்பை உருவாக்கி, இதுபோன்ற நிலங்கள் பரிமாற்றம் செய்து, அரசு அறிவிக்கக்கூடிய நீதிமன்றங்களாக இருந்தாலும், இதர நடவடிக்கையைச் செய்து கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றக் கட்டடங்களைக் கட்டுகிறபொழுது—ஒருங்கிணைந்த நீதிமன்றம் கட்டுகிறபொழுது—அரசே ஓர் இடத்தைக் குறிப்பிட்டு, இந்த இடத்திலே கட்டலாம் என்பது அல்ல. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல உயர் நீதிமன்றத்திலிருந்து நீதிபதிகள் வருவார்கள். அவர்கள் குறிப்பிட்ட இடத்திலேயேதான் அதைக் கட்ட வேண்டும் என்று சொல்கிறார்கள். அதிலும் சில நேரங்களிலே கருத்து மாறுபாடுகள் வந்துவிடுகின்றன. ஆனாலும், அதை ஒரு பிரச்சினையாக்காமல், உயர் நீதிமன்றம் சொல்லுகிற இடத்தில்தான் அரசு கட்டுகிறது. ஆனால், பொதுவாக இப்படிப்பட்ட இடங்களைத் தேர்வு செய்கிறபொழுது, பொதுப் பணித் துறைக்குப் பயன் இல்லாமல் இருக்கிற இடங்கள் இருந்தால், அதுதான் நிரம்ப easy. ஏனென்றால் பள்ளிக்கூடம் கட்டவேண்டுமென்றாலும், விளையாட்டு மைதானம் அமைக்க வேண்டுமென்றாலும், என்ன கட்டவேண்டுமென்றாலும் பொதுப் பணித் துறையினர்தான் எடுத்துக்கொள்வார்கள். அதற்குப் பெயரே பொதுப் பணித் துறை, அதனால் எடுத்துக்கொள்வார்கள். அதனால் கூடுமானவரையில் நாங்கள் கொடுத்துவிடுகிறோம். அடுத்து, இரண்டாவது Highways இடங்கள், அதையும் எடுத்துக்கொள்கிறார்கள். மேய்ச்சல் புறம்போக்கு அதையும் எடுத்துக்கொள்கிறார்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல், வனத் துறையிலும், இந்து அறநிலையத் துறையிலும் இருக்கின்ற நிலங்களை எடுப்பதைவிட, வைகுந்தத்திற்குப் போய் பாரிஜாத மலரையே கொண்டுவந்து விடலாம். அதிலே அவ்வளவு கஷ்டங்கள் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

[2008 மே 12

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றக் கட்டடங்கள் குறித்தான கேள்வி. அப்படி நீதிமன்றங்கள் செயல்படுகிறபொழுது, ஏற்கெனவே பல இடங்களிலே நீதிபதிகள் பதவி காலியாக இருப்பதாகச் செய்திகள் வந்தன. அதைப்போலவே, வட்ட அளவில் செயல்படுகிற நீதிமன்றங்களிலே இருக்கக்கூடிய நீதிபதிகள், ஒரு நீதிபதியே இரண்டு நீதிமன்றங்களுக்குச் சென்று அந்தப் பணிகளைக் கவனிக்க வேண்டிய நிலைகள் எல்லாம் இருந்தன. அந்த நிலைமைகள் இப்பொழுது போக்கப்பட்டிருக்கின்றனவா? நீதிபதிகளுடைய காலிப் பணியிடங்கள் முழுமையாக நிரப்பப்படுவதற்கான எந்தவிதமான முயற்சியை இந்த அரசு எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பல நீதிமன்றங்களில் நீதிபதிகள் இல்லை. காரணம் நீதிபதிகள் நியமிக்கிற அந்தப் பணியே அரசால் நிறுத்தப்பட்டது. கடந்த காலத்திலே பதவிகளை நிரப்புவதற்குத் தடைச் சட்டம் இருந்ததால் நின்று போய்விட்டது. ஆனால், இப்பொழுது நாங்கள் வந்ததற்குப் பிறகு, 2006 வரையில் எவ்வளவு நீதிபதிகள் நியமிக்க வேண்டியிருக்கும் என்று ஒரு கணக்கு எடுக்கச் சொன்னோம். அதில் அவர்கள் 81 இடங்கள் தேவை என்றார்கள். அரசு 81 இடங்களைத் தேர்வு செய்துகொள்ளுங்கள் என்று உயர் நீதிமன்றத்திற்குத் தெரிவித்தது. ஆனால், அவர்கள் 81 அல்ல; 2006–ல், இன்றையவரையில் எவ்வளவு காலி இருக்கிறதோ அவ்வளவும் நிரப்ப வேண்டும் என்றார்கள். சரி, நிரப்பிக்கொள்ளுங்கள் என்று சொன்னோம். அது எவ்வளவு வரும் என்று கேட்டோம்; 80, 181 ஆயிற்று. பிறகு 181 நீதிபதிகளைத் தேர்ந்தெடுத்துக்கொள்வதற்கு அரசு அனுமதித்தது. ஆனால், திடீரென்று பார்த்தால் 201 நீதிபதிகளை நியமிக்க பத்திரிகையிலே விளம்பரம் வந்தது. அரசைக் கேட்காமலேயே செய்தது. அதுதான் அரசு அங்கே தடுத்தது. அன்றைக்கு நான் என்னுடைய மானியத்திலே சொன்னேன். இப்பொழுது 201 நீதிபதிகளை நியமிப்பதற்கு அரசு அனுமதி வழங்கிவிட்டது. இப்பொழுது அதற்கான விளம்பரமும் வந்துவிட்டது. எனவே, விரைவில் இந்த காலியிடங்கள் நிரப்பப்படும். அதேபோன்று, உயர் நீதிமன்றத்தில் இருக்கிற நீதிபதிகளுடைய எண்ணிக்கையை உயர்த்த வேண்டுமென்பது நீண்ட நாள் கோரிக்கை. காரணம், நிறைய வழக்குகள் தேங்கி இருக்கின்றன. உச்ச



2008 மே 12]

நீதிமன்றத்திலேகூட நீதிபதிகளின் எண்ணிக்கையை உயர்த்தியிருக்கிறார்கள். உயர் நீதிமன்றத்தில் உள்ள நீதிபதிகளின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கை உயர் நீதிமன்றத்தின்மூலம் வந்திருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் முறைப்படி அது அறிவிக்கப்படும்.

முற்பகல் 9–40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில பகுதிகளில் முதல் மாடி மற்றும் இரண்டாவது மாடி இருக்கின்ற நீதிமன்றங்களில் lift–கள் இருக்கின்றன. பல இடங்களில் இல்லை. வயது முதிர்ந்த வழக்கறிஞர்கள் அவர்கள் வயதான காலத்தில் படியேறிச் சென்று வழக்காட முடியாத சூழ்நிலை இருக்கிறது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வக்கீல்களில் பருமனாக இருப்பவர்களால்தான் ஏறமுடியவில்லை!

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** Healthy-யாக இல்லை உங்களைப் போன்று! ஆகவே, அப்படிப்பட்ட வழக்கறிஞர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன் தன் வயது முதிர்வின் காரணமாக, தான் ஏற முடியாததை மற்றவர்களின் கருத்தைத் தன்மீது ஏற்றிச் சொல்லியிருக்கிறார். எது எப்படி இருந்தாலும், புதியதாகக் கட்டப்படுகிற நீதிமன்றங்களில் எல்லாம் lift வைக்கப்பட்டிருக்கிறது. பழைய நீதிமன்றங்களில் இந்தச் சிரமத்தை உணர்ந்ததால், இரண்டு மாடி, மூன்று மாடி என்று வருகின்றபோது lift இருக்க வேண்டும் என்றுதான் இப்பொழுது provision தந்திருக்கிறோம்.

[2008 மே 12

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 242, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**242—**

**பணிமனை**

***33673—திரு. ஆர்.எம். பழனிசாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடியில் அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதிக்குட்பட்ட கொடுமுடியில், பணிமனைக்கு 2 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. தற்காலிகப் பராமரிப்புக் கூடம் அமைக்கப்பட்டு, இரவு நேரங்களில் 8 பேருந்துகள் நிறுத்தப்பட்டு வருகிறது. அலுவலகம் மற்றும் பண்டகத்திற்குத் தேவையான கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்காணும் பணிகள் முடிவடைந்தவுடன், பணிமனை திறக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்கு உட்பட்ட இந்தக் கொடுமுடி பணிமனையிலே கிட்டத்தட்ட இன்றைக்கு 8 வண்டிகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. அந்த 8 வண்டிகளிலும் டீசல் பிடித்தல், பராமரித்தல் மற்றும் பழுது நீக்கும் வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. ஆனால், இந்த இடம் இன்றைக்கு 2 ஏக்கர் என்று சொல்லும்போது கிட்டத்தட்ட 40 வண்டிகள் அந்தப் பகுதியில் நிறுத்த முடியும். அதேபோல, அந்தப் பணிமனை விரிவாக்கம் செய்து அங்கே ஷெட்டுகள் அமைக்கப்படும்என்று சொன்னால், இப்பொழுது கரூர் கிளையிலிருந்து 11 வண்டிகள், ஈரோடு கிளையிலிருந்து 2 வண்டிகள் என 13 வண்டிகளும் கொடுமுடிக்கு வந்து செல்கிற சூழ்நிலை இருக்கிறபோது, அந்த வண்டிகளையும் அங்கே நிறுத்துவதற்கான வசதிகள் ஏற்படும். அதேபோல, இப்போது 54 வண்டிகள் திருச்சி மார்க்கமாக, மதுரை மார்க்கமாக தெற்கும், கிழக்குமாக ஈரோட்டிலிருந்து செல்வதெல்லாம் கொடுமுடி வழியாகச் செல்கின்றன. அதுமட்டுமல்ல; இன்னும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், கொடுமுடி என்பது அருள்மிகு மகுடேஸ்வரர் வீரநாராயணப் பெருமாளுடைய திருத்தலம். அங்கே பங்குனி காலம் மிகப் பெரிய விசேஷ காலமாக இருப்பதால், சிறப்புப் பேருந்துகள் அங்கேயிருந்து இயக்கப்பட வேண்டும். ஆக, எதற்காக இதைக் குறிப்பிட்டுச் சொல்கிறேன் என்று சொன்னால், அந்தப் பணிமனை விரிவாக்கம் செய்யப்படும் என்று சொன்னால், நிச்சயமாக அந்தப் பகுதியிலேயிருந்து போக்குவரத்தை அதிகப்படுத்துவதற்கு வாய்ப்பு அமையும். ஆக, அமைச்சர் அவர்கள், கூடிய விரைவில் ஷெட்டையும் அமைத்துத் தந்து, விரிவாக்கம் செய்து தருவார்களா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.



2008 மே 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கிற சட்டப்படி, இரண்டு பணிமனைகளுக்கிடையே 40 கிலோ மீட்டர் தூரம் இருக்க வேண்டும். ஆனால், 14,000 15,000 பேருந்துகள் இருக்கின்றபோது, அது 40 கிலோ மீட்டர் என்ற அளவிலே இருந்திருக்கிறது. இன்றைக்கு 20,000 பேருந்துகள் வந்துவிட்டன. எனவே, 40 கிலோ மீட்டர் இருக்கிறது என்பதை 30 கிலோ மீட்டருக்கு ஓர் இடத்திலே பணிமனை அமைக்கலாமா என்ற ஆய்வு, துறையின் மட்டத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இப்போது குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், கொடுமுடியை போல, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர், வெள்ளக்கோயிலிலே ஒரு பணிமனை அமைப்பதற்காக ஓர் இடத்தைத் தேர்வு செய்து தருகிறேன் என்று சொல்லியிருக்கிறார். அதுபோல, சட்டமன்ற உறுப்பினர்கள் மிக அவசியம் தேவை என்று சொன்னால், இடம் தேர்வு செய்து தருவார்களேயானால், 30 கிலோ மீட்டர் என்ற அளவிலே இருக்குமானால், அங்குப் புதிய

[2008 மே 12

பணிமனையை அமைப்பதற்குரிய முயற்சி, துறையின் சார்பாக எடுக்கப்படும். குறிப்பாக, நமது கொடுமுடி பகுதியில் இருக்கின்ற இந்தப் பணிமனையை இந்த ஆண்டிற்குள் முழுவதுமாகக் கட்டி முடித்து, பேருந்துகள் நிற்கின்ற அந்த வசதி நிச்சயமாக இந்த ஆண்டு ஏற்படுத்தித் தரப்படும். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் தன் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கொஞ்சம் நிதியும் தருவார்களேயானால், வெகு விரைவாக அதை முடித்துத் தருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** அமைச்சருடைய பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நிச்சயமாக சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்தும் பணம் தருகிறேன். அதேபோல, இன்னொரு கோரிக்கை. கொடுமுடியிலிருந்து சென்னைக்கு ஒரு பஸ் இயக்க அமைச்சர் ஆவன செய்ய வேண்டுமென்றும் இந்த நேரத்திலே ஒரு கோரிக்கையை வைத்து அமைச்சர் செய்ய முன்வருவாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *9–45*

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு பகுதியிலிருந்து இப்போது தேவையான அளவிற்கு *54* பேருந்துகள் அந்தப் பகுதி வழியாக வந்து கொண்டிருக்கின்றன என்று அவரே சொல்லியிருக்கிறார். சென்னைக்கு நேரடியாகப் பேருந்து வசதி கேட்டிருக்கிறார்கள். பெரும்பாலான சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதியிலிருந்து சென்னைக்கு நேரடியாகப் பேருந்து வேண்டுமென்று தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். பல சட்டமன்ற உறுப்பினர்களின் அந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. எனவே, வருங்காலத்தில் நிச்சயமாக திரு. பழனிசாமி அவர்கள் சொல்வதையும் நிறைவேற்றலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.வி. சேகர்.

**திரு. எஸ்.வி. சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12A Bus Route சுமார் *15* பள்ளிக்கூடங்கள், கல்லூரிகளை cover செய்கிற ஒரு Bus Route. அது நிறுத்தப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் இயக்கித்



2008 மே 12]

தர வேண்டுமென்று மயிலை தொகுதிவாசிகள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தைப் பொறுத்த அளவில் இப்போது கிட்டத்தட்ட நாம் *3,000* பேருந்துகளை இயக்கிக் கொண்டிருக்கிறோம். அதிலே *2,700* பேருந்துகளை தினமும் இயக்கிக் கொண்டிருக்கிறோம்; மீதமுள்ள 300 பேருந்துகள் மாற்றுப் பேருந்துகளாக இருந்து கொண்டிருக்கின்றன. பொது மக்களுடைய கோரிக்கையை ஏற்று பல இடங்களுக்குப் புதிய வழித் தடங்களும் திறக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதை நான் ஆராய்ந்து, மறுபடியும் இன்றைக்கே அதிகாரிகளைக் கேட்டு, அப்படி அது நிறுத்தப்பட்டிருக்குமானால், நாளையிலிருந்தே அந்த வழித் தடம் மீண்டும் துவக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. கோபாலன்.

**திரு. போ. கோபாலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதகை பகுதியிலிருந்து குந்தா பகுதிக்கு மிக அதிகமான பேருந்துகளை நம்முடைய அமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மிக முக்கியமான, சுற்றுலா இடமாக விளங்கக்கூடிய குந்தா அணையைப் பார்க்க ஆயிரக்கணக்கான பேர் செல்லக்கூடிய நிலையில், அதிகமான பேருந்துகள் அங்கே வருவதால், அவை பழுதாகிவிடக்கூடிய சூழ்நிலை ஏற்படும். ஏறக்குறைய *30* கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. அங்கே ஒரு பணிமனை அவசியமென்று *10* ஆண்டுகளாக மக்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். தயவுசெய்து அதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று உங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைப் பிரதேசங்களில் பேருந்துகள் இயக்குவது என்பது கூடுதலான செலவினத்தை நமக்குத் தந்துகொண்டிருக்கிறது. குறிப்பாக,

[2008 மே 12

ஊட்டி பகுதியிலே 300–க்கும் மேற்பட்ட பேருந்துகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிக்கு 100 புதிய பேருந்துகளாகவே அளித்திருக்கிறார்கள். எனவே, குந்தா பகுதிக்கும் ஒரு பணிமனை தேவை என்று சொன்னால், ஆராயலாம். ஆனால் பணிமனை அமைப்பது என்பது அங்கே இடம் கிடைப்பதைப் பொறுத்திருக்கிறது; அந்தப் பகுதியிலே எவ்வளவு பேருந்துகள் இயக்க முடியும் என்பதைப் பொறுத்தும் அது இருக்கிறது; அதைப்பற்றி ஆராயலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி இளமதி சுப்பிரமணியன்.

**திருமதி இளமதி சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வலங்கைமான் தொகுதி, அம்மாப்பேட்டையிலிருந்து அவனியவநல்லூர், மணக்கால், வேலங்குடி, திருக்கருகாவூர் வழியாகப் பாபநாசம் செல்ல பேருந்து வசதி செய்து தர வேண்டுகிறேன். ஆவூர் வழியாக காருகுடி, உத்தமதானபுரம் வழியாக பாபநாசம் செல்ல பேருந்து வசதி செய்து தர வேண்டுகிறேன். ஏற்கெனவே இவ்வழியாகச் சென்று வந்த இந்தப் பேருந்து வழித் தடம் தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. இந்த வழித் தடங்களில் பேருந்து வசதி வழங்க வேண்டுமென்று கடந்த முறை நடைபெற்ற கூட்டத் தொடரில் கோரிக்கையாக வைத்தேன். இந்த மக்களின் குறைகளைத் தீர்ப்பதற்காகவும் பள்ளிக் குழந்தைகள் படுகிற அவஸ்தையைத் தீர்ப்பதற்காகவும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், இந்தப் பேருந்துகளை இயக்குவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஓடிக்கொண்டிருந்த பேருந்து ஏன் நிறுத்தப்பட்டிருக்கிறது என்பதைப்பற்றித் தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்று சொல்லியிருக்கிறார்கள். அதை இன்னும் ஓரிரு வாரங்களில் பார்த்து அவசியம் ஏற்படுமானால், நிச்சயமாக அந்தப் பேருந்து அங்கே மீண்டும் இயக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.



2008 மே 12]

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் மேட்டூர் அணையினுடைய அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் பணிமனை, மிகக் குறுகிய இடத்தில் இருக்கிறது. அந்தப் பணிமனையை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டுமென்று சேலம் மண்டலத்தின் சார்பிலே கோரிக்கை வைக்கப்பட்டு, நம்முடைய போக்குவரத்துத் துறையும் ஏற்றுக்கொண்டு, உடனடியாக புதிய பணிமனை தொடங்குவதற்குண்டான எல்லா வேலைகளையும் செய்து கொண்டிருக்கிறது. இருந்தாலும்கூட, இடப் பற்றாக்குறையின் காரணத்தினாலே பொதுப் பணித் துறையிடம் இடம் வேண்டுமென்று போக்குவரத்துக் கழகத்தின் சார்பிலே கோரிக்கை வைத்து, நீண்ட நாட்களாக அனுமதி வழங்கப்படாமல் இருக்கிறது. ஆன காரணத்தினாலே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பொதுப் பணித் துறையிடமிருந்து நிலத்தைப் பெற்று, உடனடியாக அங்கே பணிமனை கட்டுவதற்கான பணிகளைத் தொடங்க முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன். இதன் அவசியத் தேவையை உணர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். நீண்ட கால கோரிக்கை. 'நாங்கள் தேவையான தொகையைச் செலுத்திவிடுகிறோம், நீங்கள் வழங்குங்கள்' என்று முன்மொழிவு அனுப்பி வைத்திருக்கிறார்கள். அது நீண்ட காலமாக நிலுவையிலே இருக்கிறது. துறையின் அதிகாரிகள்கூட எங்களிடத்திலே சொல்லியிருக்கிறார்கள். பொதுப் பணித் துறை அமைச்சருக்கு நானும் கடிதம் கொடுத்திருக்கிறேன்; வேண்டிக்கொண்டிருக்கின்றேன். ஆகவே அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு)

*முற்பகல் 9–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருடைய தொகுதியில் வனத் துறைக்கும், அறநிலையத் துறைக்கும் நிறைய இடங்கள் இருக்கின்றன. அதிலே முயற்சிக்கலாம்! (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

[2008 மே 12

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் நிலமே கிடைக்காததற்கு ஒரு வழியைச் சொல்லியிருக்கிறார்! (சிரிப்பு) சேலம் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்த அளவில்—மாண்புமிகு உறுப்பினர் கோ.க. மணி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்—சேலம் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்த அளவில் இந்த ஆண்டு ஒரு புதிய முடிவெடுத்திருக்கிறோம். நாம் மற்ற துறைகளிலிருந்து நமக்கு நிலம் கிடைக்க வேண்டுமென்று சொன்னால் கேட்போம்; கிடைக்கவில்லையென்று சொன்னால், நாமாகவே வெளி விலைக்கே வாங்குவதற்குரிய committee–யிலே அல்லது கூட்டத்திலே முடிவு செய்து வெளியிலே market rate-க்கு வாங்கி அதை அமைக்கலாம். உறுதியாக அதை அமைத்துத் தருகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 243, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**243—**

## மருத்துவர்கள்

***2202—திருமதி பெ. கமலாம்பாள்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம், அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனையில் கூடுதல் மருத்துவர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனையில் உள்ள படுக்கைகள் மற்றும் சிகிச்சை பெறும் வெளி நோயாளிகளைக் கணக்கிடும்போது, இம்மருத்துவமனையில் போதுமான மருத்துவர்கள் பணிபுரிந்து வருகின்றனர். கூடுதலாக மருத்துவர்களை நியமிக்க வேண்டிய அவசியம் தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2008 மே 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் உயிரைக் காப்பது மருத்துவமனையாகும். அந்த மருத்துவமனையைக் காப்பது நமது கடமையாகும். காஞ்சிபுரம் அரசுத் தலைமை மருத்துவமனைக்கு தினமும் 5,000 முதல் 6,000 வரை கிராம மக்கள் சுற்றியுள்ள நான்கு மாவட்டங்களிலிருந்தும், செய்யாறு, வந்தவாசி, பனப்பாக்கம், நெமிலி, சுங்குவார்சத்திரம் போன்ற இடங்களிலிருந்தும் சிகிச்சை பெறுவதற்கு வருகின்றனர். இவர்களுக்கு சிகிச்சையளிக்க போதிய மருத்துவர்கள் இல்லை, மற்றும் செவிலியர்களும் இல்லை. மருத்துவமனையைச் சுகாதாரமாக வைத்திருப்பதற்குப் போதுமான துப்புரவுப் பணியாளர்கள் இல்லை. இம்மருத்துவமனையில் 1986 ஆம் ஆண்டில் 67 மருத்துவர்கள் பணிபுரிந்து வந்தனர். ஆனால் தற்போது 27 மருத்துவர்கள்தான் பணிபுரிகின்றனர். அதிலே பொது மருத்துவத்திலே M.D. — J.D. என அவர் ஒருவர்; ஒரு மாதம் ஆகிறது; அவரை நான் பார்த்ததேயில்லை. நான் நான்கு முறை போயிருக்கிறேன்; அவரைப் பார்த்ததில்லை. அறுவை சிகிச்சை மருத்துவர்கள் தலைமை மருத்துவமனையில் 4 பேர் இருந்தார்கள்; 3 பேர் போய்விட்டார்கள், ஒருவர் இருக்கிறார். உதவி மருத்துவர்கள் 25 பேர், இதிலே CEmONC திட்டத்திலே கீழ்க்கண்ட மருத்துவர்கள் 8 பேர் பணிபுரிகின்றனர். மகப்பேறு மருத்துவர்கள் 3 பேர், மயக்க மருத்துவர்கள் 2 பேர், குழந்தை மருத்துவர்கள் 3 பேர், மீதமுள்ள மருத்துவர்கள் 17 பேர். அவசர சிகிச்சைப் பிரிவில் 4 பேர், நோயாளிகள் வெளிப் பிரிவிலே 4 பேர் மீதமுள்ள 9 மருத்துவர்கள், அறுவை சிகிச்சைப் பிரிவில் உள்ளனர். உள் நோயாளிகள் பிரிவு, விபத்துகள் பிரிவு ஆகியவற்றில் பணிபுரிய போதுமான மருத்துவர்கள் இல்லை. மருத்துவர்கள் இல்லாத காரணத்தால் மருத்துவமனைக்கு சிகிச்சைபெற வரும் நோயாளிகள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மாத்திரம் கேளுங்கள். பெரிய அறிக்கை எழுதி வாசித்தீர்களானால் எப்படி?

**திருமதி பெ. கமலாம்பாள்:** அதனாலே இப்போது, 1986 ஆம் ஆண்டிலே 40 மருத்துவர்கள் குறைக்கப்பட்டனர். மருத்துவமனையிலே காலியிடங்கள் இல்லை, காலியிடங்கள் இல்லை என்றால், அவை எப்படிப் போனது? அந்த 40 பேர் எப்படிப் போனார்கள்? திரும்ப அந்த 40 பேரைப் போட்டு காலியிடங்களை நிரப்ப வேண்டுமாய்ப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

[2008 மே 12

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் அரசுத் தலைமை மருத்துவமனையில் 11 முதுநிலை மருத்துவர்களில், உள்ளிருப்பு மருத்துவர்கள் உட்பட 5 முதுநிலை மருத்துவர் பணியிடங்கள் மட்டும் காலியாக உள்ளன. அப்பணியிடங்கள் யாவும் பதவி உயர்வின்மூலமாக நிரப்பப்பட வேண்டும். எனவே, அப்பணியிடங்கள் யாவும் பதவி உயர்வின்மூலம் விரைவில் நிரப்பப்படும். மேலும் 31 உதவி மருத்துவர் பணியிடங்களில் 28 மருத்துவர்கள் தற்போது பணிபுரிந்து வருகின்றனர். மீதமுள்ள 3 உதவி மருத்துவர் பணியிடங்களும் கடந்த மாதம் உயர் கல்வி பயிலச் சென்றதன் காரணமாக காலியாக உள்ளன. அப்பணியிடங்களுக்கு, இப்போது தேர்வாணையத்தின்மூலமாக 127 மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட இருக்கின்றனர்; அப்போது இதுபோன்ற காலியான இடங்கள் கண்டிப்பாக நிரப்பப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, இந்த மருத்துவமனையில் படுக்கை வசதிகள் 409 இருக்கின்றன. நாள் ஒன்றுக்குப் புற நோயாளிகளாக 2,242 பேரும், உள் நோயாளிகளாக 302 பேரும் அனுமதிக்கப்படுகின்றனர்; மாதம் ஒன்றுக்கு 423 பிரசவங்களும் நடைபெறுகின்றன; பெரிய அறுவை சிகிச்சைகள் 300 நடைபெறுகின்றன; சிறிய அறுவை சிகிச்சைகள் 505 நடைபெறுகின்றன. ஆக, மொத்தமுள்ள பணியிடங்களைப் பொறுத்தவரையில் ஓரிரு மருத்துவப் பணியிடங்கள்தான் தற்போது காலியிடங்களாக உள்ளன. வெகு விரைவில் தேர்வாணையத்தின்மூலமாக 127 மருத்துவர்கள் ஒரு வாரத்தில் நியமனம் செய்யப்பட இருக்கிறார்கள். அந்த நேரத்தில் காலியாக உள்ள பணியிடங்கள் நிரப்பப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த உறுப்பினர் நேராகவே பல தடவை என்னைக் கேட்டிருக்கிறார். பல புதிய பணியிடங்கள், காலியாக இருந்ததையெல்லாம் பூர்த்தி செய்திருக்கிறோம். ஒரு சில மருத்துவர்கள் குறைவாக இருப்பதைப் பெரிதுபடுத்தவேண்டாம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 9–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள்.



2008 மே 12]

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எது எப்படியோ, எனக்குத் தெரியாது. அந்த 40 மருத்துவர்களை உடனடியாக, அவசரமாக நியமிக்கவேண்டும். ஏனென்றால், அந்த மருத்துவமனை மிகவும் வெறிச்சோடிப் போய், மிகக் கேவலமாக, அருவருப்பாகக் காட்சி அளிக்கிறது. அதனாலே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடனடியாக அன்பு கொண்டு, கருணை கொண்டு, அன்போடும், பணிவோடும், அந்தத் துறை சார்ந்த அமைச்சர் அவர்கள் உடனடியாக அங்கே வருகை தந்து, அதைக் கவனிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அதுதவிர, காஞ்சிபுரம் அருகே, சென்னை–பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் அடிக்கடி விபத்து ஏற்படுகிறது; நீங்கள் பேப்பரில் செய்திகளை எல்லாம் நிறைய பார்க்கிறீர்கள். ஆனால், அந்த மருத்துவமனையில் ஒரு கருவியும் இல்லை; M.R.I. Scan, Ultra Sound Scan கருவி போன்ற எந்தவொரு கருவியும் இல்லை. பெரிய அரசாங்க மருத்துவமனைகளில் முதல் மருத்துவமனையாகக் காஞ்சிபுரத்திலே அது இருக்கிறது. ஆனால், கருவிகள் ஒன்றுமே இல்லை. அவை எங்கெங்கோ பரவலாகப் போய்விட்டன. அந்தக் காஞ்சிபுரம் மருத்துவமனையை யாருமே கண்டு கொள்வதில்லை என்று தெரிவித்து, சீக்கிரமாகக் காஞ்சிபுரம் மருத்துவமனையைக் கண்டுகொள்ள வேண்டுமென்று அன்போடும், பண்போடும் கேட்டுக்கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையிலே, 12 மாவட்டங்களில் உள்ள மருத்துவமனைகளுக்கு M.R.I. Scan கருவி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில், காஞ்சிபுரம் மருத்துவமனைக்கும் M.R.I. Scan கருவி வெகு விரைவில் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. ஜெயராமன்.

**திரு. எஸ்.பி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தவாசி தொகுதியில் அரசினர் மருத்துவமனையில் 76 படுக்கைகள் உள்ளன. தினமும் நோயாளிகளாக அண்[illegible] 300 பேர்,



தமிழ்நாடு [illegible] காப்பகம்
228413
சென்னை-600 008

[2008 மே 12

பெண்கள் 300 பேர், குழந்தைகள் 400 பேர் என ஆகமொத்தம் 1,000 பேர் வருகின்றனர். ஒரு மாதத்தில் பிரசவத்திற்காக 100 முதல் 150 பேர் வருகின்றனர்; விஷம் அருந்தியவர்கள் 30 பேர் வருகின்றனர்; மருத்துவச் சான்றிதழ் பெற 200 பேர் வருகின்றனர்; பலர் விஷ ஜந்துக்களால் பாதிக்கப்படுகின்றனர்; 50 பேர் சாலை விபத்தில் காயமடைகின்றனர். இம்மருத்துவமனையை நம்பி 300 கிராமங்கள் உள்ளன. பெரணமல்லூர் தொகுதி, வந்தவாசி தொகுதிக்கு ஒரேயொரு மருத்துவமனை இருப்பதால் ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.பி. ஜெயராமன், என்ன வேண்டுமென்று கேளுங்கள். அதைவிட்டுவிட்டு, இத்தனை இத்தனை நோயாளிகள் வருகிறார்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள்.

**திரு. எஸ்.பி. ஜெயராமன்:** ஒரேயொரு நிமிடம். இப்படி இருப்பதால் இந்த மருத்துவமனைக்கு அதிக அளவில் நோயாளிகள் வருகின்றனர். இந்த மருத்துவமனைக்குப் பரிந்துரையின்படி, சுமார் 50 புற நோயாளிக்கு ஒரு மருத்துவர் என்ற அடிப்படையில், 16 மருத்துவர்கள் தேவைப்படுகின்றனர். ஆனால், இப்போது அங்கீகரிக்கப்பட்ட மருத்துவர்கள் 4 பேர் மட்டுமே இருக்கின்றனர். மேலும், மருத்துவர்களைக் கூடுதலாகத் தந்து, இந்த மருத்துவமனையில் நோயாளிகளின் நோய் தீர்க்க உதவிடுமாறு கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியில் மருத்துவர் பணியிடங்கள் காலியாக இருந்தன. தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சி பொறுப்பேற்ற இந்த 2 ஆண்டுக் காலத்தில் வெகுவாக பல மருத்துவமனைகளில் பல மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். மொத்தமுள்ள 9,890 மருத்துவர்களில், தற்போது 9,337 மருத்துவர்கள் நியமிக்கப்பட்டு, 553 மருத்துவர் பணியிடங்கள்தான் காலியாக உள்ளன. தமிழகத்தில் செயல்படும் பொதுச் சுகாதாரத் துறை, மருத்துவம் மற்றும் ஊரகப் பணிகள் துறை, மருத்துவக் கல்வித் துறை ஆகிய மூன்று துறைகளில் உள்ள மொத்தப் பணியிடங்களில் காலியாக உள்ளவை 553. வெகு விரைவில் இந்தக் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2008 மே 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 244, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**244—**

## உண்டு உறைவிடம்

***32633—டாக்டர் க. நெடுஞ்செழியன்**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரமத்தி ஒன்றியத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவ, மாணவியர் உண்டு உறைவிடம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பரமத்தி ஒன்றியத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவ/மாணவியர் விடுதி தொடங்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கபிலர்மலை தொகுதி, பரமத்தி ஒன்றியத்திலே அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகள் 5 இருக்கின்றன; நடுநிலைப் பள்ளிகள் 8-க்கும் மேல் இருக்கின்றன; பொறியியல் கல்லூரி ஒன்று இருக்கிறது; கலைக் கல்லூரி ஒன்று இருக்கிறது; ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் எல்லாம் இருக்கின்றன. அந்தப் பகுதியிலே மாணவர் அல்லது மாணவியர் விடுதியைக் கட்டித் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

[2008 மே 12

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே இந்த மாணவர் விடுதி தொடங்க வேண்டியது அவசியம் என்று அரசுக்குத் தெரிகிறது. ஆகவே, வருங்காலங்களிலே இதற்கு ஒரு முன்னுரிமை வழங்கி, அவசியம் செய்து கொடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கபிலர்மலை தொகுதியில் 15-க்கும் மேற்பட்ட அரசு மேல்நிலைப் பள்ளிகளும், 4 அரசு உதவி பெறும் நடுநிலைப் பள்ளிகளும், 2 அரசுக் கலைக் கல்லூரிகளும், ஒரு பொறியியல் கல்லூரியும் இருக்கின்றன. என்னுடைய தொகுதியில் ஒரு இடத்தில்கூட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதியோ அல்லது மாணவியர் விடுதியோ இல்லை. கடந்த ஆண்டு, அந்த மாவட்டத்திலிருந்து பரிந்துரை செய்யப்பட்டது. ஆனால், சென்ற ஆண்டு இருந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு அளிக்க மனமில்லை. அதனால் பெரிய மனம் படைத்த பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு...

முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. நெடுஞ்செழியன், இந்த தடவைதான் செய்து தருகிறேன் என்று சொல்லிவிட்டார் அல்லவா? திரும்பவும் இப்போது ஏன் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள்?

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** போன தடவை கொடுக்கவில்லை. போன தடவை கொடுக்காததால்தான் கேட்டேன். அதனால், இந்த தடவை, பெரிய மனது படைத்த மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் அதனை வழங்க ஆவன செய்வாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமத்தி ஒன்றியத்திலே இந்த விடுதி இல்லை என்பதைத் துணைக் கேள்விக் குறிப்புகளில் எங்களுக்கு



2008 மே 12]

வழங்கியிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பகுதியின் அவசியத்தை அரசு உணர்ந்திருக்கிறது. அரசு கனிவோடு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 245, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வீ. ராமநாதன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**245—**

## நூலகம்

***1667—திரு. கே.வீ. ராமநாதன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி தொகுதி, குறிச்சி ஊராட்சி, செம்படபாளையத்தில் நூலகம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, குறிச்சி ஊராட்சி, செம்படபாளையத்தில் நூலகம் அமைப்பது தொடர்பாகக் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பவானி தொகுதிக்கு உட்பட்ட குறிச்சி ஊராட்சியில், செம்படபாளையம் என்பது ஒரு கிராமப் பகுதியாகும். இதைச் சுற்றியுள்ள கிராமங்களிலே இருக்கின்றவர்கள், விவசாய வேலை பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, அந்தப் பகுதியிலே படித்த இளைஞர்கள் நிறைய பேர் இருப்பதால், செம்படபாளையம் கிராமத்திலே ஒரு நூலகம் ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் விசாரித்தவரையில் செம்படபாளையத்தில் இந்த ஆண்டு அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ், புதிதாக நூலகம் ஒன்று அமைக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. எனவே, அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் அங்கே நூலகம் அமைக்கப்படக்கூடிய காரணத்தினால், பொது நூலகத் துறையின் சார்பில் இன்னொரு நூலகம் அங்கே அமைப்பதற்கு அவசியம் எழவில்லை என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போன்று, அங்கு அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் கட்டட வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நான் ஏற்கெனவே இந்தக் கேள்வியைக் கடந்த காலத்திலே, கடந்த கூட்டத் தொடரின்போது எழுப்பியிருந்தேன். இப்போது அதற்கான வேலை நடந்துகொண்டிருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மீண்டும் அந்த நூலகத்திற்குத் தேவையானவற்றை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தரவேண்டுமெனத் தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூலகத் துறையிலே, புதிய நவீன உத்திகளைப் புகுத்தி, மாணவர்கள் நூலகத்திற்குச் செல்லுகிற நிலைமை வந்திருக்கின்றது. அதேநேரத்திலே, பல நவீன உத்திகள் வந்ததன் காரணமாக, மாணவர்களிடையே சில தவறான நோய்களும் வந்துகொண்டிருக்கின்றன என்று செய்திகள் வருகின்றன. Dyslexia என்று சொல்லப்படுகின்ற, தவறாக வாசிக்கின்ற பழக்கம், 'M' என்ற எழுத்தை 'W' என்று வாசிப்பதும், 'W' என்ற எழுத்தை 'M' என்று வாசிப்பதுமாக இருக்கின்ற பல்வேறு மன ரீதியான நோய்கள் வருவதாகச் செய்திகள் வந்தவண்ணம் இருக்கின்றன. அத்தகைய மாணவர்களைப் பள்ளிகளிலே அவர்கள் fail ஆக்கிவிடுகிறார்கள் என்ற கருத்தும் வந்திருக்கிறது. இதுகுறித்து அரசு ஏதாவது நடவடிக்கை





எடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். அதேநேரத்திலே, இத்தகைய மாணவர்களை முன்னேற்றுவதற்காக—'Tare Zameen Par' என்ற திரைப்படம்கூட நம்முடைய மதிப்பிற்குரிய நடிகர் அமீர்கான் அவர்கள் நடித்து வெளிவந்திருக்கிறது; ஆகவே—இதிலே ஒரு சிறப்புக் கவனம் செலுத்தி, அரசு ஆவன செய்ய முற்படுமா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், அண்ணன், டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்கள் சொல்வது, உள்ளபடியே ஒரு முக்கியமான பிரச்சினை. பல மாணவர்களுக்கு இன்றைக்கு இந்த Dyslexia பிரச்சினை இருப்பது கண்டறியப்பட்டிருக்கிறது. அதிலே, அவர் குறிப்பிடுவதைப்போல, படிக்கிறபோது ஒரு எழுத்தை மாற்றிப் படிக்கக்கூடிய அந்தச் சூழ்நிலையைத் தவிர, எழுதுகிறபோது மற்ற மாணவர்களைப்போல, சராசரி மாணவர்களைப்போல அவர்களாலே விரைவாக எழுதவும் முடியாது. இந்த மாணவர்கள் பரீட்சையிலே எழுதுகிறபோது அவர்களுக்கு இருக்கக்கூடிய சிரமத்தைக் கருதிதான், அரசு இத்தகைய Dyslexia இருக்கக்கூடிய மாணவர்களுக்குப் பரீட்சையின்போது எழுதுவதற்குத் தனியாக சில சலுகைகளை இப்போது வழங்கிக்கொண்டு வருகிறது. இருந்தாலுங்கூட, படிக்கக்கூடிய பள்ளி வகுப்பறைகளிலே இத்தகைய மாணவர்களை இனம் காணக்கூடிய அந்த மிகப் பெரிய பொறுப்பு, ஆசிரியர்களுக்கும் இருக்கிறது. அப்படி இனம் காணக்கூடிய அந்த மாணவர்களுக்குச் சிறப்பான வகையிலே பயிற்சியினையும் அளித்து, அவர்களையும் inclusive–ஆக—ஏற்கெனவே படித்துக்கொண்டிருக்கக்கூடிய பிள்ளைகளிடமிருந்து அவர்களை discriminate செய்துவிடாமல், inclusive–ஆக—செய்யக்கூடிய அதேவேளையில் அந்தக் குழந்தைகளைச் சரியான முறையிலே இனம் கண்டு, அவர்களுக்கு அந்தக் குறைபாட்டினை நீக்கக்கூடிய வகையில், சிறப்பாசிரியர்களை நியமிக்க வேண்டுமென்பதும், அதுகுறித்து வரக்கூடிய கல்வியாண்டிலே ஒரு கருத்தாய்வினை நடத்த வேண்டுமென்பதும், அரசினுடைய பரிசீலனையில் இப்போது இருக்கிறது. அது ஒரு மிக முக்கியமான பிரச்சினை. வரக்கூடிய ஆண்டுகளில் நாங்களும், குறிப்பாக நம்முடைய சமூக நலத் துறையினுடைய அமைச்சர், மாண்புமிகு டாக்டர் திருமதி பூங்கோதை அவர்களும் இதுகுறித்த கவனத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். எனவே,

[2008 மே 12

இரண்டு துறைகளினுடைய சார்பிலும் ஒரு கூட்டத்தைக் கூட்ட ஏற்பாடு செய்யப்பட்டு, நம்முடைய மாணவர்களின் இந்தக் குறைகளை விரைவிலே களைவதற்கு அரசு உரிய வகையிலே ஆலோசனைகளை மேற்கொள்ளவிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *246*, திரு. டி. செங்குட்டுவன், மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**246—**

**சோதனைச் சாவடி**

***28272—திரு. டி. செங்குட்டுவன்:**

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், அத்திப்பள்ளி சோதனைச் சாவடியை நவீனமயமாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா, வணிக வரித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அத்திப்பள்ளியில் வணிக வரித் துறையின் சோதனைச் சாவடி எதுவும் இல்லை. எனவே மேற்படி சோதனைச் சாவடியை நவீனமயமாக்குதல் என்ற கேள்வி எழவில்லை.

*முற்பகல் 10–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வியிலே அத்திப்பள்ளியை ஒட்டியிருக்கிற ஜுஜுவாடி சோதனைச் சாவடி என்றுதான் நான் கொடுத்திருந்தேன். ஆனால் அது தவறுதலாக அத்திப்பள்ளி சோதனைச் சாவடி என்று வந்திருக்கிறது.



2008 மே 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக–கர்நாடக எல்லையில் அமைந்துள்ள அந்த ஜுஜுவாடி சோதனைச் சாவடி என்பது மிகப் பெரிய சோதனைச் சாவடியாகும். சென்னை–பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் நான்கு வழிப் பாதையிலே அமைந்துள்ளது. ஒரு நாளைக்கு, இரவு பகலிலே, சுமார் *3,000* வாகனங்களுக்குமேல் மேற்படிச் சோதனைச் சாவடி வழியாகச் சென்று வந்து கொண்டிருக்கின்றன. மேற்படி சோதனைச் சாவடியிலே வட்டாரப் போக்குவரத்து சோதனைச் சாவடி அலுவலகங்கள் *2;* வணிக வரித் துறை சோதனைச் சாவடி அலுவலகங்கள் *2;* வனத் துறை சோதனைச் சாவடி அலுவலகம் *1;* காவல் துறை சோதனைச் சாவடி அலுவலகம் *1;* கால்நடைத் துறை சோதனைச் சாவடி அலுவலகம் *1*. ஆக மொத்தம் *7* அலுவலகங்கள் அங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஒரு வாகனம் மேற்படி சோதனைச் சாவடியைக் கடந்துச் செல்ல வேண்டுமென்று சொன்னால், ஐந்தாறு அலுவலகங்ககளிலே கையெழுத்து இட்டுவிட்டுத்தான், சோதனைக்கு ஆட்படுத்தபட்டுத்தான் செல்ல வேண்டும். ஒவ்வொரு வாகனமும், மேற்படி அந்த இடத்திலிருந்து வெளியிலே வரவேண்டுமென்று சொன்னால் குறைந்தபட்சம் *30* நிமிடங்கள் நிற்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அப்படி *30* நிமிடங்கள் நிற்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறபோது பெரும்பாலான வாகனங்கள் அதிகமாக அங்கே நின்றுவிடுகிற காரணத்தால் மிகப் பெரிய ஒரு போக்குவரத்துப் பாதிப்பு ஏற்படுகிறது. அதனாலே நோயாளிகள், அரசு அலுவலர்கள், பள்ளி மாணவர்கள் உள்ளிட்ட பல்வேறு மக்கள்—அவசரக் காரியங்களுக்குச் செல்லக்கூடிய அந்தப் பொதுமக்கள் எல்லாம்—மிகுந்த சிரமத்திற்கு ஆளாக வேண்டிய ஒரு காலக்கட்டம் இருக்கிறது. ஆக, அந்தச் சோதனைச் சாவடியை ஒரு நவீனமயமான சோதனைச் சாவடியாக மாற்றி, ஒரு கணினிமயமாக்கப்பட்ட சோதனைச் சாவடியாக மாற்றுவதற்குண்டான ஏற்பாடுகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. செங்குட்டுவன், நீங்கள் கொடுத்த கேள்வியிலே அப்படித்தான் இருக்கிறது. "கிருஷ்ணகிரி மாவட்டம், கர்நாடக எல்லையில் உள்ள அத்திப்பள்ளி வணிக சோதனைச் சாவடியை நவீனமயமாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?" என்று, அப்படித்தான் கேட்டிருக்கிறீர்கள். வேறு மாற்றி இவர்கள் type அடிக்கவில்லை. மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

[2008 மே 12

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்திப்பள்ளியின் அருகில் உள்ள ஓசூர், ஜுஜுவாடி சோதனைச் சாவடிக்குத் தற்போது 3 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அங்குள்ள போக்குவரத்து நெருக்கடி நிலைமைகளைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அவற்றைப் போக்குவரத்துத் துறையின் உதவியோடுதான் வணிக வரித் துறை செய்திட முடியும். போக்குவரத்துத் துறை, தற்போது குஜராத் மாநிலத்திலே உள்ள நிலையைப் போல, அதைத் தரம் உயர்த்தி நவீனப்படுத்த 200 கோடி ரூபாய் வேண்டுமென்று கண்டு, அதிலே இந்த ஆண்டு 70 கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பதாக நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் தகவல் தெரிவித்துள்ளார்கள். எனவே, அவ்வசதிகளை இணைத்துக்கொண்டு வணிக வரித் துறை, தன்னுடைய அந்தச் சோதனைச் சாவடியையும் நவீனப்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தினுடைய எல்லையிலே இருக்கக்கூடிய ஜுஜுவாடியை ஒட்டியிருக்கக்கூடிய கர்நாடக எல்லையிலே அமைந்திருக்கக்கூடிய அத்திப்பள்ளி சோதனைச் சாவடியிலே வரிசையாக கவுண்டர்களைத் திறக்கச் செய்து, ஐந்தாறு அலுவலகங்களும் ஒன்றாகச் செயல்படக்கூடிய அளவிற்கு ஒரு scanning சிஸ்டத்தை உருவாக்கி இருப்பதன்மூலமாக அங்கே எந்தவிதமான போக்குவரத்து இடைஞ்சலும் ஏற்படாமல் அந்த வாகனங்கள் எல்லாம் சென்றுவிடுகின்றன. அதுமட்டுமல்ல; நம்முடைய எல்லையில் வாகன நெரிசல் ஏற்படுகிற காரணத்தினால், சில கடத்தல் பேர்வழிகள் அந்த வாகன நெரிசலைப் பயன்படுத்திக்கொண்டு அங்கே போய் அந்த இடத்தில் இருக்கக்கூடிய, scanning சிஸ்டத்திற்குப்போய், அங்கே மாட்டிக்கொண்டு அதன்மூலமாக அங்கே கட்டப்படுகிற வரியெல்லாம் அந்த மாநிலத்திற்குச் சென்றுவிடுகிற காரணத்தினால் அந்த scanning சிஸ்ட வசதியை, நம்முடைய எல்லையிலே அமைந்திருக்கிற ஜுஜுவாடி சோதனைச் சாவடியிலே அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை அறிய விரும்புகின்றேன். (குறுக்கீடு)



2008 மே 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே எடுத்துக்காட்டியதைப்போல, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், கேரள மாநிலம், கர்நாடக மாநிலம், ஆந்திர மாநிலம், பாண்டிச்சேரி அந்த நான்கு மாநில எல்லைகளிலும், அதிநவீனமான முறையிலே ஒரு சோதனைச் சாவடி அமைக்கப்பட வேண்டுமென்று சொன்ன அந்தக் கருத்துரு எழுப்பப்பட்டு, அதிலே முதல் கட்டமாக ஓசூரில் இருக்கின்ற சோதனைச் சாவடியையும், கந்தன்சாவடியில் இருக்கின்ற சோதனைச் சாவடியையும் களியக்காவிளையில் இருக்கின்ற சோதனைச் சாவடியையும் இந்த ஆண்டு எடுத்து அதற்காக 70 கோடி ரூபாய் செலவு செய்து தேசிய நெடுஞ்சாலையிடம் ஒப்படைத்திருக்கிறோம். இன்றைக்கு அந்த நிலத்தைக் கையகப்படுத்தித் தரச் சொல்லி அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல, ஓசூரிலிருந்து வருகின்றபோது, அங்கிருந்து வருகின்ற வண்டிகளையெல்லாம் அவர்கள் பரிசோதனை செய்வதைப்போல, நாம் பரிசோதிக்க, இங்கிருந்து வண்டிகள் செல்கின்றபோது, அந்த மாநிலத்தில், அவர்கள் இருக்கின்ற இடத்திலே நாமும் இடம் வைத்துக்கொண்டு, நமக்கு வரவேண்டிய வரியை வசூலிப்பதற்காக, கர்நாடக மாநிலத்தோடு பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறோம். எனவே, கர்நாடக மாநிலத்திற்கும் நம்மிடத்திலே இடம் தருகிறோம். நாமும் அவர்களுக்கு இடம் தந்து, நமக்கு வரவேண்டிய வரியையும் உடனடியாக வசூல் செய்வதற்கான முறையை இந்த ஆண்டு கொண்டுவந்திருக்கிறோம்.

*முற்பகல் 10–10*

*(மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவையினுள் நுழைந்தபோது, உறுப்பினர்கள் மேசையைத் தட்டி பலத்த ஒலியெழுப்பினர்.)*

மேலும், நம்முடைய சோதனைச் சாவடிகளின் ஒவ்வொருபுறமும் ஐந்து லைன்களாக, அகலம் உள்ளதாக அமைக்கப்பட இருக்கிறது. எனவே, போக்குவரத்து நெரிசல் இல்லாத அளவிற்கு அந்த சோதனைச் சாவடிகள் உருவாக்கப்படும். அப்போது வணிக வரித் துறையையும் அதிலே இணைத்துக்கொள்வோம். ஒருங்கிணைந்த சோதனைச் சாவடியாக—Integrated—அது அமையும்.

[2008 மே 12

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 247, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**247—**

**வருமான வரம்பு**

***18738—திரு. ஞா. ஜாண் ஜோசப்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முதியோர், விதவை, ஊனமுற்றோர் மற்றும் ஆதரவற்றோர் ஓய்வூதியத்திற்கான வருமான வரம்பை உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆதரவற்ற முதியோர், உடல் ஊனமுற்றோர், விதவைகள், விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் கணவரால் கைவிடப்பட்ட பெண்கள் ஆகியோர் மாத உதவித் தொகை பெறுவதற்கு வருமான உச்சவரம்பு ஏதும் நிர்ணயம் செய்யப்படவில்லை. எனவே வருமான வரம்பு உயர்த்துதல் பற்றிய வினாவிற்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருமான வரம்பு நிர்ணயிக்கப்படவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளித்திருக்கிறார்கள். இருந்தாலும், இந்த ஓய்வூதியம் வழங்குவதற்கு நான்கு வகையான கடுமையான விதிகள் விதிக்கப்பட்டுள்ளன. எந்தவிதமான ஆதரவும், உதவியும் அந்த மனுதாரருக்கு இருக்கக்கூடாது; அவர் பிச்சையெடுக்கக்கூடாது; 20 வயதுக்குமேலே ஆண் வாரிசு இருக்கக்கூடாது; ஐந்தாயிரம் ரூபாய்க்குமேலே சொத்து இருக்கக்கூடாது என்றெல்லாம் கடுமையான விதிகள் இருக்கின்றன. இந்த விதிகளைத் தளர்த்தவேண்டும். குறிப்பாக, 20 வயதுக்குமேல் ஆண் வாரிசு என்பது, இயல்பான விஷயம். ஆண் வாரிசு இருப்பதை மட்டும் மேலோட்டமாகப் பார்த்து, இதை



2008 மே 12]

வழங்காமல் இருப்பது சரியல்ல. ஒருவேளை, ஆண் வாரிசு மாணவனாக இருக்கக்கூடும்; அல்லது, earning member–ஆக இல்லாமல் இருக்கக்கூடும்; அல்லது, அவர் ஏழ்மையில் இருக்கக்கூடும்; இத்தகைய சூழ்நிலையில், அவர் நினைத்தால்கூட அவரது பெற்றோரை, அந்த முதியவரைப் பாதுகாக்க முடியாத பொருளாதார நிலையில் அவர் இருக்கக்கூடும்; இத்தகைய சூழ்நிலையில், இந்த விதிகளைத் தளர்த்தி, ஓய்வூதியம் வழங்குவதுடன், ஐயாயிரம் ரூபாய்க்குக் கீழே ஆஸ்தி இருக்க வேண்டும் என்ற நிபந்தனையை குறைந்தபட்சம் 25 ஆயிரம் ரூபாய் என்ற முறையில் மாற்றி, ஓய்வூதியம் வழங்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்வாயிலாக, ஐந்து வகையான உதவித் திட்டங்கள் உள்ளன. அதில் முதியோர் உதவித் தொகைக்கான திட்டம், மத்திய அரசுடன் இணைந்து செயல்படுத்தப்படுகின்ற ஒரு திட்டமாகும். அத்திட்டத்தில் பயன்பெறுவோர்கள், மத்திய அரசின் பரிந்துரைகளின்படி உதவித் தொகையைப் பெறுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏனைய திட்டங்களான, ஊனமுற்றோர் உதவித் தொகை, விதவை உதவித் தொகை, விவசாயக் கூலித் தொழிலாளர்கள் உதவித் தொகை, கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கான உதவித் தொகை ஆகியவை முழுக்க முழுக்க மாநில அரசின் நிதியின்மூலமாகச் செயல்படுத்தப்படுகின்ற திட்டங்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தங்களுடைய கருத்துகளை இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இதுகுறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் கலந்தாலோசித்து, நிச்சயமாக இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதவைகளுக்கான ஓய்வூதியத்தைப் பொறுத்தமட்டில், 40 வயதிற்கு மேலேயிருந்தால்தான் அந்த ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. ஒருவர் எப்போது விதவையாவார் என்பது, யாருக்கும் நிச்சயமில்லாத ஒரு

[2008 மே 12

விஷயம் என்ற முறையில், பெண்கள் எப்போது விதவையானாலும், எந்த வயதில் விதவையானாலும், அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதவைகளுக்கு வயது வரம்பு ஏதுமில்லை என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. தங்கமணி.

*முற்பகல் 10–15*

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகுதியான நபர்கள் விடுபட்டு, இடைத் தரகர்கள்மூலமாக தகுதியற்ற நபர்கள் பயனாளிகளாக வந்துவிடுகிறார்கள். அதுமட்டுமல்லாமல், மாதந்தோறும் பார்த்தீர்களேயானால், வயது முதிர்ந்தவர்கள் அந்தப் பணம் வந்தால்தான் அவர்களுடைய வாழ்க்கையை நடத்துகின்ற நிலையில் இருக்கிறார்கள். தபால் அலுவலகத்திலேயிருந்து வருகின்ற பணம் முறைகேடு செய்யப்பட்டு, எப்படிப் பார்த்தாலும் வருடத்தில் இரண்டு மாதங்களாவது அவர்களுக்கு வந்து சேருவதில்லை. அதை ஆய்வு செய்வதற்கு அரசிடம் திட்டம் எதுவும் உள்ளதா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதவித் தொகையைச் சரியாக வழங்குவதற்கு எல்லா வகையிலும் இந்த அரசு சிறப்பாகச் செயல்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம் ஒரு விவரத்தைக் கூற விரும்புகிறேன். எனது தொகுதிக்குட்பட்ட ஆலங்குளம் தொகுதியில், கடந்த ஆட்சியில் விதவைகள் என்று கூறி மணமான பெண்களுக்கு உதவித் தொகை வழங்கியது உங்கள் அரசு என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.



2008 மே 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊனமுற்றோருக்கான உதவித் தொகை என்பதற்கு ஒரு வருமான வரம்பை நாம் நிர்ணயித்திருக்கிறோம். ஆனால், பொதுவாக ஊனமுற்றவர்கள் சற்று வசதியான வீடுகளில் இருந்தால்கூட, பெற்றோராலும், உடன் பிறந்தோராலும் புறக்கணிக்கப்பட்டு, தங்களுடைய வாழ்வில் எந்தவிதமான பயனும் இல்லையென்கிற ஒரு தாழ்வு மனப்பான்மையோடு வாழ்கிறார்கள். எனவே, ஊனமுற்றோருக்கான வருமான வரம்பை முழுமையாகத் தளர்த்தி, ஊனமுற்றோர் எல்லோருக்கும் உதவித் தொகை வழங்குவதன்மூலம் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.70 கோடி ரூபாய்தான் தேவைப்படும் என்று நான் அறிகிறேன். எனவே, தமிழகத்திலே இருக்கின்ற ஊனமுற்றோர் அனைவருக்கும் வருமான வரம்பைப்பற்றிக் கவலைப்படாமல் ஓய்வூதியம் வழங்குவதற்கு அரசு முன்வருமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊனமுற்றவர்களாக இருந்தாலும், முதியவர்களாக இருந்தாலும், விதவைகளாக இருந்தாலும், அரசாங்கத்தினுடைய உதவியினால்தான் அவர்கள் வாழ்க்கையை நடத்த முடியும் என்ற நிலையிலே உள்ளவர்களுக்குத்தான் இந்த உதவி வழங்கப்பட வேண்டுமே தவிர, எல்லோருக்கும் வழங்குவது என்று சொல்வது, அந்தக் குறிக்கோள், நோக்கத்தையேகூட தவறான முறையில் கருத இடம் தரும். வசதியுள்ளவர்கள்கூட இந்த உதவித்தொகையைப் பெறக்கூடிய ஒரு நிலைமையையும் ஏற்படுத்தும். எனவே, அது தேவைப்படவில்லை. மாறாக, அரசாங்கம் பாதிக்கப்பட்டவர்களை ஆதரிப்பதற்காகத்தான் இந்தத் திட்டத்தை மேற்கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர், விதவைகள், ஊனமுற்றோர் மற்றும் ஆதரவற்றோர், இவர்களுக்கான உதவித் தொகை வேண்டி மாவட்டத்தில் இருக்கின்ற சமூக நலத் துறை அலுவலர்களை அணுகுகின்றபோது, அவர்கள்

கொடுக்கின்ற மனுக்களின்மீது, ஏன் அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும், ஏன் அவர்களுக்கு அந்தத் தொகை வழங்கப்படவில்லை என்கிற விவரங்களைத் தராமல் இழுத்தடிக்கின்றார்கள். மேலும் சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் பரிந்துரைத்து அனுப்புகின்ற அந்த விவரங்களின் அடிப்படையிலேகூட அவர்களுக்கு வழங்கப்பட்டதா, இல்லையா என்கிற பதில் அறிக்கையை எங்களுக்குத் தர மறுக்கின்றார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அலுவலகத்திற்கு நாங்கள் கடிதம் கொடுத்தால், பதில் வருகிறது; உள் துறைச் செயலாளருக்குக் கடிதம் கொடுத்தால், உள் துறைச் செயலாளர் எங்களுக்குக் கடிதம் எழுதுகிறார். ஆனால், மாவட்டத்திலிருக்கின்ற அலுவலர்கள், சட்டமன்ற உறுப்பினர்களுடைய கடிதங்களுக்குப் பதில் தருவதில்லையென்கிற நிலையை வைத்திருக்கிறார்கள். சமூக நலத் துறையில் அவ்வாறில்லாமல், எதற்காக வழங்குகிறோம், எதற்காக மறுக்கிறோம் என்கிற விவரத்தை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை ஏற்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *248*, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. சின்னதுரை, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**248—**

**கால்நடை மருத்துவக் கல்லூரி**

***26794—திரு. கு. சின்னதுரை:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைவாசல் தொகுதியில் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தலைவாசல் தொகுதியில், கால்நடை மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. சின்னதுரை.

**திரு. கு. சின்னதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தலைவாசல் தொகுதியில் விவசாயிகள் அதிகமாக வசிக்கிறார்கள். மாநிலத்திலே முட்டை உற்பத்தியில் நாமக்கல்லுக்கு அடுத்தபடியாக தலைவாசல் விளங்குகிறது. சுமார் *17* இலட்சம் கோழிகள் உள்ளன. ஒரு நாளைக்கு சுமார் *10* இலட்சம் முட்டைகள் உற்பத்தியாகின்றன. கால்நடைகளைப் பொறுத்தவரையில், இரண்டு இலட்சம் ஆடுகளும், ஒரு இலட்சத்திற்கும் மேல் மாடுகளும் உள்ளன. நாளொன்றுக்கு *1,20,000* லிட்டர் பால் உற்பத்தியாகிறது. மேலும், எனது தலைவாசல் தொகுதியில், தலைவாசல் கூட்டுச் சாலையில் ஆட்டுப் பண்ணைக்குச் சொந்தமான சுமார் *2,000* ஏக்கர் நிலம் உள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பின்தங்கிய தொகுதியான தலைவாசல் தொகுதிக்கு ஒரு கால்நடை மருத்துவமனை அமைத்துத் தருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகத்தில் இரண்டு கால்நடை மருத்துவக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் ஒரு கல்லூரி, தலைவாசல் தொகுதிக்கு அருகிலுள்ள நாமக்கல் மாவட்டத்தில்தான் செயல்பட்டு வருகிறது. ஆகவே, தற்சமயம் தலைவாசல் தொகுதியில் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. சின்னதுரை.

[2008 மே 12

*முற்பகல் 10–20*

**திரு. கு. சின்னதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்திலே இரண்டு இடங்களில் கோழி வளர்ப்புப் பாடப் பிரிவு உள்ளது. அவற்றில் ஒன்று எனது தொகுதியான தலைவாசலில் இருக்கிறது. தலைவாசல் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில், 11 மற்றும் 12 ஆவது வகுப்புகளில் ஏறத்தாழ 100 மாணவர்கள் படிக்கின்றார்கள். வருடத்திற்கு நான்கைந்து மாணவர்கள் பி.வி.எஸ்.சி., வெட்டெரினரி பாடப் பிரிவில் சேர்ந்து படிக்கின்றார்கள். இந்த ஆண்டு மாநிலத்தில் முதல் மூன்று இடங்களைத் தலைவாசல் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி பெற்றுள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாணவர்களின் நலனைக் கருதியும், பொது மக்கள் மற்றும் விவசாயிகளின் நலனைக் கருதியும், கல்லூரியை அமைக்காவிட்டாலும், அந்தக் கால்நடை பயிற்சி மையத்தையாவது, அந்தப் பகுதியில் அமைத்துக் கொடுக்குமாறு தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பல்கலைக்கழகத்தின்மூலம் செயல்படும் கால்நடை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையம் ஒன்று தலைவாசல் தொகுதி பகுதியில் அமைப்பதற்கு அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 249, திரு. ஆர். சின்னசாமி, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**249—**

## பட்டா

***4889—திரு. ஆர். சின்னசாமி:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்காநல்லூர் தொகுதி, வெள்ளக்கிணறு பேரூராட்சியில் 4 மற்றும் 5 ஆவது வார்டில் வசிக்கும் ஆதி திராவிடர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?



2008 மே 12]

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சிங்காநல்லூர் தொகுதி, வெள்ளக்கிணறு பேரூராட்சியில் தகுதியான அரசுப் புறம்போக்கு நிலம் இல்லாத காரணத்தினால், தனியார் நிலங்களைக் கையகப்படுத்தி வீட்டு மனைப் பட்டா வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி.

**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சிங்காநல்லூர் தொகுதியில் வெள்ளக்கிணறு பஞ்சாயத்திலே ஆதி திராவிட மக்கள் அதிகமாக வசிக்கிறார்கள். அவர்களுக்குப் பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டிருந்தேன். அதோடு மட்டுமல்ல; எனது தொகுதியில் அதிகமாக ஆதி திராவிட மக்கள் வசிக்கும் சிங்காநல்லூர் தொகுதி, எஸ்.எஸ். பளூர் ஒன்றியத்திலே, கொண்டயம்பாளையம் பஞ்சாயத்து அண்ணா நகர், களப்பாளையம் பஞ்சாயத்து ஏ.டி. காலனி, வேளாங்குறிச்சி பஞ்சாயத்து அம்பேத்கர் நகர், சரவணப்பட்டி பஞ்சாயத்து ஏ.டி. காலனி, குமரன் நகர் போன்ற பகுதிகளில் அதிக அளவில் ஆதி திராவிட மக்கள் வசித்து வருகிறார்கள். அவர்களுக்கெல்லாம் இலவசப் பட்டா வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கிராமங்களில் வீட்டு மனைப் பட்டா வழங்கிடத் தகுதியான அரசுப் புறம்போக்கு நிலங்கள் இல்லை. இந்தக் கிராமங்கள் கோயம்புத்தூர் நகரினையொட்டியுள்ள பகுதிகள் என்பதால், நிலத்தின் மதிப்பு தற்போது மிகவும் அதிகமாக உள்ளது. இருப்பினும், இந்தக் கிராமங்களில் தனியார் நிலங்களைத் தேர்வு செய்து, நில எடுப்புச் செய்து, வீட்டு மனை கோரும் ஏழையெளிய ஆதி திராவிட மக்களுக்கு, வீட்டு மனைப் பட்டா வழங்கிட உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுமட்டுமல்லாமல்,

[2008 மே 12

கோயம்புத்தூர் மாவட்டத்திலே மட்டும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைமூலமாக 2006–2007–இல் 703 நபர்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. அதேபோல 2007–2008–இல் 909 வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி.

**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் அதிகப்படியான ஆதி திராவிட மக்கள் வசித்து வருகிறார்கள். எனது தொகுதியில் எத்தனைப் பட்டாக்களை வழங்கியுள்ளீர்கள் என்று சொன்னால் எனக்குச் சௌகரியமாக இருக்கும். கோவை மாவட்டத்திலே பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன என்று சொன்னால், எனது தொகுதியிலுள்ள மக்களுக்கு எந்த ஊரிலே எந்த இடத்திலே கொடுத்திருக்கிறீர்கள் என்று சொன்னால், அவர்களிடத்திலே நான் சொல்வதற்கு வசதியாக இருக்கும். அதோடுமட்டுமல்லாமல், எனது தொகுதி காளப்பட்டி பேரூராட்சியிலே, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் இரண்டு ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு ஏழையெளியவர்களுக்குப் பட்டா வழங்கவேண்டுமென்று உத்தரவிட்டிருந்தார்கள். ஆனால், இந்த இரண்டு ஆண்டுகளாகியும் நான் பலமுறை ஆதி திராவிடர் நலத் துறை அதிகாரிகளிடத்திலே கேட்டால் முறையான பதில் வருவதில்லை. இந்தப் பட்டாக்களை வழங்குவதற்குண்டான நடவடிக்கை என்னவாயிற்று என்பதை உங்கள்மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஐந்து வருடங்களாக அந்தப் பகுதியில் பட்டா கொடுக்க முடியவில்லை. ஏனென்று கேட்டால், அந்தப் பகுதி நகர்ப்புறத்தையொட்டியுள்ள பகுதி. அதனால், நிலத்தின் மதிப்பு அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், அங்கே பட்டா வழங்க முடியவில்லை. இருப்பினும் தலைவர் கலைஞர் அரசு, அதற்குரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .



2008 மே 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தருமபுரி சட்டமன்றத் தொகுதியில், தொப்பூர் ஊராட்சி, சந்திரநல்லூர் கிராமத்தில் வாழும் 15–க்கும் மேற்பட்ட ஆதி திராவிட மக்களும், நார்த்தாம்பட்டி ஊராட்சி, காணனூர் கிராமத்தில் வசிக்கும் 30–க்கும் மேற்பட்ட அருந்ததியினக் குடும்பத்தினரும், பாளையம்புதூர் கிராமத்தில் வாழ்ந்து வரக்கூடிய 30–க்கும் மேற்பட்ட அருந்ததிய மக்களும் வீட்டு மனைப் பட்டா இன்றி, சாலையோரங்களில் வாழ்ந்து வருகிறார்கள். அதேபோல, என்னுடைய தொகுதியிலே பல கிராமங்களில் இப்படி அருந்ததிய மக்களும், ஆதி திராவிட மக்களும் வீட்டு மனையில்லாமல் புறம்போக்குப் பகுதிகளிலே வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கிட அரசு ஆவன செய்யுமா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே கையகப்படுத்தப்பட்டு, வீட்டு மனைப் பட்டா வழங்கியும், அவர்களுக்கு இன்று வரை அந்த நிலங்களைப் பிரித்துக் கொடுக்காமல், அங்கே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த நிலங்களைப் பிரித்துக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தருமபுரி உறுப்பினருடைய தொகுதியில் மட்டும் 2006–2007–இல் எஸ்.சி. மக்களுக்கு 185 நபர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோல், எஸ்.டி. இன மக்களுக்கும் 17 நபர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. 2007–2008–இல் தருமபுரியில் அரூர், கொத்தளம்பட்டியில் மட்டும் 15 நபர்களுக்கும், அரூர், அச்சல்வாடியில் 20 நபர்களுக்கும், தருமபுரியில் மணிஹாடாஅள்ளி என்ற இடத்தில் 13 நபர்களுக்கும் வீட்டு மனைப் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. மேலும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2008 மே 12

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன்.

**திரு. அ. ராஜன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய நாகர்கோவில் தொகுதிக்குட்பட்ட, குறிப்பாக, நாகர்கோவில் நகரத்தில் வடசேரி பகுதியில் இருக்கக்கூடிய ஆதி திராவிட மக்கள், ஒழுகினசேரி பகுதியிலே உழவர் Quarters பகுதியில் இருக்கக்கூடிய ஆதி திராவிட மக்கள், நகராட்சியிலே பல ஆண்டுகளாகப் பணியாற்றி வருகிறார்கள். பல ஆண்டுகளாகவே அங்கே வசித்து வருகிறார்கள். எனவே, நாகர்கோவில் பகுதியிலே மட்டும் அல்லாமல், தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய இதுபோன்ற ஆதி திராவிட மக்கள், நகராட்சி, உள்ளாட்சிப் பணியில் இருக்கக்கூடியவர்களுக்கு அந்த இடத்தைப் பட்டா போட்டு வழங்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சியில் பணிபுரியும் நபர்களுக்கு வீட்டு மனைப் பட்டா கேட்கிறார்கள். அதற்கான வாய்ப்புகள் இல்லை. குடிசை மாற்று வாரியத்தின்மூலமாக அவர்களுக்குப் பட்டா வழங்குவதற்கு ஏற்பாடு செய்யலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மற்ற கோரிக்கையை ஏற்று, அங்குள்ள உரிய நபர்களுக்கு வழங்குவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 250, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு.ப. வேலுமணி, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**250—**

## பால் உற்பத்தி நிலையம்

***30631—திரு. சு.ப. வேலுமணி:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2008 மே 12]

(அ) பேரூர் தொகுதி, மதுக்கரை ஒன்றியத்தில் பால் உற்பத்தி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், பேரூர் தொகுதிக்குட்பட்ட மதுக்கரை ஒன்றியம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ள பிரதான பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், தொண்டாமுத்தூர் தொகுதியில் அமைந்துள்ள பிரதான பால் பண்ணைக்கு அருகில் உள்ளதால், கொள்முதல் செய்யப்படும் பால் முழுவதும் ஒன்றியத்திற்கு எடுத்து வரப்பட்டு விற்பனை செய்யப்பட்டுவிடுவதால், பேரூர் தொதிக்குட்பட்ட மதுக்கரை ஒன்றியத்தில் பால் உற்பத்தி நிலையம் அமைப்பதற்குத் தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், பேரூர் தொகுதி, மதுக்கரை ஒன்றியத்தில் எட்டிமடை, குமிட்டிபதி, திருமலையாம்பாளையம், வாளையார், நாச்சிபாளையம், வழுக்குப்பாறை, பிச்சனூர் போன்ற ஊர்கள் கேரள எல்லைக்கு அருகில் அமைந்துள்ளன. இங்கு உள்ள பால் உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்யும் பால், அதிகமாகக் கேரள மாநிலத்திற்குக் கொண்டு செல்லப்படுகிறது. அதைத் தடுக்க, இந்தப் பகுதிகளில் பால் உற்பத்தி நிலையம் அமைக்கவும், அதேபோல, பேரூர், வேடப்பட்டி, தெலுங்குபாளையத்தில் பால் உற்பத்தி நிலையம் அமைக்கவும் இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

[2008 மே 12

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூர் ஒன்றியத்தைப் பொறுத்த அளவில், அந்தப் பகுதியில் உள்ள மொத்த பால் அனைத்தும், பால் உற்பத்தியாளர்கள் நலன் கருதி, மத்திய அரசினுடைய உதவியோடு 75 சதவிகிதம் மானியத்தில், 5,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட தரமான, மொத்த பால் குளிரூட்டுவிப்பான்கள் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதன்மூலம் பேரூர் தொகுதி, மதுக்கரை ஒன்றியத்தினைச் சுற்றியுள்ள அனைத்துக் கிராமங்களிலும் பால் உற்பத்தியாளர்கள் பயன்படுத்தக்கூடிய அளவிற்கு இந்த ஆண்டு இறுதிக்குள் அது நிறுவப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூர் தொகுதி, குனியமுத்தூரில் பால் உப பொருட்களுடன்கூடிய பால் விற்பனை நிலையம் துவக்க வேண்டுமென்று, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே 60 கிலோ மாட்டுத் தீவனம் ரூ.390–க்கு வழங்கப்பட்டது. இந்த ஆட்சியில், அது ரூ.490 ஆக உயர்த்தப்பட்டது. அதை உற்பத்தியாளர்களுக்குக் குறைத்து வழங்குமா என அறிய விரும்புகிறேன். மேலும், தனியார் பால் உற்பத்தி நிறுவனங்கள் தரமில்லாத பாலை அதிக விலைக்கு வாங்கி, அவர்களே கலப்படம் செய்து, கோவை மாவட்டத்தில் திருப்பூர், பொங்கலூர், கோவை போன்ற பல பகுதிகளில் விற்கின்றனர். இதனால் நுகர்வோர் உடல்நலம் பாதிக்கப்பட்டு ஏமாற்றப்படுகின்றனர். இவர்கள்மேல் நடவடிக்கை எடுக்கவும், கோவை மாவட்டத்தில் அரசு பால் விற்பனை நிலையம் அதிகமான நல்ல இலாபத்தில் இயங்குகிறது; பால் உற்பத்தியாளர்களுக்கு அக்டோபர் முதல் மார்ச் வரை, பால் வற்றும் காலத்தில் ரூ.1–50 உயர்த்திக் கொடுத்து, அரசு பால் நிலையங்களை மேம்படுத்தவும் இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்கள், 5–வது முறையாகப் பொறுப்பேற்ற பிறகுதான், சென்ற ஆண்டிலும், இந்த ஆண்டிலும் அதே



2008 மே 12]

தேதியில் பால் உற்பத்தியாளர்களுக்கு அதிக விலை கொடுக்கப்படுகிறது. வரலாறு காணாத அளவிற்குப் பால் வளத் துறையில் பசும் பாலுக்கு ரூ.2/–ம், எருமைப் பாலுக்கு ரூ.4/–ம் இந்த ஆண்டில்தான் தலைவர் கலைஞர் அவர்கள் உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் பால் உற்பத்தியாளர்களுக்கு எந்தக் குறையும் இல்லாமல், இன்னும் சொல்லப் போனால், இன்றையத் தேதி வரையில் எந்தப் பால் உற்பத்தியாளர்களுக்கும் ஒரு ரூபாய்கூட பாக்கியில்லாமல் கொடுத்து வருகிறோம். அதன்படி, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் குறிப்பிடுவதைப்போல, எந்தத் தவறும் நடைபெறுவதற்கு வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன்.

**திரு. இரா. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30–4–2008 ஆம் நாளன்று நடைபெற்ற பால் வளத் துறை மானியக் கோரிக்கையின்போது, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்த புதிய அறிவிப்புகள், பக்கம் 11 இல், அறிவிப்பு எண்கள் 25 மற்றும் 26–இல், மாநில அளவில் பிளஸ் 2 தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற பால் கூட்டுறவு இணையம் மற்றும் பால் கூட்டுறவு ஒன்றியங்களில் பணிபுரியும் நிரந்தரப் பணியாளர்களின் குழந்தைகளில் ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் குழந்தைக்கு 5 ஆண்டுகள் அல்லது அவர்களது பட்டப் படிப்புக் காலம் இதில் எது குறைவோ, அதுவரை மாதம் ஆயிரம் ரூபாய் கல்வி உதவித் தொகை வழங்கப்படும் என்றும், அதேபோல அறிவிப்பு எண் 26–இல், மாநில அளவில் பிளஸ் 2 தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் பால் கூட்டுறவு இணையம் மற்றும் பால் கூட்டுறவு ஒன்றியப் பணியாளர்களின் குழந்தைகளில், 5 ஆண்கள் மற்றும் 5 பெண் குழந்தைகளுக்கு ஒவ்வொருவருக்கும் ஒரு கணினி வழங்கப்படும் என்றும் அறிவித்திருந்தார்கள். இப்போது அறிவிக்கப்பட்டுள்ள தேர்வு முடிவில் ராஜேஷ்குமார் என்ற மாணவர் 1182 மதிப்பெண்களைப் பெற்றிருக்கிறார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கல்வி உதவித் தொகை வழங்குவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு பிளஸ் 2 தேர்விலே நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் எடுத்துக்கொண்ட சிறப்பான நடவடிக்கையின்பேரிலும், மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர்களுடைய சிறப்பான நடவடிக்கையாலும் அதிகமான மதிப்பெண்களைப் பெற்று மாணவர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள். அந்த அடிப்படையில்தான் இப்போது பால் வளத் துறையிலே இளநிலைச் செயலாளராகப் பணிபுரிகிற சாதாரண ஓர் ஊழியருடைய மகன், தமிழகத்திலேயே 1182 மதிப்பெண்கள் பெற்று முதல் மாணவனாக வந்திருக்கிறார். எங்களுடைய அறிவிப்பின் அடிப்படையில் அந்த மாணவருக்கு மாதம் ஆயிரம் ரூபாயும், நாங்கள் குறிப்பிட்டிருக்கிற அந்தக் கல்வியை அவர்கள் பயில்வார்களேயானால், அதாவது பி.எஸ்சி. (பால் வள அறிவியல்) மற்றும் பி.டெக். இவற்றைப் படிப்பார்களேயானால் வருடத்திற்கு 40 ஆயிரம் ரூபாயும், அதோடு ஒரு கணினியும் வழங்கப்படும். அதற்காகப் பட்டியல் கோரப்பட்டிருக்கிறது. அந்த மாணவருக்கு நிச்சயமாக வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் சிறப்பான ஒரு செய்தி என்னவென்றால், திருவாரூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், எங்களுடைய தமிழகத்தினுடைய முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் பயின்ற அந்த ஆண்கள் மேல்நிலைப் பள்ளியினுடைய மாணவர் 1171 மதிப்பெண்கள் பெற்று திருவாரூர் மாவட்டத்திலேயே முதல் மாணவராக வந்திருக்கிறார் என்பதையும் இந்த அவையிலே நான் குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]





## 2. அறிக்கைகள் அளித்தல்

### மதிப்பீட்டுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர்.

**திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5–வது முறையாக ஐந்தமிழ் அறிஞர், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் பதவியேற்று, இன்றையதினம் 2 ஆம் ஆண்டு நிறைவு பெறுகிற இந்த இனிய நாளில், நாளையதினம் 3 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிற அவருக்குத் தமிழக மக்கள் சார்பாக நெஞ்சம் நிறைந்த நன்றியையும், பாராட்டையும், வாழ்த்துகளையும், வணக்கங்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2007–2008 ஆம் ஆண்டுக்கான மதிப்பீட்டுக் குழுவின் தலைவராகவும், மாண்புமிகு உறுப்பினர்கள், குழுவின் உறுப்பினர்களாகவும் இருந்து பணியாற்றுகிற வாய்ப்பினை எங்களுக்கு வழங்கிய முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும், இனமானப் பேராசிரியர் அவர்களுக்கும், வணக்கத்திற்குரிய தளபதி அவர்களுக்கும் எங்களுடைய நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவிக்கிற அதே நேரத்தில், 24 மாவட்டங்களில் இந்தக் குழு தனது சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு, ஆய்வுகளை நடத்தி இந்தப் பணியைச் சிறப்பாக நிறைவேற்றுவதற்கு உறுதுணையாக இருந்த துறைகளினுடைய செயலாளர்கள் மற்றும் அலுவலர்கள் அத்துணைப் பேருக்கும் என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, வேளாண்மைத் துறை, பொதுப் பணித் துறை (கட்டடங்கள்), உயர் கல்வித் துறை ஆகியவற்றின்கீழ் ஆய்வுகளை மேற்கொண்டு, இந்த 4 துறைகளுடைய ஆய்வுகளையும் இந்த ஆண்டிலேயே இந்தப் பேரவைக்கு அளித்திருக்கிறோம் என்பதில் என்னுடைய மகிழ்ச்சியையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

2007–2008 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுவின் இருபத்தொன்று மற்றும் இருபத்திரண்டாவது அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 3. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 22–காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

### (ஆ) கோரிக்கை எண் 23–தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

### (இ) கோரிக்கை எண் 37–மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008–2009 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். 9–5–2008 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற மானியக் கோரிக்கைகள் மற்றும் அவற்றின்மீது முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின்மீது விவாதமும் வாக்கெடுப்பும் தொடர்ச்சி. 3 உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன். உங்களுக்கு 15 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

முற்பகல் 10–35

***திரு. குத்தாலம் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 13–வது சட்டப் பேரவை நிறுவப்பட்டு, 2 ஆண்டுக் காலம் பொற்கால ஆட்சியை வழங்கிய நம்முடைய முதல்வர் அவர்கள் 3–வது ஆண்டில் அடியெடுத்து வைக்கிற இந்த அற்புதமான நாளில் (மேசையைத் தட்டும் ஒலி) 2008–2009 ஆம் ஆண்டுக்கான உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது பேசுகிற வாய்ப்பை நல்கிய வாழும் வள்ளுவர், ஆட்சிக் கலையின் அற்புதம், பார் போற்றும் அறிவுக் களஞ்சியம், தமிழர்களின் வாழ்வின் வசந்தம் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) சிங்க நடையும், சிங்காரத் தமிழ்த் தென்றல் நடையும், தன்னடையாய்க் கொண்ட கோமான் எங்கள் இனமானப் பேராசிரியர் பொதுச் செயலாளர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) என்னைப் போன்ற இளைஞர்களுக்கு ஆசானாகவும், அண்ணனாகவும் அரவணைத்து வழிநடத்தும், எதிர்காலத் தமிழகத்தின் நிகழ்காலத்





தலைவன், உள்ளாட்சியின் ஒளிமுத்து, மாண்புமிகு தளபதி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) எங்களின் சுமைதாங்கி அருளாளர் அய்யா ஆற்காட்டார் அவர்களுக்கும், எங்களின் அரசியல் வழிகாட்டி அய்யா கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், எங்கள் பகுதியிலும், தொகுதியிலும் பல்வேறு பணிகளை நிறைவேற்றித் தந்து, எனது மக்கள் பணிக்கு ஊக்கமளித்து வருகின்ற அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும், தான் பேசுகின்ற வாய்ப்பை இழந்தாலும், தன்னுடைய சகாக்கள் பேசவேண்டுமென்று, அவர்களுக்கு வாய்ப்பைப் பெற்றுத் தருகின்ற எங்கள் கொறடா அண்ணன் சக்கரபாணி அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

2008–2009 ஆம் ஆண்டுக்கான காவல் துறைக்கான மானியக் கோரிக்கையில் பேசுகின்ற வாய்ப்பை நல்கிய இந்நேரத்தில், இங்கே இருக்கக்கூடிய மாமன்ற உறுப்பினர்கள், காவல் துறை ஒரு நாட்டில் எப்படிச் செயல்படவேண்டுமென்பதற்கு, உலகப் பொதுமறை வள்ளுவனுடைய வாய்மொழியான

*" அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க*
*இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார் "*

என்ற வகையிலே சொல்லியிருக்கின்றார்கள். அரசரைச் சார்ந்து வாழ்கின்றவர்கள் அவரை மிக நீங்காமலும், மிக அணுகாமலும் நெருப்பில் குளிர் காய்கின்றவர்களைப்போல இருக்கவேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். காவல் துறையோடு அருகில் அணுகாமலும், சற்றும் அகலாமலும் சமநிலையில் இருந்து நிருவகிக்கவேண்டுமென்று இங்கே வலியுறுத்தப்பட்டிருக்கின்றது. காவல் துறையின்மீது இருக்கக்கூடிய நம்பிக்கையை நாடு இழந்துவிடுமானால், இந்த நாட்டில் நாகரிகமான சமுதாயம் வாழ முடியாது என்று சில அறிஞர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

ஒரு மொழிக்கு எப்படி இலக்கணம் தேவையோ, அதைப்போல ஒரு நாட்டிற்கு, சமுதாயத்திற்குக் காவல் துறை அவசியம். அதைத்தான் ஆங்கிலத்திலே சொல்கின்றபோது, "What Grammar is to a language, Police is to a Society" என்று சொல்வார்கள். மொழிக்கு எப்படி இலக்கணம் வரம்பு மீறக் கூடாதோ, அதைப்போல ஒரு நாட்டின் காவல் துறையும் வரம்பு மீறக் கூடாது என்பதை இங்கே வலியுறுத்திப் பதிவு செய்கின்றேன். இங்கே நம்முடைய உறுப்பினர் திரு. உதயசூரியன் அவர்கள் பேசும்போது சொன்னார்:

"47 ஆண்டுகளுக்கு முன்னால் என் பெயரால் இயற்றப்பட்ட அந்த நாடகத்தில், 'காவி உடை வேணுமடா, கமண்டலமும் தேவையடா' என்று, ஆட்சிக்கு வருவோம், அவலங்களைத் தீர்ப்போம் என்று அவர் எண்ணாத நேரத்தில் சிந்தித்திருக்கின்றார், நமது தலைவர் கலைஞர் அவர்கள்; காவலர்களின் மனைவிகளின் கண்ணீரையும், வேதனையையும் தாலாட்டின் மூலம் வெளிப்படுத்தினார், உதயசூரியன் நாடகத்தில்" என்று குறிப்பிட்டார். ஆம். நமது தலைவர் அவர்கள், நாடாள உதய சூரியனாக வந்தார். அவரது நாடக சிந்தனை நாடாளும்போது செயல் வடிவம் பெற்றதன் காரணமாக, காவலர்களின் மனைவிகளுடைய கண்ணீரைத் துடைக்க வேண்டுமென்று, 1973 இல் முதல் பெண் காவலர்களை, முதல்நிலைக் காவலர்களாக அமர்த்தியவர், நம்முடைய தலைவர் கலைஞர் என்பதை யாரும் மறந்துவிட முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) 1968–ல் பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறுகின்றபோது "சமூகத்தின் அளவிற்குத் தகுந்தாற்போல்தான் காவல் துறை இருக்கவேண்டும்" என்று அந்த மாமேதை இங்கே இதே மன்றத்தில் தெரிவித்திருக்கின்றார்கள். அதனடிப்படையிலேதான், ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் 15 ஆம் நாள் வீர தீரச் செயல் புரிந்த காவலர்களுக்கு நமது முதல்வர் அவர்கள், பேரறிஞர் அண்ணா விருதை வழங்குகின்றார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். "Successful persons don't do different things; they do things differently" என்று சொல்வார்கள். வெற்றிக் கனியைப் பறிப்பவர்கள், வித்தியாசமான செயல்களைச் செய்வதில்லை. தாங்கள் செய்யும் சாதாரண செயல்களையும் வித்தியாசமாகச் செய்வார்கள் என்று சொல்லியிருக்கின்றார்கள். அதுபோலத்தான் நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள், காவல் துறைக்கு முதல் கமிஷனை திரு. R.A. கோபால்சாமி தலைமையில் 1969 இல் அமைத்து, 133 பரிந்துரைகளில் 115 பரிந்துரைகளை ஏற்று, 4 கோடியே 60 இலட்சம் ரூபாயை ஒதுக்கினார். இதைப் பாராட்டிப் பேசும்போது, ஐ.ஜி. அருள் அவர்கள் "ஒரு போலீஸ்காரனின் டைரி" என்ற புத்தகத்திலே குறிப்பிடுகின்றபோது சொல்கின்றார்: "தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்த முதல் காவல் துறை கமிஷன்தான் இந்தியாவிலேயே தமிழகப் போலீஸ் துறையை நவீனப்படுத்த முன்னுதாரணமாக இருந்திருக்கின்றது" என்று அவர் கூறியிருக்கின்றார். அதுமட்டுமல்ல; 1975 ஆம் ஆண்டு தடயவியல் துறையைக் கணினிமயமாக்கிய மாநிலம், தமிழகம். 1849–க்குப் பிறகு பெரிய புத்துணர்வைப் பெற்று, குற்ற நிகழ்வுகளைத் துல்லியமாகக் கண்டுபிடிக்க வழிவகுத்துத் துணைபுரிந்தவர் நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் என்பதை



இங்கே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதைக்கூட நம்முடைய 'இண்டர்போல்' அமைப்பின் செயலாளராக அன்றைக்கு இருந்த ஜெனரல் ஜீன் நபார்டின் அவர்கள்கூட பாராட்டிக் கடிதம் எழுதியிருக்கின்றார்கள். அதற்குப் பிறகு 1989 இலே திரு. சபாநாயகம் அவர்கள் தலைமையிலே காவல் துறையின் கோரிக்கையையும் அத்தியாவசியத்தையும் என்னவென்று தெரிந்துகொள்வதற்கு ஒரு கமிஷனை மீண்டும் அமைத்து, 112 பரிந்துரைகளில் 79 பரிந்துரைகளை நம்முடைய முதல்வர் அவர்கள் ஏற்று, அன்றைக்குக் காவல் துறை கமிஷன் பரிந்துரைகளை நிறைவேற்றியிருக்கின்றார்கள். இரண்டு காவல் துறை கமிஷன்கள் அமைக்கப்பட்டதன் நோக்கம் என்னவென்று சொன்னால், Scotland Yard–க்கு நிகராக நம்முடைய தமிழக நுண்ணறிவு பெற்ற காவல் துறையை வர்ணித்த காலங்கள் உண்டு. Scotland Yard என்று சொல்கின்றபோது பல ஆண்டுகளுக்கு முன்னாலே மிகவும் அதிநவீனப்படுத்தப்பட்டதாக இருந்தது. அதைப்போல தமிழகத்தின் காவல் துறையும் அமையவேண்டும். அதற்கான தேவை என்ன என்பதையும் அறிந்து, அவற்றை நடைமுறைப்படுத்துவதற்குத்தான் இரண்டு கமிஷன்களை அமைத்து இன்றைக்கு மூன்றாவது கமிஷனையும் தலைவர் கலைஞர் அவர்கள் அமைத்திருக்கின்றார்கள் என்பதை இந்த மன்றத்திலே பதிவு செய்ய விரும்புகின்றேன்.

அதுமட்டுமல்ல; 'இந்தியாவின் பெண் புலி' என்று வர்ணிக்கப்பட்ட பெண் ஐ.பி.எஸ். கிரண் பேடி அவர்கள், தன்னுடைய "நான் துணிந்தவள்" என்ற புத்தகத்தில் எழுதுகின்றபோது சொல்கின்றார்; இந்திய நாட்டின் தலைநகரான டில்லி திகார் சிறைச்சாலையைப் பாதுகாக்கின்ற மிகப் பெரிய பொறுப்பை ஏற்றுக்கொண்டு, மிகச் சிறப்பு வாய்ந்த நமது காவல் துறையாகத் தமிழகக் காவல் துறை ஒரு காலத்திலே பணிபுரிந்தது என்பதை அவர் குறிப்பிடுகின்றபோது சொல்கின்றார். 1975–க்குப் பிறகு யாராவது காவல் துறையைப் பற்றிக் கவலைப்பட்டதுண்டா? திரும்பிப் பார்த்ததுண்டா? பதவியிலிருந்தபோது காவலுக்கு வரவில்லையே என்று கவலைப்பட்டவர்கள் உண்டு. ஆட்சி போனாலே காட்சி மாறிவிடுகிறது. ஆட்சியில் சலாம் போட்டவர்கள் இந்த நாட்டிலே உண்டு; பின்பு நம்முடைய முதல்வர் அவர்களை எப்படியெல்லாம் உதாசீனப்படுத்தினார்கள் என்பதும் உண்டு. நீதிமன்றத்தின் தீர்ப்புகளுக்குக் கட்டுப்பட்டு நடந்து, நீதிமன்றத்தின் கண்டனங்களுக்கு ஆளாகாத ஆட்சியும், காவல் துறையும், தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியும், காவல் துறையும், என்பதை இந்த மாமன்றத்திலே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10–40

"சட்டப்படி கைது செய்யலாம் என்று அதிகாரம் இருப்பதாலேயே கைது செய்யக்கூடாது; கைது செய்திட அதிகாரம் மட்டும் போதாது; நியாயமான காரணங்கள் தேவை; புகாரின் உண்மைத் தன்மையை அறிந்தபிறகு, கைது செய்யவேண்டும்" என்று 1994–ல் உச்ச நீதிமன்றம் ஓர் உத்தரவைப் பிறப்பித்தது. அவற்றிலே ஏதாவது ஒன்றையாவது பின்பற்றினார்களா, கடந்த காலங்களில்?

நமது இனம் தூங்கிவிடக் கூடாது என்பதற்காக, நள்ளிரவுவரை விழித்திருந்து காவல் புரிந்தவரை, நள்ளிரவில் கைது செய்தார்களே, 'மேலிடத்து உத்தரவு, மேடத்து உத்தரவு' என்று கைது செய்தார்களே, அவர்களுடைய இன்றைய நிலை என்ன? ஒரு முதல் தகவல் அறிக்கைகூட அவர்களால் தாக்கல் செய்ய முடியாத நிலைமைதான் இன்றைக்கு இருக்கிறது.

ஆம், காவல் துறை சில நேரங்களிலே அப்படிச் செயல்பட்டது உண்டு. அதற்காக, உள்ளுறுப்புகளைத் தோல் போர்த்திக் காப்பதுபோல், நாட்டை, காவல் துறை போர்த்திக் காக்கிறது. தோலிலே சில நேரங்களில் சரும நோய் ஏற்படலாம். அதற்காகத் தோலை வீசி எறிந்துவிட முடியாது என்பதை நன்குணர்ந்தவர்தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள். காவல் துறையில் களங்கமில்லாது பணிபுரிந்த முத்துக்களும் உண்டு; கறுப்பு ஆடுகளும் உண்டு; நீதிமன்றத்தில் முத்திரைத் தாள்களோடு, சிரித்த முகமதனைக் காட்டிச் செல்பவர்களும் உண்டு, பகைவர்களுக்கும் அருளும் பரமகுரு அல்லவா நம்முடைய முதல்வர் அவர்கள்? பேரறிஞர் அண்ணா அவர்களின் இதயத்தைப் பெற்றவர்; எதையும் தாங்கக்கூடிய ஆற்றலைப் பெற்றவர்; "மறப்போம்! மன்னிப்போம்!!" என்றார். இதைத்தான் குரானிலே, சொல்கின்றபோது சொல்கிறார்கள். 'நமக்கு யார் எந்தத் தீமை எப்பொழுது செய்தாலும், அதைப் பொறுமையாக ஏற்றுக்கொண்டு, எவ்விதக் கசப்பு உணர்வும் இல்லாமல் மன்னிக்கும் குணம் கொண்ட, உன்னதமான வீரமும், வீரமான செயலும் வேண்டும்' என்று சொல்கிறார்கள்.

ஆம், ஆட்சியாளர்களுடைய பேச்சைக் கேட்டு அன்றைக்கு நடந்த நிகழ்வுகள்—இன்றைக்கு நாங்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிறோம்; எங்களால் பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன; நாட்டு மக்கள் பலர் பயனடைகிறார்கள்; ஆனால், இன்றைக்கும்—எங்களைப் போன்றவர்களுடைய நெஞ்சில் அது உறுத்திக்கொண்டுதானே



இருக்கிறது? அப்படிப்பட்ட செயலை நிறைவேற்றிய அந்தக் காவல் துறையினுடைய அதிகாரி, அன்றைக்கு ஆட்சியாளர்களுடைய பேச்சைக் கேட்டுக்கொண்டு எப்படியெல்லாம் நடத்தினார் என்பதை இந்த நாடறியும். அதே ஆட்சியாளர்களால் கடைசி காலத்திலே அவரைத் தூக்கியெறிந்துவிட்டுச் சென்றுவிட்டார்கள். ஆனால், இப்போது என்ன நடந்திருக்கிறது என்று சொன்னால், மகனைக்கூட மன்னிக்காத மனு நீதிச் சோழன் பிறந்த தஞ்சைத் தரணியில் பிறந்த எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள், மனித நேயத்திற்கு எடுத்துக்காட்டாக, அந்த அதிகாரியை மீண்டும் பணியமர்த்தி இருக்கிறார்கள் என்று சொன்னால் காவல் துறையில் இருக்கக்கூடியவர்களும், நாட்டு மக்களும், மனிதாபிமானத்தில், தலைவர் கலைஞர் அவர்கள் எந்த அளவிற்கு உயர்ந்து நிற்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்த்திட வேண்டும்.

உச்ச நீதிமன்ற, உயர் நீதிமன்றத் தீர்ப்புகளும், அரசு உத்தரவுகளும், மனித உரிமைகள் பறிக்கப்பட்ட நிகழ்வுகளும், பண்பட்ட தமிழக மண்ணிலே அரங்கேற்றம் செய்யப்பட்டன. தடா, பொடா, எஸ்மா, டெஸ்மா என்றார்கள். தனக்கு எதிரிகளாக இருக்கக்கூடியவர்கள், அரசியலிலே எதிர்த்துக் குரல் கொடுக்கிறவர்கள்மீது கஞ்சா வழக்குகூட கடந்த காலங்களிலே பதிவுசெய்யப்பட்டது உண்டு.

மக்களைக் காப்பற்ற வேண்டிய பொறுப்புமிக்க காவல் துறை, சில நேரங்களில் தனது பாதுகாப்புக்கு மட்டும் செயல்படும் ஏவல் துறையாக இருந்த இருண்ட காலங்கள்கூட காவல் துறையிலே உண்டு. 'Others make rules; I break them' என்றான் அறிஞன் பித்தோவன். 'மற்றவர்கள் விதியை உருவாக்குகிறார்கள்; அவற்றை நான் உடைக்கிறேன்' என்று உடைத்தவர்களும்கூட சில காலங்களிலே உண்டு.

இவ்வளவு உலகளாவிய புகழ்பெற்ற இந்தத் தமிழகக் காவல் துறையைக் கையிலே வைத்துக்கொண்டு, "சி.பி.ஐ. என்ன, அந்தரத்திலே இருந்து குதித்தவர்களா?" என்று இங்கே கர்வத்தோடு கர்ஜித்தவர்களும் உண்டு. "நீதிபதிகளுடைய பாதுகாப்பு என்னிடத்திலே இருக்கிறது" என்று சொன்ன காலமும் உண்டு; அதைக்கேட்டு மிரண்டவர்களும் உண்டு; மிரட்டியவர்களும் உண்டு. ஆனால், இன்றைய நிலை என்ன காவல் துறையிலே? நம்முடைய எதிர்க்கட்சி உறுப்பினர் நண்பர் திரு. சேகர் பாபு அவர்கள் பேசுகின்றபோது ஒன்றைச் சொன்னார், தமிழகத்தில் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில், சட்டம்–ஒழுங்கு சீர்கெட்டுவிட்டது என்று சொன்னார். நான் அவருக்கு

ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சில மாதங்களுக்கு முன்பு, ஒரு மிகப் பெரிய அமைப்பு, நாடு தழுவிய அளவில், இந்தியாவிலே இருக்கக்கூடிய மக்கள் எந்த மாநிலத்தில் அதிகமாக வாழ விரும்புகிறார்கள் என்ற ஆய்வை நடத்தினார்கள். 60 சதவீதத்திற்கு மேற்பட்ட மக்கள், 'தமிழகத்திலே இருக்கக்கூடிய சென்னை நகரத்திலேதான் நாங்கள் வாழ்வதற்கு விரும்புகிறோம்' என்று சொல்லியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல; தமிழகத்திலே சட்டம்–ஒழுங்கு சிறப்பாகச் செயல்படுகிறது என்பதற்கு ஒரேயொரு உதாரணம் சொல்கிறேன். அன்றைக்குத் தொழில் துறை மானியத்திலே பேசுகின்றபோது அண்ணன் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொன்னார்கள்: 'முதலீடு என்பது ஒரு கோழை; அது இலேசான இடையூறு இருந்தாலும் ஓடிவிடும்' என்று சொன்னார்கள். 'Tamil Nadu is a happening State for the I.T. Sector' என்று பத்திரிகையில் வர்ணிக்கக்கூடிய அளவிற்கு இப்போது தொழில் நிறுவனங்களை இங்கே தொடங்குகிறார்கள் என்று சொன்னால், தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியின் சாதாரண எளிய நடைமுறை மட்டும் காரணம் அல்ல; இந்தத் தமிழ் மண்ணில் சட்டம்–ஒழுங்கு பாதுகாக்கப்பட்டு, தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சி தமிழகத்திலே நடைபெறுகிறது என்பதை உங்கள் சிந்தைக்கு நான் உணர்த்த விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல; நீண்ட காலமாக சென்னையை ஒட்டிய புறநகர் பகுதிகளில் "பீரோ புல்லிங்" என்ற நூதனமான திருட்டுகளைக் கண்டுபிடிக்க முடியாமல், காவல் துறை திணறி, தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், அவர்கள் முடுக்கிவிடப்பட்டு, தந்திரமாக அவர்கள் கொல்கத்தா வரை சென்று நீதிமன்றத்தினுடைய வாயிலில் கொண்டுவந்து நிறுத்தியதுதான், தலைவர் கலைஞருடைய காவல் துறை. அதுமட்டுமல்ல; இங்கே பேசுகின்றபோது சொன்னார்கள்: "தென் மாவட்டங்களிலும், மற்ற பகுதிகளிலும் தாதாயிசம் என்று சொல்லக்கூடிய ஒன்று, சமூகத்திற்கும், ஜனநாயகத்திற்கும் மிகப் பெரிய சவாலாக இருக்கிறது" என்று குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஒன்றைச் சொல்கிறேன்; சமஸ்கிருதத்திலே சொல்வார்கள்: 'துஷ்ட நிக்ரஹ, இஷ்ட பரிபாலன' என்று சொல்வார்கள். துஷ்டர்களை அழித்து, தர்மத்தைக் காப்பாற்றுவதுதான் அரசின் கடமை என்று சொல்வார்கள். அதைத்தான் தலைவர் கலைஞருடைய தலைமையில் இயங்குகின்ற காவல் துறை தன்னுடைய உயிரையும் பணயம் வைத்துப் பொது



மக்களுக்கு எந்தவிதச் சேதாரமும் இல்லாமல் இப்போது தாதாயிசத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்திருக்கிறது. 'Iron hand in a velvette Glove'— ஒரு கடுமையுடனும் அதேநேரத்தில் மென்மையாகவும், இந்த நிருவாகத்தைச் செம்மைப்படுத்தியிருக்கிறது தலைவர் கலைஞரின் தலைமையிலே இயங்குகிற காவல் துறை என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–45

காவல் துறை ஒரு கடினமான துறை; இங்கே வெற்றிகள் எண்ணப்படுவதில்லை; தோல்விகள் பூதாகரமாக்கப்படும்; இது ஒரு Thankless job என்று சொல்வார்கள். நன்றி பாராட்டப்படாத துறை. ஆனால் நமது மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகம் சென்னையில் மிக நெருக்கடியான இடத்தில் செயல்பட்டு வந்த அவற்றையெல்லாம் கண்டறிந்து வண்டலூருக்கு அருகே, ஊனமாஞ்சேரி என்ற கிராமத்தில் நவீனக் கட்டமைப்பு வசதிகளோடு 129 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.48.23 கோடி செலவில், 15–3–2008 அன்று திறந்து வைத்து, எதிர்காலத் தலைமுறைகள் நல்ல காவல் துறைத் தலைவர்களாக வரவேண்டும் என்பதை இதன்மூலம் உணர்த்தியிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய காவலர்களுடைய தேர்வு, எந்தக் காலத்திலும் இல்லாத அளவுக்கு ஒளிவுமறைவின்றி யாரும் குறை சொல்ல வாய்ப்பில்லாமல் நேர்மையாக, வெளிப்படையாக நடைபெற்று, இப்போது காவல் பணியாளர்களுடைய எண்ணிக்கை 1,02,474 ஆகக் கணிசமாக உயர்ந்து, குற்ற நிகழ்வுகளும் குறைந்து வருகின்றன என்பதை இங்கே நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்படிப்பட்ட தலைவர் கலைஞர் அவர்கள், முதல்வர் பதவியை ஏற்றுக்கொள்ளும்போதுதான் காவல் துறை சீரமைக்கப்படுகிறது; செம்மைப்படுத்தப்படுகிறது. அவரைப்போல் காவல் துறையைச் சீர்திருத்தம் செய்தவருமில்லை. நமது தலைவர் கலைஞர் அவர்களைப் போல் காவல் துறையால் அச்சுறுத்தப்பட்டவரும் இனி யாரும் இருக்க வாய்ப்பில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் சில கோரிக்கைகளை வைக்க விரும்புகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்கள்

திருவாரூர் மாவட்டம், குடவாசலைப் பற்றி நன்கு அறிந்தவர்கள். குடவாசலில் புதிதாக ஒரு தீயணைப்பு நிலையம் துவக்கப்பட்டது 1989–இல். அதுவும் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான். அந்தப் பகுதியில் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு அரசுக்கு ஒப்படைக்கப்பட்டு, இப்போது அரசாங்கம் ஒரு புதிய கட்டடத்தை, ஒரு தீயணைப்பு நிலையக் கட்டடத்தை வழங்கக்கூடிய நிலையில் அரசுக்கு முன்மொழிவுகளும் தயார் நிலையில் இருக்கின்றன. மாண்புமிகு முதல்வர் அவர்கள், அங்கே ஒரு தீயணைப்பு நிலையக் கட்டடம் வழங்கிட வேண்டுமென்று கேட்டு, அந்தத் தீயணைப்பு நிலையத்தில் இருக்கக்கூடிய வாகனம் மிகவும் பழுதடைந்து, பழமையான வாகனமாக இருக்கிறது. சில நேரங்களில் பெருத்த தீ விபத்து ஏற்படக்கூடிய சூழ்நிலையில் அங்கே நம்முடைய தீயணைப்பு மீட்புப் பணியினர் போராடித் தீவிரமாகச் செயல்படுகிற நேரத்திலும், அந்த வாகனம் சில நேரங்களிலே செயல்பட மறுக்கிறது. ஆகையினால் பொது மக்களுடைய கோபத்திற்கு அவர்கள் ஆளாகிறார்கள். ஆகவே அதையும் நவீனமயமான வாகனமாக அந்தப் பகுதியில் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குடவாசலிலே உள்ள காவல் நிலையம் என்பது மிகப் பெரிய எல்லையைக் கொண்ட காவல் நிலையம். 23 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கக்கூடிய திருவாரூரிலும், அடுத்திருக்கக்கூடிய நம்முடைய குடவாசலிலும்தான் காவல் நிலையங்கள் இருக்கின்றன. ஆகவே அந்தக் குடவாசல் காவல் சரகத்தை இரண்டாகப் பிரித்து நீங்கள் அடிக்கடி வந்து சென்ற எங்கள் தொகுதியின் பெரும்பண்ணையூர் பகுதியாம் உங்கள் அன்பைப் பெற்ற சர். ஏ.டி. பன்னீர்செல்வம் மற்றும் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய நெருங்கிய நண்பருமான நெடுஞ்சேரி நெ.ம. பன்னீர்செல்வம் வாழ்ந்த பகுதியான பெரும்பண்ணையூரில் ஒரு புதிய காவல் நிலையம் அமைத்துத் தர வேண்டும் என்று உங்களிடத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு, நேற்றைக்கு அல்ல; 40 ஆண்டுகளுக்கு முன்னாலே அந்தப் பகுதி மக்களுக்கு நீங்கள் பாதுகாப்பிற்காகக் குரல் கொடுத்திருக்கிறீர்கள். "ஆர்சுத்தியாரே ஊர்சுத்திப் பாரும்" என்று கணவான்களுடைய ஓர் அடக்குமுறைக்காகக் குரல் கொடுத்து அன்றைய மக்களின் பாதுகாப்பிற்கு நீங்கள்தான் வழிவகுத்திருக்கிறீர்கள். இப்போதும் அதன் தொடர்ச்சியாக அந்தப் பகுதியில் பல்வேறு விரும்பத்தகாத நிகழ்வுகள் நிகழ்வது தவறுவதில்லை.



அப்பகுதி மக்கள், குறிப்பாக ஆதி திராவிட மக்கள் அச்சுறுத்தப்படும் நிலையில், அவர்களின் அச்சம் நீங்கும் வகையில், துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் வேண்டும் என்ற தேவையை இந்த மன்றத்தில் பல முறை உங்களிடத்திலே வலியுறுத்திய முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினரும், உங்களுடைய அருமை நண்பருமான திரு. கோ. வீரய்யன் போன்றவர்கள், குத்தாலம் கல்யாணம் போன்றவர்கள் வைத்த கோரிக்கையை ஏற்று, நீங்கள் குடவாசலுக்கு ஒரு காவல் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் அமைத்திட வேண்டும்; மூன்றாவது காவல் கமிஷனில் அந்தப் பரிந்துரை இல்லையென்றாலும்கூட, விதிவிலக்களித்து அந்தப் பகுதி மக்களுடைய பாதுகாப்பிற்காக நீங்கள் ஒரு காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் அமைத்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தீ விபத்திற்கென்று நம்முடைய அரசு வழங்குகிற நிவாரணத் தொகை ரூ.2,000/- ஆக இருக்கிறது. விபத்து ஏற்படும்பொழுது உடைமைகள் அனைத்தையும் இழந்த நிலையில், அவர்கள் கேள்விக்குறியாக நிற்கிறார்கள். பல்வேறு திட்டங்களையும் கருணையுள்ளத்தோடு நிறைவேற்றுகிற மாண்புமிகு முதல்வர் அவர்கள், ரூ.2000/–ஐ ரூ.5,000/– ஆக அவர்களுக்கு உயர்த்தித் தர வேண்டும் என்று இந்த நேரத்திலே உங்களிடத்திலே கோரிக்கையாகப் பல உறுப்பினர்களின் சார்பிலே வைக்கிறேன்.

அதுமட்டுமல்ல; பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திற்கு இந்த மாபெரும் தலைவரை முதன்முதலில் தந்த தொகுதியாம் குளித்தலை தொகுதி. அங்குள்ள காவல் நிலையம் நவீனப்படுத்தப்படும் என்று தலைவர் கலைஞர் அவர்கள் 18–10–2007 அன்று அறிவித்தார்கள். தற்போதுள்ள காவல் நிலையம் மிகுந்த நெருக்கடியான இடத்தில் இருக்கிறது என்றும் அதே வளாகத்தில் காவல் துறைக்குச் சொந்தமான காலியிடத்தில் 15 சென்ட் நிலம் இருக்கிறது என்றும், அந்த இடத்தில் மாற்றி அமைத்துத் தர வேண்டுமென்றும், சட்டப் பேரவை உறுப்பினர் அண்ணன் மாணிக்கம் அவர்கள் சார்பாக உங்களிடத்திலே நான் இந்தக் கருத்துகளை வைக்கிறேன். குடவாசல் காவல் நிலையத்திற்கும் தயாராக இடமிருக்கிறது. ஒரு காவல் நிலையக் கட்டடம் வேண்டும் என்று கேட்டு, இன்றைக்கு வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மானியக் கோரிக்கையில் பேசுகிற வாய்ப்பளித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்து, நமது முதல்வர் அவர்கள், 5 ஆவது முறையாக 2006–ல் பொறுப்பேற்றவுடன் காவல் துறைக்கு அதன் தேவைகளைக் கண்டறிய

ஓய்வு பெற்ற திரு. பூர்ணலிங்கம், I.A.S. தலைமையில், 3-வது காவல் கமிஷனை அமைத்துள்ளார்கள்—பேரவையில் இருக்கக்கூடிய உறுப்பினர்களுக்கும், தலைவர்களுக்கும், நாட்டு மக்களுக்கும் சொல்கிறேன்—முதல்வர் கலைஞர் அவர்கள், அதன் அறிக்கையினை ஆய்ந்து முடிவெடுக்கும்போது காவல் துறை இன்னும் பொலிவும், வலிமையும், சிறப்பும் பெறும் என்பதைக் கூறி வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 10–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதலமைச்சர் 5–வது முறையாகப் பொறுப்பேற்று, இன்றோடு இரண்டு ஆண்டுகள் முடிவடைகின்றன. இந்த இரண்டு ஆண்டுகளிலே பல்வேறு சீரிய பணிகளை அவர்கள் ஆற்றி இருக்கின்றார்கள். இந்த ஆட்சி, இந்த இரண்டு ஆண்டுகளிலே ஆற்றிய பணிகளைத் தொடர்ந்து ஆற்றுவதற்கு, காங்கிரஸ் கட்சி அவருக்கு உறுதுணையாக இருக்கும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்குக் காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது விவாதிக்க வாய்ப்பளித்த உங்களுக்கும், எங்களுடைய காங்கிரஸ் பேரியக்கத்தின் தலைவர் அன்னை சோனியா காந்திக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

ஓர் அரசின் செயல்பாட்டில் காவல் துறை என்பது, நமது உடலில் உள்ள இரத்தம் போன்றது. எப்படி இரத்த ஓட்டம் சீராக இருந்தால் ஒரு மனித உடல் நலம் எப்படிச் செம்மையாக இருக்கிறதோ, அதைப்போல காவல் துறையின் செயல்பாடுகள் சிறப்பாக இருந்தால், அரசின் ஆரோக்கியமும் சிறப்பாக இருக்கும். இரத்தத்தில் இருக்கிற வெள்ளை அணுக்கள் எப்படி நோய்க் கிருமிகளோடு போராடித் தங்களை அழித்துக்கொண்டு மனித உயிரைக் காக்கப் போராடுகின்றனவோ அதைப்போல, காவல் துறையைச் சார்ந்தவர்களும் சமூக விரோதிகள், தேச விரோதிகள், பயங்கரவாதிகள், தீவிரவாதிகள், குற்றவாளிகள் போன்றவர்களின் தாக்குதலிலிருந்து நமது மாநிலத்தைக் காக்க, தங்களையே பலியாக்கிக்கொள்கிறார்கள்.



ஜனநாயக நாட்டிலே, காவல் துறை, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களரசின் மேற்பார்வையில் செயல்படுவதால், தகுந்த வழிகாட்டுதலும், தலைமையும் அதற்குக் கிடைக்கின்றபோது, அதன் செயல்பாடுகள் மிகச் சிறப்பாக அமைகின்றன. அத்தகைய வழிகாட்டுதலை, அனுபவம் நிறைந்த நம்முடைய முதல்வர் அவர்கள் பெற்றிருக்கிறார்கள்.

மாண்புமிகு கலைஞர் அவர்கள் ஐந்து முறை முதலமைச்சராகப் பொறுப்பேற்று, இந்தக் காவல் துறை மானியத்தை இந்த மாமன்றத்திலே இதுவரை 17 முறை தாக்கல் செய்திருப்பதால், இந்தியத் திருநாட்டில் இத்தனை முறை காவல் துறை மானியத்தை சமர்ப்பித்த ஒரே முதல்வர் என்ற வரலாற்றைப் படைத்துள்ளார்கள் நமது முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர் முத்தமிழறிஞர், டாக்டர் கலைஞர் அவர்கள், ஒரு அரசியல் ஞானி என்று சொல்லிக்கொள்வதிலே நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

காங்கிரஸ் பேரியக்கத்திற்கு ஒரு தனிப் பண்பாடும், கலாச்சாரமும் உண்டு. ஆட்சியில் இருப்பின், நிறை இருந்தால் பாராட்டுவோம், குறை இருந்தால் சுட்டிக்காட்டுவோம். கண் மூடித்தனமாக யாரையும் எதிர்க்க மாட்டோம். இந்த ஆட்சி, கடந்த 2 ஆண்டுக் காலத்தில் மிக நல்ல பணிகளை, திட்டங்களைச் செயல்படுத்தி இருக்கிறது. குறிப்பாக, தமிழ்நாட்டில் சட்டம்–ஒழுங்கு சீராக உள்ளது. சட்டம்–ஒழுங்கு சீர்குலைந்ததாக எவரும் சொல்லமுடியாது. தீவிரவாதம் மாநிலத்திற்குள் ஊடுருவாமல் இருக்க, காவல் துறை நன்கு கண்காணித்து வருகிறது.

சட்டம்–ஒழுங்கைச் சீராக வைத்திருப்பதற்காகவும், தீவிரவாதம் ஊடுருவாமல், தீவிரமாகக் கண்காணித்து வருவதற்காகவும், காவல் துறையைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். காவல் துறைக்கு 2005–2006 ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீடு ரூ.1,346 கோடி. 2008–2009 ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீடு ரூ.2,497 கோடி. பழைய நிதி ஒதுக்கீட்டைவிட, 2005–2006 ஆம் ஆண்டில் ஒதுக்கிய பணத்தைவிட இப்போது 80 சதவிகிதம் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து, இந்தக் காவல் துறைமீது தனிக் கவனம் செலுத்தும் அரசை நான் பாராட்டுகிறேன்.

குற்றங்கள் மற்றும் சட்டம்–ஒழுங்குப் பிரச்சினைகள் குறித்து, அவசரத் தகவல்களை உடனுக்குடன் தெரியப்படுத்த ஏதுவாக, வரும் நிதியாண்டில், மாநிலத்தின் அனைத்துக் காவல் நிலையங்களுக்கும் அகண்ட அலைவரிசை–Broad Band Internet–வழங்கப்பட உள்ளது. இந்த

அரசு பொறுப்பேற்று மூன்றாவது போலீஸ் கமிஷன் அமைத்து, அதன் பரிந்துரைகள் ஆய்வு செய்யப்பட்டு, காவல் துறை மேலும் செம்மையாகச் செயல்பட நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த நல்ல பணிகளுக்காக இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 10–55*

காவி உடை என்பது தெய்வ பக்திக்கு அடையாளம். கதர் உடை தேச பக்திக்கு அடையாளம். காக்கி உடை, கடமை உணர்வுக்கு அடையாளம். இங்கொன்றும் அங்கொன்றுமாக அடையாளங்கள். அடையாளங்களில் அழுக்கு படிந்து இருக்கலாம். ஆனால், அந்த அழுக்கு நீடித்து நிற்பதில்லை. அந்த அடையாளங்கள் என்றும் நிலைத்து நிற்கின்றன. கடந்த 21–4–2008 அன்று நடைபெற்ற 'Third Civil and Defence Services Day' கூட்டத்தில் பேசும்போது, பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் ஒரு கருத்தை வெளியிட்டார்கள், "Good governance did not just mean more efficient management of organisation; it was about humane and ethical management"—நல்லாட்சி என்பது நிறுவனங்களைத் திறமையாக நிருவகிப்பது மட்டுமல்ல, மனித நேயத்தோடும், அறநெறியோடும் ஆள்வதுதான் உண்மையான ஆட்சி ஆகும். அலுவலர்கள், குறிப்பாகக் காவல் துறை அலுவலர்கள் மனித நேயத்தோடும், அறநெறியோடும் பிரச்சினைகளை அணுக வேண்டும்; பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். மற்ற அதிகாரிகள் தவறு செய்தால்கூட, மக்கள் அதற்கு முக்கியத்துவம் கொடுக்கமாட்டார்கள். காவல் துறை சுணக்கம் காட்டினால், தயக்கம் காட்டினால், தவறு செய்தால், தகாத செயலில் ஈடுபட்டால், மக்கள் முதலமைச்சரின் முகத்தைத்தான் பார்ப்பார்கள். ஆகவே, அரசுக்கும் முதலமைச்சருக்கும் நல்ல பெயரை வாங்கித் தருவதில், காவல் துறை அதிகாரிகளுக்குத்தான் அதிகமான பொறுப்பு இருக்கிறது. ஒரு நிறுவனத்தில்—commodity may be out of stock; but courtesy should not be out of stock—ஒருவனிடத்தில் கொடுப்பதற்குப் பொருள் இல்லாமல் இருக்கலாம்; ஆனால், நல்ல வார்த்தைக்கு, கனிவான வார்த்தைக்குப் பஞ்சம் இருக்கக்கூடாது. காவல் துறையினர் கனிவாக இருக்க வேண்டும்; கண்டிப்பாகவும் இருக்க வேண்டும்; கடமை உணர்வோடு விரைந்து செயல்படவும் வேண்டும். இதை நான் காவல் துறை அலுவலர்களுக்கு அறிவுரையாக அல்ல; ஒரு ஆலோசனையாகச் சொல்ல விரும்புகிறேன். காவல் துறை அலுவலர்கள் நல்ல பெயர் வாங்கினால் அரசுக்கு நல்ல பெயர் தானாகவே வந்து விடும்.



காவல் துறைக்கு நிறைய வாகனங்கள் வழங்கியிருக்கிறீர்கள். வாகன ஓட்டுநர்கள் நியமிக்கப்பட வேண்டும். இந்த அரசு பொறுப்பேற்ற பின்பு அதன் நிருவாகத்திலே ஒரு புதிய அணுகுமுறையை, நவீன அணுகுமுறையை நான் பார்க்கிறேன். மக்களும் பார்த்து மனமுவந்து பாராட்டுகிறார்கள். அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு அதிநவீன புதிய பேருந்துகளை வாங்கியிருக்கிறீர்கள். அதுபோல, காவல் துறை விரைவாகவும், சிறப்பாகவும் செயல்பட வேண்டுமென்ற நோக்கத்தோடு நூற்றுக்கணக்கான பேருந்துகளை மாவட்டக் காவல் துறைக்கு வழங்கியிருக்கின்றீர்கள். இது காவல் துறை அலுவலர்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. காவல் பணியாளர் நலனைக் காப்பதைக் கவனத்தில் கொண்டு ஹூண்டாய் கார்களையும், பிற வாகனங்களையும் வழங்கியதற்கு இந்த அரசை நான் பாராட்டுகிறேன். அதேநேரத்தில் ஒரு வேண்டுகோளையும் வைக்கிறேன். வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன, ஆனால் வாகன ஓட்டுநர்கள் பணியிடங்கள் உருவாக்கப்படவில்லை. அந்தப் பணியிடங்களை உடனடியாக நீங்கள் உருவாக்கிட வேண்டும்.

இந்த அரசு பொறுப்பேற்ற 2 ஆண்டு காலத்தில் காவல் பணி கணினிமயமாக்கப்பட்டு வருகிறது. அதன்மூலம் விவரங்கள் முறையாகவும், சீராகவும் பதிவு செய்யப்படுகின்றன. இவை மீதான நடவடிக்கைகளும் விரைவாக நடைபெறுகின்றன. இவ்வாறு கணினி முறையைக் காவல் பணியிலே அறிமுகப்படுத்திய இந்த அரசைப் பாராட்ட வேண்டும். அதேநேரத்தில் ஒரு குறையைச் சுட்டிக்காட்ட வேண்டும். ஒவ்வொரு காவல் நிலையத்திலும் இப்போது கணினி உள்ளது. ஆனால், அவற்றை இயக்க, முழு பயிற்சி பெற்ற Computer Operators யாரும் இல்லை. எனவே, காவல் பணியில் இருப்பவர்களில் கணினி அறிவு பெற்றவர்களைத்தான் இப்போது பயன்படுத்துகிறார்கள். காவல் பணி சிறக்க வேண்டுமானால் ஒவ்வொரு காவல் நிலையத்திலும் Computer Operators–கணினி இயக்குபவர்–பணியிடங்கள் உருவாக்கப்பட்டால் நல்லது. அத்துடன் காவல் துறையிலுள்ள ஒவ்வொரு பணியாளரும், காவலர் முதல் காவல் துறைத் தலைவர் வரை உள்ள அனைவருக்கும் கணினிப் பயிற்சி வழங்கப்பட வேண்டும். அதற்கான திட்டத்தைத் தயாரித்துச் செயல்படுத்த வேண்டும். காவலர்களுக்குத் தனியார் பொறியியல் கல்லூரிகளில் இலவசமாகக் கணினிப் பயிற்சி அளிக்கலாம்.

*முற்பகல் 11–00*

சாலை விபத்துகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. உலகத்திலேயே சுமார் 12 இலட்சம் மக்கள், சாலை விபத்துகளால் மடிந்து கொண்டிருக்கிறார்கள். உயிரிழப்பு அதிகமாக உள்ள நாடுகளிலே இந்தியாவும் ஒன்று. தமிழ்நாட்டிலே 2007–இல் 12 ஆயிரத்து 30 பேர் உயிரிழந்து இருக்கிறார்கள். மகாராஷ்டிரம், ஆந்திரம் மற்றும் உத்தரப்பிரதேசத்திற்கு அடுத்து அதிகமான உயிரிழப்பு உள்ள மாநிலம் தமிழகம்தான். 2007–இல் பதிவான வாகன விபத்துகள் 55,335. இந்தியாவில் அதிகமாக வாகனங்கள் கொண்ட மாநிலம் மகாராஷ்டிரம். இரண்டாவது இடம் தமிழ்நாடு. தமிழ்நாட்டில் வாகன எண்ணிக்கை 1 கோடியே 69 ஆயிரம். 1964–லே சென்னை மாநகரத்திலே மட்டும் வாகனங்கள் எண்ணிக்கை வெறும் 24,000 என்பது, இப்போது 30 இலட்சமாக உயர்ந்திருக்கிறது. அதனாலே விபத்துகள் அதிகமாகின்றன. உயிரிழப்புக்கள் கூடுகின்றன. ஆகவே, சென்னை மாநகரில் நெரிசலைக் குறைக்கவும், விபத்துகளைக் குறைக்கவும், உயிரிழப்புக்களைத் தடுக்கவும், சாலைப் பயணத்தை இனிமையாக ஆக்கவும் வழிவகை காண்பதற்கு 'சென்னை மாநகரப் போக்குவரத்து ஆலோசனைக் குழு' ஒன்று அமைக்கப்பட வேண்டும். அதிலே வல்லுநர்கள், பொறியாளர்கள், காவல் துறை அலுவலர்கள், விஞ்ஞானிகள், சமூக சேவகர்கள், அறிஞர்கள், நிருவாகிகள் ஆகியோர் இடம்பெற வேண்டும். அக்குழுவினரின் அறிக்கையை ஆய்வு செய்து சென்னை மாநகரின் நெரிசலைக் குறைக்க வேண்டும்; விபத்தைக் குறைக்க வேண்டும்; சாலைப் பயணத்தை இனிமையாக்க வேண்டும். தமிழகத்திலே, சாலை விபத்துகள் தொடர்ந்து அதிகரித்தவண்ணம் உள்ளன. 2006 ஆம் ஆண்டு 9,000 ஆக இருந்த சாலை விபத்து மரணங்கள், 2007–லே 12,036 ஆக உயர்ந்துள்ளன. அதற்குப் பல்வேறு காரணங்கள் இருந்தாலும், போக்குவரத்து விதிகள் சரிவர ஓட்டுநர்களால் கடைப்பிடிக்கப்படாததும் ஒரு முக்கிய காரணமாகும். ஓட்டுநர் உரிமம் பெறுபவர்களில் பெரும்பாலானவர்கள், எந்தவிதப் போக்குவரத்து விதிகளையும் தெரியாதவர்களாகவே உள்ளனர். அரசு மற்றும் தனியார் கூட்டுறவுடன் விரைந்து ஆரம்பிக்கப்படவுள்ள இலவச மருத்துவ ஆம்புலன்ஸ் வசதி, நிச்சயமாக சாலை விபத்து மரணங்களைக் குறைக்குமென்ற நம்பிக்கை இருக்கிறது.

தமிழகக் காவல் துறை Scotland Yard போலீசுக்கு எந்தவிதத்திலும் தாழ்ந்தது இல்லை எனப் பல முறை நமது காவல் துறை நிரூபித்துள்ளது. சென்னைக் காவல் துறை மட்டுமின்றி தமிழ்நாடு காவல் துறையிலேயும்



ஆயிரக்கணக்கான பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. தமிழகக் காவலர்கள் அதிக அளவில் பணிப் பளுவைச் சுமந்து வருகிறார்கள். காவல் துறையைச் சார்ந்தவர்கள் வெயிலென்றும், மழையென்றும், பனியென்றும் பாராமல் மிகக் கடுமையான பணிகளிலே தங்கள் உயிரையும் பணயம் வைத்து, குடும்பங்களையும் மறந்து மிகச் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார்கள். போக்குவரத்துக் காவலர்கள் கடும் வெயிலிலே, வாகனங்கள் கக்கும் புகையின் மத்தியிலே நின்று, சிறப்பாகப் பணிபுரிந்து வருகிறார்கள். பல நேரங்களில் தமிழகக் காவல் துறையினர், குற்றம் நிகழ்ந்து 10 மணி நேரத்திற்குள்ளாகக்கூட குற்றவாளிகளைக் கண்டுபிடித்து தண்டனை வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். அவ்வாறு மக்களுக்குச் சேவை செய்துவருகிற காவலர்கள், 24 மணி நேரமும் ஓய்வு ஒழிச்சலில்லாமல் பணியாற்றி வருகிறார்கள். தங்கள் குடும்பத்திற்காக வேண்டிய நேரம் ஒதுக்குவதில்லை. உற்றார் உறவினர்களின் குடும்ப நிகழ்ச்சிகளில்கூட அவர்களால் பல நேரங்களிலே பங்குகொள்ள முடியவில்லை. இப்படிக் கடுமையான, பலவித இடர்ப்பாடுகளுடன் மக்களுக்குச் சேவை செய்துவருகின்ற காவலர்களின் குழந்தைகள் நல்ல கல்வியறிவு பெற்றிட, காவல் துறைப் பணியாளர்கள் மற்றும் அதிகாரிகளின் குழந்தைகள் கல்வி பயில்வதற்காகத் தனியாக ஆங்காங்கே சென்னை, சேலம், மதுரை, திருச்சி, கோயம்புத்தூர் என இப்படி ஒவ்வொரு ஊரிலேயும் காவலர்களுக்காக, காவலர்களுடைய குழந்தைகள் படிப்பதற்காகத் தனியே பள்ளிக்கூடங்களையும், பொறியியல் கல்லூரிகளையும், மருத்துவக் கல்லூரிகளையும் அமைத்துக் கொடுக்க வேண்டும். ஏனென்று சொன்னால், இப்போது தமிழகத்திலே புதிதாக மருத்துவக் கல்லூரிகளை அமைக்கிறீர்கள், பொறியியல் கல்லூரிகள் இந்த ஆண்டு 100 பொறியியல் கல்லூரிகளுக்குமேல் வரவிருக்கின்றன. தமிழக அரசு 4 பொறியியல் கல்லூரிகள் தொடங்குவதாக அறிவித்திருக்கிறது. அதிலே ஒரு 50 விழுக்காடாவது அந்தக் காவல் துறையிலே பணியாற்றுகின்ற அரசு அதிகாரிகள், காவல் துறையைச் சேர்ந்தவர்களுக்கு ஒதுக்கித் தர வேண்டுமென்ற ஒரு பணிவான வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னை மாநகரக் காவல் துறையிலே, அடிப்படைக் காவலர் பதவியிலிருந்து உதவி ஆய்வாளர் மற்றும் ஆய்வாளர் பதவி வரையிலும் 2,000 இடங்கள் காலியாக நிரப்பப்படாமல் உள்ளன. அதன் விளைவாக, 2006 ஆம் ஆண்டில், பொருட்களை அபகரிக்கவேண்டி நடந்த 10 படுகொலைகளும், 58 கொள்ளைச் சம்பவங்களும், கதவை உடைத்து வீடு மற்றும் கடைகளில் நடந்த 560 கொள்ளைகளும், 1,108

திருட்டுகளும், வழிப்பறிகளும் நடைபெற்றுள்ளன. காவலர் பணியிடங்கள் தொடர்ந்து நிரப்பப்படாத காரணத்தினால், இதே நிலை 2007 ஆம் ஆண்டும், 10 கொலைகளும், 74 கொள்ளைகளும், 654 கதவுகளை உடைத்து நடைபெற்ற கொள்ளைகளும், 1,106 திருட்டுகளும் நடைபெற்றிருக்கின்றன.

சென்னை மாநகரக் காவல் துறையிலே, 14,000–க்கும் குறைவில்லாமல் காவலர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்று அனுமதி வழங்கப்பட்டது. ஆனாலும் 2,000 பணியிடங்களுக்கு மேல் காலியாக உள்ளன. உதாரணமாக, மாதவரம் பகுதியிலே 360 காவலர்கள் பணியாற்ற வேண்டிய இடத்தில், 179 காவலர்கள்தான் உள்ளனர். வண்ணாரப்பேட்டைப் பகுதியிலே 450 பணியிடங்கள் உள்ளன. பூக்கடைப் பகுதியில் 216 இடங்கள் காலியாக உள்ளன. அம்பத்தூர் பகுதியிலே அனுமதிக்கப்பட்ட 750 காவலர் பணியிடங்களில், 225 பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. அவசரகாலத் தேவைக்குப் பயன்படுகின்ற ஆயுதப் படை காவல் பிரிவில் சுமார் 400-க்கும் அதிகமான இடங்கள் நிரப்பப்பட வேண்டியுள்ளன. இவை எல்லாவற்றையும் விஞ்சும் வகையில், எண்ணூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் ஒரு ஆய்வாளர் மற்றும் 2 துணை ஆய்வாளர்கள் அடங்கிய 13 காவலர்கள் பணியாற்ற வேண்டிய இடத்தில், ஒரேயொரு மகளிர் காவலர் மட்டும் மொத்த காவல் நிலையத்தையும் நிருவகித்து வருவது, எத்தகைய சிறப்பான சேவையைச் செய்ய இயலும் என்பதை இங்கே நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன். இதுமாதிரியான நிலைக்குக் காவலர்களே முக்கிய காரணமாக இருந்து வருகிறார்கள். எப்படியிருந்தாலும், பெரும்பான்மையான காவலர்கள் சென்னை மாநகரின் மத்தியப் பகுதியில் மட்டும் பணியாற்ற விரும்புகிறார்கள். அதற்காகச் சென்னை மாநகரத்தினுடைய காவல் துறைப் பணிகளை உடனடியாக நிரப்புவதற்கு இந்த அரசு ஆவன செய்யவேண்டும் என்று நான் கோரிக்கை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11–05

இலங்கைவாழ் தமிழர்கள் பிரச்சினை தீரும் வரை, தமிழகக் கடலோரப் பகுதிகளை மிகக் கவனத்துடன் பாதுகாக்க வேண்டியது மிக அவசியமாகும். கடற்கரைப் பாதுகாப்புப் படைக்கும், இந்தியக் கப்பற்படைக்கும் தேவையான அனைத்து ஒத்துழைப்பையும் தர வேண்டியது தமிழக அரசின் கடமையாகும். ஏன் நான் இந்தக் கருத்தை வலியுறுத்துகிறேன் என்றால், ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மாதமும்,



ஒவ்வொரு வருடமும் கண்ணில் எண்ணெய் விட்டுக்கொண்டு தமிழக அரசு, தமிழக எல்லையோரங்களில் மட்டுமல்லாமல், தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளையும் எந்தவிதமான தீவிரவாத இயக்கங்களின் ஊடுருவலோ, நடமாட்டமோ அல்லது அவர்கள் ஆதிக்கம் வளர்ச்சியடையவோ இடம் தந்துவிடக் கூடாது. அழுத்தமாக இதனை வலியுறுத்துவதற்குக் காரணம், காங்கிரஸ் கட்சியின் தலைமையிலே மத்தியிலே ஆட்சி செய்துகொண்டிருக்கின்ற அரசாங்கம், சிறப்பாகச் செயல்படுவதற்கு இங்கே கலைஞரின் தலைமையிலுள்ள அரசு, வலுவான மற்றும் மக்கள் ஏகோபித்த ஆதரவு பெற்ற அரசாக இருக்கவேண்டியது அவசியமாகும்.

எங்குப் பார்த்தாலும் தொழில் வளர்ச்சி, வேலைவாய்ப்பு பெருகுதல் என மாநிலத்தில் நடந்துகொண்டிருக்கின்ற இப்படிப்பட்ட ஒரு சுமுகமான சூழ்நிலையில், மாநிலத்தில் எந்தவொரு பகுதியும் தீவிரவாதத்தினாலோ, பிரிவினைவாதத்தினாலோ, சமூக விரோதத்தினாலோ தமிழகத்தில் ஏதோ ஒரு மூலையில் வெடிகுண்டு வெடித்தால், இந்த அரசைப் பாராட்டிக் கொண்டிருக்கின்ற மக்கள் அரசுக்கு நேர் எதிராக மாறிவிடும் மனநிலை உள்ள தமிழக மக்களாக இருப்பார்கள். எதையும் தாங்கிக்கொள்ளும் தமிழக மக்கள், வெடிகுண்டு கலாச்சாரத்தை எக்காரணத்தைக் கொண்டும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்பதைத் தமிழக மக்கள் அருமைத் தலைவர் ராஜீவ் காந்தி படுகொலை மூலமாக நிரூபித்துவிட்டார்கள். எனவே, தமிழகத்தில் கலைஞர் அவர்கள் தலைமையிலே வீறுநடை போடுகின்ற அரசு, எவ்விதமான சிக்கல்களிலும் சிக்கிவிடாமல் இருக்க வேண்டும் என்ற சிந்தனை, காங்கிரஸ் கட்சிக்கு மேலோங்கியிருக்கின்ற காரணத்தினால், நான் இதை மீண்டும் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். தீவிரவாதத்தையோ, தீவிரவாத சக்திகளையோ, பிரிவினைவாத சக்திகளையோ வளர விட்டுவிடக் கூடாது. அது இலங்கையிலிருந்து வந்தாலும் சரி, அல்லது நக்ஸலைட்டுகள் வடிவிலே வந்தாலும் சரி, அல்லது சமூக விரோதிகள் மூலமாக உருவெடுத்தாலும் சரி, ஜாதி அல்லது மதவாத சக்திகளாக இருந்தாலும் சரி, இவை அனைத்தையும் இரும்புக் கரம் கொண்டு அடக்கவேண்டும் என இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன். இப்படிச் செய்வதன்மூலமாக அரசின்மேல் மக்களுக்கு மேலும் நம்பிக்கை ஏற்படும்; இந்த நம்பிக்கை, மேலும் பாராட்டுதல்களாக முதல்வரைச் சென்றடையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விடுதலைப் புலிகள்மீதுள்ள தடை, முடியும்தறுவாயில் உள்ளது. விடுதலைப் புலிகளின் ஊடுருவல், ஆயுதக் கடத்தல், வெடிபொருட்கள் கடத்தல் எனத் தீவிரவாதச் செயல்பாடுகள் விடுதலைப் புலிகளிடையே இன்னும் நிலவுவதால், தமிழக அரசு, மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்து, விடுதலைப் புலிகள்மீதுள்ள தடையை மேலும் நீடிக்க ஆவன செய்ய வேண்டும். விடுதலைப் புலிகளை, சில தமிழகக் கட்சிகள், அமைப்புகள், வெளிப்படையாகவே ஆதரித்து, கூட்டம், பேரணி, கருத்தரங்கு என நடத்துவதால், அத்தகைய கட்சிகள் மற்றும் அமைப்புகள்மீது கடுமையான நடவடிக்கை எடுத்து, அந்தக் கட்சிகளையும், அமைப்புகளையும் தடை செய்யவேண்டும்.

சமீப காலமாக தமிழக மண்ணிற்குப் புதிதாக அறிமுகமாகியுள்ள பல கலாச்சாரங்களில் ஒன்றுதான், பட்டப் பகலிலே ஓட ஓட விரட்டி, நீதிமன்ற வளாகத்திற்குள்ளேயும், பல்லாயிரக்கணக்கான மக்கள் முன்னிலையிலே கடை வீதிகளிலேயும் கழுத்தைச் சீவுதல், கால் கைகளை வெட்டியெறிதல் என, ஒரு நவீன பாணி ரவுடியிசம் தலைவிரித்தாடிக் கொண்டிருக்கிறது. தமிழகம் ரவுடிகள் இல்லாத இராஜ்ஜியமாக இருக்க, சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர, Encounter முறை அறவே கூடாது என்று சிலர் சொல்கிறார்கள். அரசியல்வாதிகள், காவல் துறை, ரவுடிகள் என இவர்களிடையே உள்ள தொடர்புகள் துண்டிக்கப்பட வேண்டும். இத்தகைய கொலைகள் செய்கின்ற ரவுடிகளையும், கொலையாளிகளையும் விரட்டிச் சென்று பிடிக்கச் சென்ற காவலர்கள்மீது அதிரடி ஆயுதத் தாக்குதல் நடத்தி, நாட்டு வெடிகுண்டுகளை வீசியெறிதல் போன்ற வியக்கத்தக்க சினிமா பாணியில், காவலர்கள்மீது கடும் தாக்குதல்களைக் கையாள்கின்ற இத்தகைய ரவுடிகளை, திரைப்பட கதாநாயகன்போல் வெறும் கையாலேயே ரவுடிகளைப் புரட்டி எடுப்பது என்பது, சினிமாவிற்கு மட்டுமே பொருந்தும். இத்தகைய ரவுடிகள் தாக்குதல்களிலிருந்து தங்களைத் தாங்களே காத்துக்கொள்வதற்குக் காவலர்களுக்கு இருக்கின்ற ஒரே வழி, தற்காப்பு நடவடிக்கை—Self-defence. அதைத்தான் ஒருசிலர் Encounter என்று பெயரிட்டு அழைத்துக் கொண்டிருக்கிறார்கள். எந்த வொரு Encounter-ஐயும், எந்தவொரு காவலரும் பொழுதுபோக்கிற்காகக் கையாளமாட்டார்கள்.

*முற்பகல் 11-10*

ஒன்று, தங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளவும் அல்லது ஏனைய உயிர்களை நிழலுலக தாதாக்களிடமிருந்து காப்பாற்ற வேண்டியும்



encounter என்கின்ற இறுதி ஆயுதத்தைத்தான் கையில் எடுக்கிறார்கள். நிழலுலக தாதாக்களின் சொர்க்க பூமியாக விளங்கிய மும்பை, இன்று அவர்கள் கையிலே இருந்து விடுபட்டிருக்கிறது என்றால், அதற்கு முதல் காரணம் encounter-களே! எக்காரணத்தைக் கொண்டும் encounter-கள் சுய இலாபத்திற்காகவோ அல்லது தனிப்பட்ட பகையைத் தீர்த்துக்கொள்வதற்காகவோ பயன்படுத்தப்பட்டதை அவ்வளவு சீக்கிரமாக யாராலும் மூடி மறைத்துவிட முடியாது. எனவே, ரவுடிகள் இராஜ்ஜியம் உருவாகாமல் இருக்க, காவல் துறை அதிகாரிகளின் சுய பாதுகாப்பு நடவடிக்கை அவசியமே!

நீதிமன்ற வளாகத்திற்குள்ளேயே வழக்கறிஞர்கள் படுகொலை செய்யப்படுகின்ற அவல நிலை இன்றைக்குத் தொடருமேயானால், நாளைக்கு நியாயம் வழங்கவேண்டிய நீதியரசர்களைக்கூட ரவுடிகள் பரம்பரை விட்டுவிடாது. அத்தகைய சூழ்நிலைகள் உருவாகாமல் இருக்க, கொலைவெறிப் பிடித்தாடும் நிழலுலகத் தாதாக்கள், ரவுடிகள், குண்டர்கள், கூலிக்குக் கொலை செய்கிற கூலிப் படைகள் ஆகிய அனைவரும் முளையிலேயே கிள்ளியெறியப்பட வேண்டும். அப்போதுதான் தமிழகம் ஒரு அமைதிப் பூங்காவாக இருக்கும்.

கடந்த காலத்தில் மக்களை ஏய்த்துப் பிழைக்கும் பல வழிகளைப் பலபேர்கள் கையாண்டுள்ளனர். மக்களை கவர்ச்சிகரமான விளம்பரம்மூலம் மயக்க வைத்தும், நெற்றி வியர்வை நிலத்தில் விழ அவர்கள் சம்பாதித்த பணத்தையெல்லாம் A.C. room-ல் அமர்ந்துகொண்டு சட்ட ரீதியாகக் கொள்ளையடித்த கும்பல்கள் பல. சீட்டுப் பண்டு, தேக்கு மரம் வளர்த்தல், ஆடு வளர்த்தல், சங்கிலித் தொடர், வியாபாரம் எனப் பலவித வடிவில் உருவெடுத்து வந்து, மக்களைக் கொள்ளையடித்தது போதாது என, தற்போது வெளிநாட்டுப் பகற் கொள்ளையர்களும், தமிழக மக்களின் கோடானு கோடி பணத்தை அள்ளிக்கொண்டு போய்க்கொண்டிருக்கிறார்கள். மக்கள் கவர்ச்சிகரமான விளம்பரங்களைக் கண்டு ஏமாறுவது என்பது அவர்கள் செய்கிற மாபெரும் தவறு என்பது உண்மைதான். ஆனால், அதேநேரத்திலே புதிது புதிதாக திடீரென்று உருவாகும் கம்பெனிகள் மிகப் பிரம்மாண்டமான, கவர்ச்சிகரமான விளம்பரங்களை ஆரம்பித்தவுடனேயே காவல் துறை அதன் பின்னணியைத் துப்புத் துலக்கிப் பொது மக்களுக்கு அக்கம்பெனியின் உண்மைகளை எடுத்துரைக்க வேண்டியது காவல் துறையினுடைய கடமையாகும். துரதிருஷ்டவசமாக, ஆயிரக்கணக்கான மக்கள் போலிக் கம்பெனிகளை நம்பி தங்களின் கடும் உழைப்பால் ஈன்ற பணத்தை

அக்கம்பெனிகளிடம் கொடுத்து ஏமாறுவதை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருப்பதோடு, கொள்ளையடித்த கோடானு கோடிகளை அள்ளிக் கொண்டு கம்பெனிகள் ஓடுவதைக் கண்ணால் பார்த்தும், காதால் கேட்டும்கூட எந்த நடவடிக்கையும் எடுக்காத காவல் துறை, 'எங்கள் பணம் பறி போய்விட்டது' என ஓலமிட்டுப் புகார் மனுக்களுடன் காவல் நிலையங்களில் மைல் கணக்கிலே 'queue' வரிசையிலே மக்கள் வந்து நிற்கும் வரை காத்திருக்க வேண்டாம் என்பதுதான் என்னுடைய கருத்து. தயவுசெய்து போலியான விளம்பரங்களையும் மக்களை ஏமாற்றிப் பணம் பறிப்பதையும் தங்கள் தொழிலாகக் கொண்ட அந்தக் கும்பல்களை முளையிலேயே கிள்ளியெறிய இந்த அரசு ஆவன செய்ய வேண்டும்.

குறிப்பாக, கடந்த ஒரு வார காலமாகத் தங்கக் காசு மோசடிக் கம்பெனியைப்பற்றி—Gold Quest—பத்திரிகைச் செய்திகள் வந்தவண்ணம் உள்ளன. இலட்சக்கணக்கான மக்கள் பல நூறு கோடி ரூபாய்களைப் பறிகொடுத்திருப்பதையும், பத்திரிகைகள் எழுதியவண்ணம் உள்ளன. இந்த மோசடிக் கம்பெனியைக் காப்பாற்ற, சில முக்கியஸ்தர்கள் மும்முரமாக ஈடுபட்டிருப்பதை அறிந்து நான் மிகவும் வேதனைப்படுகிறேன். இதுவரை, தங்கக் காசு கம்பெனியைச் சேர்ந்த ஏழு நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இதில் சம்பந்தப்பட்ட அனைவரும் குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்டு, அவர்களின் சொத்துக்களை அரசு பறிமுதல் செய்து, பாதிக்கப்பட்ட பொது மக்களுக்குத் திரும்ப வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். அந்த Gold Quest மோசடிக் கம்பெனியைத் தப்புவிப்பதற்கு உதவிபுரிகின்ற பெரிய மனிதர் யார் என்பதை மக்களுக்கு அடையாளம் காட்ட வேண்டும் என்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

நேற்றைக்குக்கூட, சென்னை அண்ணா நகர், கம்ப்யூட்டர் கம்பெனியிலே வேலை வாங்கித் தருவதாக, படித்த, பொறியியல் பட்டதாரிகளை ஏமாற்றி, பல கோடிகளை ஏப்பம் விட்டுள்ள கும்பல்கள்மீதும் அரசு தனிக் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

போதைப் பொருளைக் கடத்துவதும், பிடிபடுவதும் தொடர் நிகழ்ச்சியாக நடந்து வருகிறது. அவர்கள்மீதும் கடுமையான நடவடிக்கையை இந்த அரசு எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



எங்களுடைய கட்சியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், இந்த மன்றத்தினுடைய தலைவராக இருந்த எங்கள் கட்சித் தலைவராகவும் இருந்த திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள் 1–10–2005 அன்று ஊரில் இல்லாதபோது, அவர்களுடைய வீட்டின் பூட்டை உடைத்து, எல்லா இடங்களிலும் எல்லாப் பூட்டுக்களையும் உடைத்து, சோதனை செய்திருக்கிறார்கள். அங்கே பணம் இருந்திருக்கிறது; அந்தப் பணத்தை எடுக்கவில்லை.. நகை இருந்திருக்கிறது; அதை எடுக்கவில்லை. அங்கே பணம் எதுவும் திருடு போகாமல், அத்தனை தஸ்தாவேஜுகளையும் எடுத்துப் பிரித்துப் பார்த்து, ஏதோ குற்றம் செய்ய முனைந்திருக்கிறார்கள். அவர்கள் யார் என்பதை நம்முடைய முதலமைச்சர் அவர்களிடம், திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் முறையிட்டிருக்கின்றார்கள். அவருடைய அச்சமெல்லாம் நம்முடைய முன்னாள் காவல் துறை அதிகாரிகளே செய்திருப்பார்களோ, அல்லது உளவுத் துறைப் பிரிவைச் சார்ந்தவர்கள் செய்திருப்பார்களோ என்ற அச்சம் அவர்களுக்கு இருக்கிறது. அதைப் போக்க வேண்டியது நம்முடைய கடமை என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11–15*

அதேபோன்று சென்னை, பாண்டிபஜார் போன்ற பகுதிகளிலே சமீப காலமாக புற்றீசல்போல் அதிகரித்து வரும் புதிய தொழில், சூதாட்டம். அந்தச் சூதாட்டங்கள் பல, சிறிய, நடுத்தர மற்றும் பெரிய அளவில் நடைபெற்று வருகின்றன. இன்று பெரிய அளவில் நடத்தி, மிகப் பெரிய அளவில் சூதாட்டத்தின்மூலம் பணம் சம்பாதிக்கிற சமூக விரோதிகள் ஏழையெளிய மக்களைக் கொள்ளையடிப்பதோடு மட்டுமல்லாமல், காவலர்களையும் பெரிய அளவில் கறைபடியச் செய்துவிடுகிறார்கள். அவர்கள்மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1973 ஆம் ஆண்டு தமிழக முதல்வர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் Sub-Inspector பணிக்கு நேரடி நியமனம் செய்யப்பட்டவர்கள், தற்போது கூடுதல் காவல் கண்காணிப்பாளர் பணியிலே உள்ளார்கள். இவர்களுக்கு முன்னர் 1966, 1970 மற்றும் 1972 ஆம் ஆண்டுகளில் Sub-Inspector–களாக நேரடியாக நியமனம் செய்யப்பட்டவர்கள் அனைவரும், காவல் கண்காணிப்பாளர்களாக பதவி உயர்வு பெற்று ஓய்வு பெற்றனர். அவர்கள் 2001–2006 ஆம் ஆண்டு வரை பணியாற்றியபோது, அன்றைக்கிருந்த அண்ணா திராவிட முன்னேற்றக்

கழக அரசு, காவல் துறையிலே பெண் அதிகாரிகளை வரதட்சணைத் தடுப்பு அதிகாரிகள் என்ற பெயரிலே நியமனம் செய்து, அவர்களை இந்தப் பதவியிலே அமர்த்திவிட்டார்கள். அதனாலே அவர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மணல் திருடுதல், மின்சாரம் திருடுதல், சூதாட்ட நிலையங்கள், திரைப்பட வி.சி.டி.க்களைப் போலியாகத் தயாரித்து விற்றல், போலி மருந்து தயாரிப்பு, Hi-Tech விபச்சாரம், போலி லாட்டரி டிக்கெட்டுகள் விற்பனை போன்ற வெள்ளைக் காலர் குற்றங்கள்மூலமாகத்தான் கோடிக்கணக்கான குற்றப் பணம் புரள்கிறது. இங்கேதான் சமூக விரோதிகள் கோடீஸ்வரர்களாகிறார்கள். சமூக விரோதிகளிடம் பெரும் பணம் சேர்வது, நமது சமுதாயத்தின் அடித்தளத்தையே ஆட்டிவிடும் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே இக்குற்றங்கள் வேரோடும், வேரடி மண்ணோடும் ஒழிக்கப்பட வேண்டும்.

நம்முடைய இயற்கைச் செல்வமான மணல், வெளி மாநிலங்களுக்குக் கடத்தப்படுவது தமிழகத்தின் சுற்றுப்புறச் சூழ்நிலைக்கு மிகப் பெரிய ஆபத்தை விளைவிக்கும். தினசரி ஆயிரக்கணக்கான லாரிகளில் நம்முடைய இயற்கை வளத்தை அண்டை மாநிலத்தைச் சார்ந்தவர்கள் வரைமுறையில்லாமல் அள்ளிக்கொண்டு போவதை அனுமதிக்க முடியாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரடியாகத் தலையிட்டு, கேரளா, கர்நாடகா போன்ற அண்டை மாநிலங்களுக்குப் போவதை உடனடியாகத் தடை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் மணல் விலை தமிழகத்தில் உடனடியாகக் குறையும்; மக்களும் உங்களை வாழ்த்துவார்கள்.

முதல்வர் தலைமையிலே மிகச் சீரிய முறையில், ஏனைய மாநிலங்களுக்கு முன்னுதாரணமாகவும் விளங்குகிற இந்த அரசு, மற்ற மாநிலங்களுக்கு மீண்டும் ஓர் வழிகாட்டியாகத் திகழ வேண்டும் என்ற ஆவலின் காரணமாக ஓர் ஆலோசனையை இந்த அவையின் முன்னே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மருத்துவர்கள், பொறியாளர்கள், சட்ட வழக்கறிஞர்கள் போன்ற துறைகளுக்கென குறிப்பிட்ட பாடத் திட்டத்துடன்கூடிய பட்டப் படிப்புகள் இருப்பதுபோல், காவல் துறைக்கும், காவலர்களாக, ஆய்வாளர்களாக, மாவட்டக் கண்காணிப்பாளர்களாகப் பதவி பெற, சிறப்புப் பட்டப் படிப்பு மற்றும்



மேல் படிப்புக் கல்வி அளிக்கக்கூடிய வகையில், சிறப்புப் பாடத் திட்டத்துடன்கூடிய கல்வி நிலையங்கள் அமைப்பதன்மூலமாக மாணவப் பருவத்திலேயிருந்தே காவல் துறையில் கண்ணியத்தை அவர்கள் மனதில் பதிய வைத்து, இத்துறைக்குத் தேவையான கல்வியறிவை அவர்களுக்குப் போதிக்க முடியும். இவ்வாறு செயல்பட்டால், தமிழகம் மிகச் சிறந்த நன்கு பயிற்சி பெற்ற, உண்மையிலேயே மக்கள் நண்பர்களாகச் செயல்படுகின்ற காவலர்களை உருவாக்கி, பாரத நாட்டின் ஏனைய மாநிலங்களுக்கு ஒரு முன்மாதிரியாகத் திகழ முடியும். அத்தகைய நிலையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்படுத்தித் தர வேண்டும் என நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சமுதாயத்திற்குத் தேவைப்படுகின்ற ஒவ்வொரு துறைக்கும் அதற்கென உள்ள சிறப்புக் கல்வி நிலையங்கள்மூலம் பயிற்சி பெற்றவர்களே பணியில் அமர்த்தப்படுகிறார்கள். ஆனால் எல்லாவற்றையும்விட அதிகமாக சமுதாயத்தைப் பாதுகாக்கும் மிக முக்கியப் பணியிலே உள்ள காவல் துறைக்கென ஒரு தனிப்பட்ட பாடத் திட்டமோ, பயிற்சி நிலையமோ இல்லை. இப்போது உள்ள நடைமுறையில் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னரே அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அதுவும் மிகக் குறுகிய காலப் பயிற்சிதான் தரப்படுகிறது. கறைபடாத கரங்களுடைய அரசு ஊழியர்களாக காவல் துறையினர் செயல்படும்போதுதான், காவலர்களை உண்மையிலே மக்கள் நண்பர்களாக உருவாக்க முடியும். டாக்டர் கலைஞர் முதல்வராக இருக்கின்ற இந்த நேரத்தில், இத்தகைய ஒரு புதிய பாடத் திட்டத்தினை, படிப்புகளை காவலர்களுக்கென உருவாக்கித் தர வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11–20*

ஒவ்வோர் ஆண்டும், கடந்த 10 ஆண்டுகளில், தொடர்ச்சியாக மதுபானக் கடைகள்மூலமாக அரசின் வருவாய் தொடர்ந்து அதிகரித்து வருகிறது என்பதைக் காட்டுகிறது. பழைய, பழகிப்போன மதுப் பிரியர்களைப்பற்றி நாம் அதிகம் கவலைகொள்ள முடியாவிட்டாலும்கூட, புதிய தலைமுறை, புதிதாக மது அருந்தப் பழக நேர்ந்திருப்பதைப்பற்றி நாம் கவலைப்பட்டேயாக வேண்டும். இளைய தலைமுறையினர் புதிய 'குடிமகனாக' உருவாவதை அரசு தடுத்து நிறுத்த ஆவன செய்யவேண்டும். ஒரு பத்திரிகைச் செய்தி, மிக

அதிர்ச்சியூட்டத்தக்க விஷயத்தைக் கூறியுள்ளது. அதாவது, நாட்டின் மொத்த மது உபயோகிப்பாளர்கள், கம்ப்யூட்டர் நிறுவனங்களிலே பணியாற்றும் ஆண்களும், பெண்களும் அதிக அளவிலே மதுவைப் பருக ஆரம்பித்திருக்கிறார்கள் என்ற செய்திதான் அது. வருங்காலச் சந்ததிகளை உருவாக்க வேண்டிய இளம் தலைமுறையினர், குறிப்பாக அந்த இளைஞர்கள், மதுப் பழக்கத்திற்கு ஆளாவதைத் தடுக்க அரசு ஆவன செய்ய வேண்டுகிறேன்.

இன்னும் ஓர் அதிர்ச்சியான பத்திரிகைச் செய்தியைக் காண நேர்ந்தது. ஐந்து நட்சத்திர ஓட்டல்களிலே வெளிநாட்டு மது பானங்கள் மிகக் குறைந்த விலையில் கிடைக்கும் என்பதுதான் அந்தச் செய்தி. மளிகைச் சாமான்கள் விலை குறைந்தால், பெண்கள் மகிழ்ச்சியடைவார்கள். ஆனால், துரதிருஷ்டவசமாக நவீன தொழில்நுட்ப வளர்ச்சி, அறிவு வளர்ச்சி ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள ஆண்களும், பெண்களும் ஐந்து நட்சத்திர ஓட்டல்களிலே வெளிநாட்டு மதுபானங்களின் விலை குறைவதைக் கண்டு மகிழ்ச்சியடைகின்ற காலக்கட்டத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். இத்தகைய நிலையை மாற்ற, மது பானங்களின் விலையைப் பன் மடங்கு அதிகரிக்க வேண்டும். இதன்மூலம் கம்ப்யூட்டர் கம்பெனியிலே பணியாற்றும் ஆண்களும், பெண்களும் தங்கள் உடலை வருத்தி, கணினியின்முன் பல மணி நேரங்கள் அமர்ந்து, கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தை மதுவிற்காகச் செலவிடுவதைத் தவிர்க்க முடியும்.

மதுபான விற்பனையில் நிருவாகக் கோளாறு மற்றும் கணக்கில் கொண்டு வரப்படாமல் செய்த விற்பனை போன்ற காரணங்களால் அரசுக்கு வரவேண்டிய வருவாய், திசை மாறி வேறு எங்கோ சென்றுவிட்டது. ஆனால், கலைஞர் தலைமையிலே நடந்து வருகின்ற இந்த அரசு சிறப்பான, நேர்மையான நிருவாகத்தின் காரணமாகத் தமிழக அரசுக்கு 2,786.10 கோடி ரூபாய் வருமானத்தை அதிகரித்துத் தந்திருக்கிறது. 2005–2006–இலே ரூ.6,030.77 கோடிக்கு விற்பனையான மது, இன்றைக்கு ரூ.8,816.87 கோடியாக உயர்ந்திருக்கிறது. அதேபோன்று, 2006–2007–இலே 271.54 இலட்சம் பெட்டிகள் மதுவாகவும், 177.33 இலட்சம் பெட்டிகள் பீராகவும் விற்பனையாகிக்கொண்டிருந்தது. மதுப் பிரியர்கள் இன்றும் அதே அளவிலேதான் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், அது இன்றைக்கு உயர்ந்திருக்கிறது; 2007–2008–இலே 306.24 இலட்சம் பெட்டிகளாக உயர்ந்திருக்கிறது. பீர் பாட்டில்கள் 196.36 இலட்சம் பெட்டிகளாக உயர்ந்திருக்கிறது. 72.2 இலட்சம் பெட்டிகள் அதிகமாக விற்றிருக்கிறது. 2006–2007–இலே



கணக்கில் காட்டப்பட்டதுதான் இதுவே தவிர, மது பானம் விற்பனை செய்பவர்கள், 6, 7 கம்பெனிகள்தான் இருக்கின்றன என்பதை இந்த நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள். அந்தக் கம்பெனிகளிலேயிருந்து வெளியே போகின்ற மதுவானது, அங்கேயிருக்கின்ற R.D.O., தாசில்தார் முன்னிலையிலே கையெழுத்திட்டுத்தான் வெளியே போகவேண்டும். ஆனால் கடந்த ஆண்டுகளிலே அப்படிப் போகாமல் தாசில்தாரோ அல்லது அந்த R.D.O. கையெழுத்துப் போடாமலேயே போயிருக்கின்ற காரணத்தினாலேதான் விற்பனை குறைந்திருக்கிறது என்பதையும், இந்த அரசு பொறுப்பேற்றவுடனே விற்பனை அதிகரித்திருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தீ ஆக்கவும், அழிக்கவும்கூடிய சக்தி. அதைச் சரியாகப் பயன்படுத்தினால் எரி சக்தி. இல்லையேல் எரிக்கும் சக்தியாகிவிடும். அழிக்கின்ற சக்தி படைத்த தீயை அணைக்க தீயணைப்புத் துறை, தன்னை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்டு எண்ணற்ற மனித உயிர்களையும், உடைமைகளையும் காப்பாற்றி வருகின்றது. தீயணைப்புத் துறை, தீயை அணைத்து மக்களைக் காப்பதோடு மட்டுமன்றி, சமீபகாலமாக இயற்கை உருவாக்குகின்ற பலவித பேராபத்துகளான பூமி அதிர்ச்சி, பெருமழை, வெள்ளம், சுனாமி, மண் சரிவு ஆகியவற்றிலிருந்து மக்களைக் காப்பதோடு மட்டுமல்லாமல், ஒரு சில நேரங்களில் T.V. tower, மின்சார tower, தொலைபேசி tower, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி போன்றவற்றின் உச்சியில் ஏறி நின்று, தற்கொலைக்கு முயலுகின்ற மனிதர்களையும் மீட்டு வருகின்ற நற்பணிகளையும் செய்து வருகிறது. ஓரிரு சம்பவங்களில் ஆழ்குழாய்க் கிணறுகளில் தவறி விழுந்துவிடுகின்ற குழந்தைகளையும் காப்பாற்றுகின்றது.

உயர்நிலைப் பேரிடர் மேலாண்மைக் குழுமம் சிறப்பாகச் செயல்படுவதற்குத் தீயணைப்புத் துறையிடம் பயிற்சியளிக்கின்ற பொறுப்பை இந்த அரசு தந்திருப்பதன்மூலம் தீயணைப்புத் துறை பொறுப்புணர்ச்சியோடு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

தமிழகத் தீயணைப்புத் துறை சிறப்பாகச் செயல்படுவதற்கு இயக்குநரின் தலைமையிலே சீர்திருத்தப்பட்ட நிருவாக அமைப்பை இந்த அரசு உருவாக்கியுள்ளதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழக தீயணைப்புத் துறையிலே மொத்தம் 6,643 நிருவாக மற்றும் செயல் பணியாளர்கள் பணியாற்றுகிறார்கள். இந்தப் பணியாளர்களுடைய எண்ணிக்கையை இந்த அரசு உயர்த்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11–25*

கடைசியாக ஒன்று. என்னுடைய பூவிருந்தவல்லி சட்டமன்றத் தொகுதியிலே 7 காவல் நிலையங்கள் உள்ளன. அவற்றில், பூவிருந்தவல்லி, நசரத்பேட்டை, வெள்ளவேடு, திருநின்றவூர், திருமுல்லைவாயல், முத்தா புதுப்பேட்டை ஆகிய காவல் நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கிடையாது; ஆவடி காவல் நிலையத்திற்கு மட்டும்தான் சொந்தக் கட்டடம் இருக்கிறது. அதனாலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து என்னுடைய சட்டமன்றத் தொகுதியில், பூந்தமல்லியிலோ அல்லது நசரத்பேட்டையிலோ, திருமுல்லைவாயிலிலோ அல்லது திருநின்றவூரிலோ, ஏதாவது இரண்டு இடங்களில் உள்ள காவல் நிலையங்களுக்கு அரசுக் கட்டடங்களைக் கட்டிக் கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆவடியிலேயே துணை ஆணையர் அலுவலகம் புதிதாகக் கட்டிக் கொடுக்கவேண்டும்.

தமிழகத்தில் உள்ள பெரும்பாலான காவல் நிலையங்களில், காவல் துறையினரால் பறிமுதல் செய்யப்படுகின்ற ஏராளமான வாகனங்கள் வருடக் கணக்கிலே அந்தக் காவல் நிலையங்களிலே வெயிலிலும், மழையிலும் தொடர்ந்து இருப்பதன் காரணமாக, அவை துருப் பிடித்து, யாருக்கும் உதவாத பொருள்களாக மாறிவிடுகின்றன. இந்த மாநிலம் முழுவதும் கணக்கிட்டுப் பார்த்தால், கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள வாகனங்கள், நாட்டிற்குப் பெரிய இழப்பை ஏற்படுத்தித் தருகின்றன. இத்தகைய தேசிய இழப்பையும், நஷ்டத்தையும் முடிவுக்குக் கொண்டு வருவதோடு மட்டுமல்லாமல், அரசுக்கும் ஒரு நல்ல வருவாயை ஏற்படுத்தித் தரக்கூடிய வகையில், இந்த அரசு அந்த வாகனங்களையெல்லாம் ஏலம் விட்டு, அதன்மூலம் வரும் வருவாயை அரசு கஜானாவிலே சேர்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மத்திய அரசால் காவல் நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் கட்டித் தரப்படும் காவல் துறை வீட்டு வசதிக் குடியிருப்புகளில், அமைச்சுப்



பணியாளர்களுக்கு வாடகை அடிப்படையில் 15% ஒதுக்கீடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான்கு மண்டலக் காவல் துறை அலுவலகங்களும் (Zonal Office), தமிழ்நாடு சிறப்புக் காவல், சிறப்புப் படைப் பிரிவுக்கும் (Special Forces) தேவையான அமைச்சுப் பணியிடங்களைப் புதிதாக வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

குமரி மாவட்டத்தில் மொத்தம் 33 காவல் நிலையங்கள் உள்ளன. அவற்றிலே துப்புரவு மற்றும் அத்தியாவசியப் பணிகளுக்குத் துப்புரவுப் பணியாளர்கள் உள்ளனர். அவர்கள் இந்தக் காவல் நிலையங்களிலே 25 முதல் 30 வருடங்களாகப் பணிபுரிந்து கொண்டு வருகிறார்கள். ஆனால், அவர்களுக்கு மிகக் குறைந்த சம்பளம் மட்டுமே வழங்கப்படுகிறது. அதிகபட்சமாக 900 ரூபாய் வரை சம்பளம் வழங்கப்படுகின்ற, போலீஸ் நிலையத் துப்புரவுத் தொழிலாளர்கள், மிகவும் ஏழைகள் ஆவார்கள். அவர்களுக்குச் சொந்தமாகக் குடியிருக்க வீடுகள்கூட இல்லாத நிலை காணப்படுகிறது. அதேவேளையிலே, கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு துப்புரவுப் பணியாளர்களாகச் சேர்ந்த பஞ்சாயத்துத் துப்புரவுப் பணியாளர்கள், ஊராட்சி ஒன்றியத் துப்புரவாளர்களைப் பணி நிரந்தரம் செய்து, அவர்களுக்கு ஊதிய உயர்வு 5 ஆயிரம் ரூபாய்வரை வழங்கப்பட்டுள்ளது. எனவே, குமரி மாவட்டத்திலுள்ள காவல் நிலையங்களிலே 25 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணிபுரியும், மிகவும் குறைந்த ஊதியம் பெற்றுவரும் துப்புரவுத் தொழிலாளர்களை, அரசு, பணி நிரந்தரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம், பாலப்பள்ளம் பேரூராட்சியில் மிடாலக்காடு என்ற ஊரில் செயின்ட் மேரீஸ் மருத்துவமனையில் 'சாட்டிவால்' என்ற போதை மருந்து ஜோராக விற்பனை செய்யப்படுகிறது. Bar வைத்து தினமும் 2,000 பாட்டில்கள் விற்பனை செய்து வருகிறார்கள். பலர் அந்த போதை மருந்தைக் குடித்துவிட்டு மாண்டு போகிறார்கள். 4–2–2008–இல் லூக்காஸ் என்பவர் இறந்தபோது, திரு. பெல்லார்மின், எம்.பி., திரு. ஜாண் ஜேக்கப், எம்.எல்.ஏ., திரு. ஜெயபால், எம்.எல்.ஏ. ஆகியோர் போராட்டம் நடத்தியும், 'சாட்டிவால்' போதை மருந்து தடை செய்யப்படவில்லை. அதை உடனடியாகத் தடை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஊர்க் காவல் படை வீரர்களுக்கு ஒரு நாளைக்கு 45 ரூபாய் மட்டுமே வழங்கப்படுகிறது. எனவே, நமது அரசு ஊர்க் காவல் படை வீரர்களுக்கு ஊதிய உயர்வு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பினை வழங்கிய அத்தனை பேருக்கும் நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** 'ஆண்டவனின் தூதுவர்கள் என்று சொன்னவர்கள் முதல், சாதாரண ஏழை மக்கள் வரை சட்டத்தின்முன் அனைவரும் சமம்' என்று நிரூபித்துக் காட்டி, நல்லாட்சி செய்த மாண்புமிகு அம்மாவின் (மேசையைத் தட்டும் ஒலி) தொண்டனாக இந்த அவையிலே காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மானியக் கோரிக்கைகளின்மீது பேச வாய்ப்பளித்த அம்மா அவர்களின் பொற் பாதங்களை வணங்கி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை இந்த அவையிலே பேச அனுமதித்த தங்களுக்கும் என்னுடைய நன்றியை உரித்தாக்கிக்கொள்கிறேன்.

இந்த ஆட்சியில் காவல் நிலையங்களே களவு போகின்றன; தெருவுக்குத் தெரு தீவிரவாதப் பள்ளிகள் திறக்கலாம் என்கிற அளவிற்குச் சட்டம்—ஒழுங்கு நிலை; பலூன்களைக்கூட வெடிக்க பயப்பட்ட அம்மாவின் ஆட்சி எங்கே? கோலிகளைப் போலக் குண்டுகள் கிடக்கும் இந்த ஆட்சி எங்கே? சட்டத்தின் ஆட்சி சாய்ந்துவிட்ட தமிழகத்தில், அதர்மத்தின் ஆட்டத்தைத் தமிழகம் இப்போதுபோல் எப்போதும் கண்டதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு தர்ம தேவதையின் அவதாரம் மீண்டும் நிகழ வேண்டிய நேரம் இது. அந்த தர்ம தேவதையின் அவதாரம் மீண்டும் எப்போது நிகழும் என்று மக்கள் ஆவலோடு எதிர்பார்க்கும் நேரம் இப்பொழுது வந்துவிட்டது.

*முற்பகல் 11—30*

உலக நாடுகளின் எஜமானன் என்று சொல்லப்படுகிற அமெரிக்க நாட்டிலேகூட நிற வெறியை எதிர்த்துப் போராடிய, அந்த நாட்டினுடைய ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாக்கப்பட்டு கொல்லப்பட்டிருக்கிறார். உலகத்தின் அமைதியின் தூதுவன் என்று சொல்லப்பட்ட



John F. Kennedy-கூட அதே நாட்டில் Oswald என்கிற கொடியவனால் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாக்கப்பட்டு கொல்லப்பட்டிருக்கிறார். உலக நாடுகளுக்கு அகிம்சைத் தத்துவத்தை முதலில் எடுத்துரைத்த, அந்தத் தத்துவத்தின்மூலம் போராடி இந்தியத் திருநாட்டுக்குச் சுதந்திரம் வாங்கிக் கொடுத்த அண்ணல் காந்தியடிகள் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையானார். இந்தியத் திருநாட்டில் ஒரு பிடி மண்ணைக்கூட பிரிந்துபோக அனுமதிக்கமாட்டேன் என்று சூளுரைத்த, இந்தியாவின் இரும்பு மங்கை, இருபதாம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற தலைவி, அன்னை இந்திரா காந்தி அவர்கள் தனது பாதுகாப்புப் படை வீரர்களால் சுட்டு வீழ்த்தப்பட்டார். ஆசியாவின் ஜோதி, பண்டித ஜவஹர்லால் நேருவின் பேரன், இருபதாம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற தலைவராக வளர்ந்து வந்த இளந்தென்றல், ராஜீவ் காந்தி அவர்கள், இதே தமிழ் மண்ணில் விடுதலைப் புலிகளால் மனித வெடிகுண்டுகள்மூலம் சின்னாபின்னமாக்கப்பட்டாரே, நாட்டு மக்கள் மறந்துவிட்டார்களா? விடுதலைப் புலிகளை, அந்தக் காலக்கட்டத்தில் தமிழ்நாட்டில் யார் ஆதரித்தார்கள் என்பது நாட்டு மக்களுக்குத் தெரியும். இதை ஜெயின் கமிஷன்கூட சுட்டிக்காட்டியதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

1991 ஆம் ஆண்டு முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது, அதற்கு முன்பு தமிழகம் விடுதலைப் புலிகளின் விளையாட்டுக் களமாக இருந்த நிலையில், விடுதலைப் புலிகளுக்கு அஞ்சாமல், அந்த இயக்கத்தைத் தடை செய்ய வேண்டும் என்று மத்திய அரசிற்குக் கோரிக்கை வைத்து, அவர்களை வேரோடும், வேரடி மண்ணோடும் வீழ்த்தி, தமிழகத்தை அமைதி பூக்கும் மாநிலமாக மாற்றியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

2001—ல் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது, 1996 முதல் 2001 வரை தமிழகத்தில் வெடிகுண்டுக் கலாச்சாரம், காரிலே வெடிகுண்டு, Tiffin box-இலே வெடிகுண்டு, மருத்துவமனையிலே வெடிகுண்டு, இரயிலிலே வெடிகுண்டு என சினிமாத் திரையரங்கிலே வெடிகுண்டு, பஞ்சாபைப்போல், காஷ்மீரைப்போல் தமிழகம் வெடிகுண்டுக் கலாச்சாரம் நிறைந்த பூமியாக இருந்த சூழ்நிலையிலே, 2001—லே ஆட்சிப் பொறுப்பையேற்று, முதலமைச்சராகப் பொறுப்பேற்ற காலத்தில், அவற்றையெல்லாம் அடக்கிக் காட்டி சாதனை படைத்த வீரப் பெண்மணி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

2001–ல் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற காலத்தில், காவல் துறை மானியக் கோரிக்கையின்போது, சந்தனக் கடத்தல் வீரப்பனை ஒழித்துக்கட்டுவேன் என்று சவால் விட்டு, சபதமேற்று, அதைச் செயல்படுத்திக் காட்டியவர் அம்மா அவர்களாவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், அதே வீரப்பனைத் தொலைக்காட்சியில் கதாநாயகனாகச் சித்திரித்துக் காட்டியும், தேர்தல் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தியவர்களும் இந்த நாட்டிலே இருக்கிறார்கள். தன் உயிரைப்பற்றிக் கவலைப்படாமல், விடுதலைப் புலிகளை, வீரப்பன் போன்றவர்களை, மதத் தீவிரவாதிகளை, பல்வேறு தீவிரவாத அமைப்புகளை அடக்கிக் காட்டியவர், வருங்கால முதலமைச்சர், புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

2006–இலே நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலிலே, ஒரு கோடியே 33 இலட்சம் வாக்குகளைப் பெற்ற ஒரு மாபெரும் பிரதான எதிர்க் கட்சியினுடைய தலைவர், வருங்கால தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மா அவர்கள். எங்களுக்கும் இன்றைய ஆட்சியாளர்களுடைய கூட்டணிக்கும் உண்டான வாக்கு வித்தியாசம் 13 இலட்சம் வாக்குகள்தான் பேரவைத் தலைவர் அவர்களே. 13 இலட்சம் வாக்குகளிலேதான் நாங்கள் ஆட்சிப் பொறுப்பை இழந்திருந்தாலும், 5 முறை தமிழகத்தை ஆண்ட ஒரு மாபெரும் கட்சி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டு முறை தமிழகத்தினுடைய முதலமைச்சராக ஆட்சி செய்த மாபெரும் இரும்பு நங்கை, எங்களுடைய தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அப்படிப்பட்ட தலைவி, இன்றைக்குத் தீவிரவாதிகளின் hit list–லே **என்று நான் இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கடைசியிலே **அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், குற்றச்சாட்டு இல்லாமல் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

(மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஆர். வைத்திலிங்கம், திரு. இரா. விசுவநாதன் ஆகிய இரண்டு பேரும் எழுந்து நின்றார்கள்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இரண்டு பேரும் ஏன் எழுந்து நிற்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) நீங்கள் இரண்டு பேரும் எழுந்து நிற்பதால் அவர் பேசுவது கேட்கவில்லை; நீங்கள் உட்காருங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



முற்பகல் 11–35

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இரண்டு முறை அம்மா அவர்களுடைய இல்லத்திற்குள் நுழைந்தவர்களை 'பைத்தியக்காரர்கள்' என்று பட்டம் சூட்டி, விடுதலை செய்ததை நாடு மறந்துவிடவில்லை. இன்றைக்குப் பிரதான எதிர்க்கட்சித் தலைவர், எங்கள் இயக்கத்தின் பொதுச் செயலாளர் மாண்புமிகு அம்மா அவர்களின் பாதுகாப்பிற்கு உயர் நீதிமன்றத்தை நாட வேண்டிய நிலைமை இந்த ஆட்சியிலே அம்மா அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

காவல் துறைக்கு ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள நான் விரும்புகிறேன். 1996–லே பூஜ்ஜியத்திலே இருந்து 2001–லே நாங்கள் ராஜ்ஜியத்தை அமைத்துக் காட்டியவர்கள். இன்றைக்கும் 'ஆனை படுத்தாலும் குதிரை உயரம்' என்பதைப்போல 60 சட்டமன்ற உறுப்பினர்களோடு பிரதான எதிர்க்கட்சியாக தமிழகத்திலே நாங்கள் ஜனநாயகக் கடமையை ஆற்றிக் கொண்டிருக்கிறோம். 'மக்களாட்சித் தத்துவத்தினுடைய இறுதி எஜமானர்கள் மக்கள்தான்; ஆளுகின்ற உரிமை என்கிற அதிகாரத்தைத் தருபவர்களும் மக்கள்தான்' என்று இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். தமிழகத்தில் நடக்கும் அனைத்து அவலங்களையும் மக்கள் மன்றம் கவனித்துக்கொண்டுதான் இருக்கிறது, பேரவைத் தலைவர் அவர்களே.

மத்திய அரசு அம்மாவிற்கு வழங்கிய 'Z Plus' பாதுகாப்பு, இன்றைக்குக் கேள்விக்குறியாக உள்ளது. மாண்புமிகு அம்மா அவர்கள் பசும்பொன் தேவர் நினைவிடத்திற்கு அஞ்சலி செலுத்தச் சென்றபோதும், அண்ணா நினைவிடத்திற்கு அஞ்சலி செலுத்தச் சென்றபோதும், புரட்சித் தலைவர் இல்லமான இராமாவரம் தோட்டத்திற்குச் சென்றபோதும் உரிய பாதுகாப்பு வழங்கப்படவில்லை. ஆட்சியாளர்கள் மாறலாம்; ஆனால், காவல் துறையானது நிரந்தரமானது. தங்களின் கடமையில் அவர்கள் எப்பொழுதும் சரிவரச் செயல்பட வேண்டும் என்று பணிவன்போடு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

'சூரியன் எப்போதும் அஸ்தமிப்பதில்லை' என்று சொல்லப்பட்ட மிகப் பெரிய பிரிட்டன் சாம்ராஜ்யம்கூட, இன்றைக்கு ஒரு ராந்தல் விளக்கிலே சுற்றிப் பார்க்கிற அளவிற்கு அதனுடைய பரப்பளவு சுருங்கிப் போய் இருக்கிறது. எத்தனையோ முடியாட்சி மன்னர்கள்,

எத்தனையோ பிரதமர்கள், எத்தனையோ முதலமைச்சர்கள், அரசியல் வரலாற்றிலே மக்கள் வெள்ளம் அடித்த சுனாமியிலே காணாமல் போய் இருக்கிறார்கள். எனவே காவல் துறை தன்னுடைய கடமையைச் சரிவர நிறைவேற்ற வேண்டுமென்று நான் பேரவையின் தலைவர்வாயிலாக இந்த அவைக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை புறநகர்ப் பகுதிகளிலே கும்மாளமிடும் சீட்டாட்டக் கிளப்புகள் செயல்பட்டு வருகின்றன. காவல் துறையில் புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை; ஏன்?

காங்கிரஸ் கட்சியின் தமிழகத் தலைவர் திரு. கிருஷ்ணசாமி அவர்களை வேல் கம்பால் குத்திக் கொலைசெய்ய முயற்சித்தார்களே, அந்தக் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டார்களா? இந்த வழக்கின் தற்போதைய நிலை என்ன?

தென் மாவட்டங்களில் தொடர்ந்து தேவர் சிலை அவமரியாதை செய்யப்படுவதால், அந்தப் பகுதி மக்கள் மத்தியிலே ஏற்பட்டுள்ள கொந்தளிப்பை அகற்ற, இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

உத்தபுரம் தடுப்புச் சுவர் பிரச்சினையிலே, இருதரப்பு மக்களையும் அழைத்துப் பேசி தடுப்புச் சுவர் தகர்க்கப்பட்டதாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இம்மன்றத்திலே பதிவு செய்துள்ளார்கள். ஆனால் அங்கே நிலைமை மோசமாகிக்கொண்டே செல்வதைப்போல் தெரிகிறது. ஒரு பிரிவு மக்கள் மலையேறி ஏழு நாட்கள் ஆகிவிட்ட நிலையிலும் இந்தக் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கிற இந்த நிலைவரையிலே மலையேறிய மக்கள் இறங்காமல் இருக்கிற சூழ்நிலையை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம், வளையாங்குளம் ஊராட்சியில் பெரும்பிடுகு முத்தரையர் படம் அவமானப்படுத்தப்பட்டதால் அங்கே கலவரங்கள் நடைபெற்று, அப்பாவி மக்கள் பலர் சிறையிலே அடைப்பட்டிருக்கிற காட்சியை நான் இங்கே கொண்டு வர விருப்பப்படுகிறேன்.

அதேபோன்று, உசிலம்பட்டி அருகே, கோட்டநாய்க்கன்பட்டியில் தேவர் சிலை அவமதிப்பு செய்யப்பட்டதால், அங்கே கடையடைப்பும், பேருந்துப் போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளதாகவும் செய்திகள் வருகின்றன. இவ்வரசு அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?



மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், மதுரை இரயில் நிலையத்தில் இருந்தபோது, அவர்மீது கொலை முயற்சி மேற்கொண்டதாக வழக்குப் பதிவு செய்யப்பட்டதே, அந்த வழக்கின் தற்போதைய நிலை என்ன? கொலைக் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டார்களா? அல்லது, அது வேறு எதற்காகவாவது அரங்கேற்றப்பட்ட நாடகமா?

மதுரை 'தினகரன்' பத்திரிகை அலுவலகம் தாக்கப்பட்டு, மூன்று பேர் உயிரோடு எரித்துக் கொலை செய்யப்பட்டார்களே, அந்த வழக்கில் கொலை செய்தவர்களைத் தூண்டிய உண்மையான குற்றவாளியைக் கைது செய்யாத நிலை உள்ளதே, ஏன்? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு செய்தியைச் சொல்லிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) நான் அதைக் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) ஒரேயொரு செய்தி. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்கள் பேசுவதற்கு நான் வாய்ப்புக் கொடுத்திருக்கிறேன். யாரும் பேசக்கூடாது. உட்காருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** குறிப்பாக உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் மதுரை சம்பவத்தைப்பற்றிச் சொல்கிறார். ஆனால் அதற்கு முன்னர் அவர் பேசுகிறபோது அவர்களுடைய கட்சியின் பொதுச் செயலாளர் முன்னாள் முதலமைச்சருடைய பாதுகாப்பு குறித்தும் சொல்கிறார். இது ஏதோ ஒரு திட்டமிட்ட நாடகம் என்று சொல்கிறார். அப்படியானால் அவர் பாதுகாப்பு குறித்தும், ஆபத்து இருக்கிறது என்று சொன்னாரே, அதுவும் திட்டமிட்ட நாடகம் என்று கருதுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதனாலே சொல்லுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள், திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதை நாடகம் என்று குறிப்பிடவில்லை. சிவபுண்ணியம் எதற்காக வக்காலத்து வாங்கினாலும்

வாங்கிக்கொள்ளட்டும். அந்தப் பணியை பிறகு அவர் செய்துகொள்ள வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினரைக் கேட்டுக்கொள்கிறேன்.

திண்டிவனம் அருகே, செண்டூரில் பயங்கரமான RDX வெடிகுண்டுகள் வெடித்து பலர் இறந்தார்களே, அதற்காக அமைக்கப்பட்ட விசாரணைக் கமிஷனின் அறிக்கை அரசுக்கு அளிக்கப்பட்டுவிட்டதா? கடத்தப்பட்ட வெடி மருந்துகள் விடுதலைப் புலிகளுக்குக் கடத்தப்பட்டதாகச் சொல்லப்படுகிறதே, அதில் உண்மை இருக்கிறதா?

முற்பகல் 11–40

இந்திய அரசியல் வரலாற்றில், சிவகங்கை நகர மன்றத் தலைவர், அவர் சார்ந்த தி.மு.க.வைச் சேர்ந்தவர்களால் ரிமோட் கன்ட்ரோல்மூலம், வெடிகுண்டுகளை வெடிக்கச்செய்து சின்னாபின்னமாக்கப்பட்டாரே, அந்த அகோரக் கொலையைத் தூண்டிவிட்ட முக்கிய நபர் பிடிபட்டாரா? அந்த வழக்கின் நடவடிக்கை எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், அதியமான்கோட்டை காவல் நிலையத்தில் துப்பாக்கிகள் தீவிரவாதிகளால் கொள்ளையடிக்கப்பட்டனவே, அவை கண்டுபிடிக்கப்பட்டனவா? காணாமற்போன துப்பாக்கிகள்தான் பறிமுதல் செய்யப்பட்டனவா? வாழைத் தோப்பிலே கண்டுபிடிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்ட துப்பாக்கிகள், வாழை மரத்திலே காய்த்தவையா? அல்லது, உண்மையிலேயே காணாமற்போனவைதானா? இந்தத் துப்பாக்கிக் கொள்ளையின் பின்னணியில் செயல்பட்ட அரசியல்வாதியைக் கைது செய்ய போலீஸ் அதிகாரிகள் திட்டமிட்டு வருவதாகப் போலீஸ் வட்டாரம் இன்றையதினம் பத்திரிகையிலே தெரிவித்திருக்கிறதே, அந்த அரசியல்வாதி யார்?

காவல் துறையில் திருடர்கள், கொலையாளிகள், கொள்ளைக்காரர்கள், கற்பழித்தவர்கள், சமுதாயத்தில் பல்வேறு குற்றங்களைச் செய்தவர்கள் ஆகியோரைக் கண்டுபிடிக்க, உண்மை கண்டறியும் சோதனை நிகழ்த்தப்படுகிறது. முதன்முறையாக, இந்திய வரலாற்றில் தமிழகத்தில் போலீசாரிடம் உண்மை கண்டறியும் சோதனை மேற்கொள்ளப்பட்டதே, அதன் முடிவுகள்மூலம்



என்னென்ன உண்மைகள் கண்டறியப்பட்டன என்பதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையில் அறிவிப்பார்களா?

பெண்ணாகரத்திலே, சார்நிலைக் கருவூலத்தில் துப்பாக்கி கொள்ளையடிக்கப்பட்டதே, அது கண்டுபிடிக்கப்பட்டதா? அதிலே ஒரு இன்ஸ்பெக்டர், ஒரு சப்–இன்ஸ்பெக்டர், இரண்டு Head Constables உட்பட, மொத்தம் 7 பேர் சஸ்பெண்டு செய்யப்பட்டார்களே; இரண்டு Head Constables காவல் நிலையத்திலேயே அடைக்கப்பட்டார்களே, அந்த வழக்கு எந்த நிலையில் உள்ளது?

சங்கரன்கோயிலில் நாட்டு வெடிகுண்டு, நெல்லையில் எவர்சில்வர் கூஜா வெடிகுண்டு, சேலத்தில் நக்சலைட் வெடிகுண்டு, சென்னையில் ராக்கெட் லாஞ்சர், ஓசூரில் கட்டடங்களைத் தகர்க்கும் வெடிகுண்டு, வேலூரில் சைக்கிள் வெடிகுண்டு, பால்ரஸ் வெடிகுண்டு, அண்ணா நகரில் துணை வேந்தர் வீட்டில் குண்டுவெடிப்பு, கடலுக்கடியில் துப்பாக்கி தயாரிக்கும் மிஷின், மண்டபம் பகுதியில் ஏ.கே.56 இரகத் துப்பாக்கிகள், தனுஷ்கோடி அருகே 4,000 கிலோ வெடிபொருட்கள், மண்டபம் அருகில் தர்மாக்கோல் பெட்டியில் suicide bomb, இப்படித் தமிழகமே வெடிகுண்டுகளின் கலாச்சாரமாக மாறி வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஹெல்மெட் அணியும் சட்டம் எந்த நிலையில் உள்ளது? ஹெல்மெட் அணியும் சட்டம் கட்டாயமாக்கப்படும் என்று சொல்லப்பட்டதே, அதற்காகக் குறிப்பிட்ட தேதி நிர்ணயம் செய்யப்பட்டதே, குறிப்பிட்ட தேதி வரை ஹெல்மெட் வியாபாரம் பல கோடி ரூபாய்க்கு அமோகமாக நடைபெற்றதே, குறிப்பிட்ட தேதிக்குப் பிறகு முதலமைச்சர் அவர்களின் அறிக்கையில், விருப்பப்பட்டவர்கள் மட்டும் ஹெல்மெட் அணிந்து கொள்ளலாம் என்று சொல்லப்பட்டதே, காவல் துறையும் கண்டுகொள்ளாது என்று சொன்னார்களே, அப்படியென்றால், இந்த அவசரச் சட்ட நடவடிக்கையால் ஹெல்மெட் உற்பத்தியாளர்களுக்கும், விற்பனையாளர்களுக்கும் பல கோடி ரூபாய் கிடைத்திருக்கிறது. உயர் நீதிமன்றம்கூட, "ஒரு சட்டம் கொண்டு வந்தால், முழுமையாகச் செயல்படுத்த வேண்டும்" என்று கூறியுள்ளது. மேலும், "ஹெல்மெட் பிரச்சினையில் சட்டம் கொண்டு வந்த பிறகு, இப்படி முரண்பாடான கருத்துக்களைச் சொல்லக்கூடாது" எனவும் உயர் நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

• தமிழ்நாட்டில் கள்ளச் சாராயம் ஆறாக ஓடுவதாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்களேகூட இந்த அவையில் சொல்லியுள்ளாரே, மாங்குடி ஊராட்சி மன்றத் தலைவர் ஜெயக்குமார் அவர்கள், கள்ளச் சாராயத்தைக் கண்டித்ததால் கொலை செய்யப்பட்டதை ஆதாரத்தோடு கூறியுள்ளாரே, அதன் உண்மை நிலை என்ன? தமிழகத்தில் ஆளுங்கட்சியினர் துணையோடு கள்ளச் சாராயம் விற்பனை செய்யப்படுகிறதே, மதுக் கடைகளில் போலிச் சரக்கு விற்பனை செய்யப்படுகிறதே, இதற்கு அரசின் நடவடிக்கை என்ன? அரசு மதுபானக் கடைகளில் கூடுதல் விலைக்கு மது விற்கப்படுகிறது. இதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது? நாட்டையும், மக்களையும் காப்பாற்ற இராணுவம், காவல் துறை ஆகியவை இருந்தாலும், பேராபத்து, பேரழிவு போன்ற காலங்களில், தீயணைப்பு மற்றும் மீட்புத் துறை முக்கியத்துவம் வாய்ந்த துறையாகத் திகழ்கிறது. இரவு, பகல், மழை, வெள்ளம் என்று பாராமல், எந்த நேரத்திலும், எதற்கும் தயாரான நிலையில் தீயணைப்புத் துறையினர் பணியாற்றி வருகின்றனர். அத்தகைய தீயணைப்புத் துறையின்மீது இந்த அரசு, பாராமுகமாக இருந்து வருகிறது என்ற குமுறல் எழுந்துள்ளதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

சென்னை மாநகராட்சித் தேர்தலில், காலை 7–00 மணிக்கு வாக்குச் சாவடி திறந்தவுடன் வாக்குப் பெட்டிகள் உடனடியாக நிறைந்ததே, பொது மக்கள் வாக்களிக்கவே அனுமதிக்கப்படாமல் காவல் துறையினரால், ரவுடிகளால் தடுக்கப்பட்டார்களே, உயர் நீதிமன்றம் 99 வார்டுகளுக்கு மறு தேர்தல் நடத்தவேண்டும் என்று நெத்தியடி அடித்ததே, ரவுடிகள், ஆயுள் தண்டனை பெற்றவர்கள் குண்டர் சட்டத்தில் சிறையில் இருந்தவர்கள் ஆகியோர் இதற்குப் பயன்படுத்தப்பட்டதாகவும் சொல்லப்பட்டதே, உயர் நீதிமன்றம், காவல் துறை ஆணையாளர், தேர்தல் ஆணையாளர் ஆகியோர் தங்களது கடமைகளை மறந்துவிட்டதாகக் கடுமையாகக் குற்றம் சாட்டியதே, மாநகராட்சித் தேர்தலின்போது, எங்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. பி.கே. சேகர்பாபு, திரு. வி.பி. கலைராஜன் ஆகியோர் தாக்கப்பட்டார்களே, அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? குற்ற நிகழ்வுகளுக்குக் காரணமான காவல் துறை அதிகாரிகள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது? அப்போது மாநகராட்சித் தேர்தலில் பயன்படுத்தப்பட்ட ரவுடிகள், ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, அம்மா முதலமைச்சரானால், அப்ரூவர்களாக மாறிவிடுவார்கள் என்று பயந்து இந்த அரசு encounter செய்து வருவதாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மையா?



தமிழகத்தில் தி.மு.க. ஆளுங்கட்சியாக வந்ததற்குப் பிறகு, பல்வேறு பிரச்சினைகளில் ஆளுங்கட்சியினர் தலையிடும்போது, காவல் துறை கையைக் கட்டிக்கொண்டு வேடிக்கை பார்ப்பதைத் தொலைக்காட்சிகளிலும், பத்திரிகைகளிலும் காணமுடிகிறதே, குறிப்பாக தி.மு.க. உட்கட்சித் தேர்தலில், உங்கள் கட்சிகளுக்குள் தாக்கிக்கொள்ளும்போது, உயர்மட்டக் காவல் துறை அதிகாரிகள் தாக்கப்பட்டு, இரத்தம் சிந்துகின்ற நிலை ஏற்படுகிறதே, இந்த அரசு இதற்கு என்ன பதில் சொல்லப்போகிறது? உடுமலையில் தி.மு.க. உட்கட்சித் தேர்தலின்போது, மோதல் ஏற்பட்டபோது தடுக்க முயன்ற டி.எஸ்.பி.யின் தாடை மற்றும் மூக்கெலும்பு உடைந்ததே, இந்தத் தாக்குதல் நடத்தியவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

*முற்பகல் 11–45*

குறிப்பாக, 15–3–2008 அன்று வெள்ளக்கோயில் நெடுஞ்சாலை வாகன ரோந்தில் பணிபுரியும் பெண் உதவியாளர் கோவர்த்தனாம்பிகை அவர்கள், மாலை 5–30 மணியளவில் மற்ற காவலர்களுடன் சம்பந்தம்பாளையம் பிரிவு ரோட்டில் வாகனத் தணிக்கை செய்துகொண்டிருந்தபோது, காங்கேயத்திலிருந்து பொங்கலூர் நோக்கி, 2 பேர் மோட்டார் சைக்கிளில் வேகமாகச் சென்றவர்களை சோதனை செய்ய நிறுத்த முயன்றபோது, அவர்கள் வண்டியை நிறுத்தாமல், பெண் உதவி ஆய்வாளரை மோதுவதுபோல் வந்து பாவலா காட்டிவிட்டு, வேகமாகச் சென்றனர் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அவர்களைத் தொடர்ந்து உதவி ஆய்வாளர் விரட்டிச் சென்றபோது, அவர்கள் ஒரு பண்ணை வீட்டிற்குள் சென்றனர். அங்கே சென்ற உதவி ஆய்வாளர் அவர்களைப் பண்ணை வீட்டில் இருந்த ஒரு பெண்மணியும் மற்றும் சிலரும் அடைத்து வைத்து தாக்கி சிறைப்பிடித்து வைத்திருந்தனர். இதனால் பயந்துபோன உதவி ஆய்வாளர் அவர்கள், உடனடியாக காங்கேயம் காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் அவர்களுக்கு வான் தந்திமூலமாகத் தகவல் தெரிவித்து, அதன்மூலம் உதவி ஆய்வாளர் உட்பட மற்ற காவலர்கள் மீட்கப்பட்டனரே, இதனையடுத்து, உதவி ஆய்வாளர் அவர்கள், ஈரோடு மாவட்டம், காங்கேயம் காவல் நிலையத்தில் 15–3–2008 அன்று புகார் மனு அளித்துள்ளாரே, அதன் அடிப்படையில் 147, 342, 353 ஆகிய பிரிவுகளின்கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதே, ஆனால், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென்று மக்கள் குமுறுகிறார்களே, ஆனால், அதே நேரத்தில் சட்டமன்ற உறுப்பினர் மனைவியும், பொங்கலூர் ஒன்றியக்

குழுத் தலைவியுமான திருமதி எம். சௌந்திரம்மாள் அவர்களால் கோவை மாவட்டம், அவினாசிபாளையம் காவல் நிலையத்தில் சம்பவம் நடந்த மறுநாள் 16–3–2008 அன்று ஒரு புகார் கொடுக்கப்பட்டு, அந்தப் புகாரின்மீது, காங்கேயம் காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் சிவசுப்பிரமணியம், சப்–இன்ஸ்பெக்டர் கோவர்த்தனாம்பிகை, பெண் போலீஸ் சீதாலட்சுமி, டிரைவர் ஸ்ரீதர் ஆகிய 4 பேர்மீதும் அவினாசிபாளையம் காவல் நிலையத்தில் Crime No. 48/2008 under section 447, 324 and 506(1) I.P.C. ஆகிய பிரிவுகளின்கீழ் கொலை மிரட்டல் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதே, காவல் துறையினர்மீதே வழக்குப் போட்டிருக்கிறீர்களே, இது நியாயம்தானா? காவல் துறை அதிகாரிகள் தங்களது பணியைச் செய்கின்றபோது அவர்கள் தங்கள் கடமையைச் செய்யவிடாமல் தடுப்பதோடு, ஆளுங்கட்சிப் பிரமுகர்கள் என்பதால், தவறு செய்கின்ற ஆளுங்கட்சியினர், காவல் துறை அதிகாரிகள்மீதே நடவடிக்கை எடுக்கின்ற நிலைமை இந்த அவல ஆட்சியில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவலர்களைக் காப்பாற்றச் சென்ற காவல் துறையினருக்கே கொலை மிரட்டல் வழக்குப் போட்ட பெருமை இந்த ஆட்சியாளருக்கே உண்டு.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்கள், 8–5–2008 அன்று இம்மாமன்றத்தில் பேசியபோது, "நெல்லை மாவட்டத்தில், மணல் கொள்ளையை எதிர்த்துப் போராடிய சுடலைமுத்து என்பவர் படுகொலை செய்யப்படுகிறார்; இந்தப் படுகொலையைக் கண்டித்துப் போராடிய கம்யூனிஸ்ட் கட்சியினர்மீது வன்கொடுமைச் சட்டத்தின்கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது" என்றார். இந்த ஆட்சியில் எதிர்க்கட்சிகளைப் பழிவாங்க வேண்டும் என்பதற்காக இந்த வன்கொடுமைச் சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது என்பதை நிரூபித்துக்கொண்டு வருகின்றார்கள். இதற்கு மேலும் ஓர் உதாரணம், இம்மாமன்றத்தைச் சேர்ந்த கோவை மாவட்ட சட்டமன்ற உறுப்பினர் அவர்கள்மீது வன்கொடுமைச் சட்டத்தின்கீழ் வழக்குப் போடப்பட்ட நிகழ்வுகள். கடந்த செப்டம்பர் 21 ஆம் தேதி மேற்கு மண்டல ஐ.ஜி. அவர்களை. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள். அவர், திரு. சிவபுண்ணியம் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லிவிட்டார். அதனால், அவர் பதில் சொல்லவேண்டுமல்லவா? (குறுக்கீடுகள்) திரு. சிவபுண்ணியம், சொல்லுங்கள்.



**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு முறை மாண்புமிகு உறுப்பினர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்கள், என்னுடைய பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார். ஒன்று, திருவாரூரிலே ஜெயக்குமார் படுகொலை சம்பந்தமாக நான் பேசியது குறித்து இங்கே ஒரு செய்தியைச் சொன்னார்; கள்ளச் சாராயம் காய்ச்சியவர்களால் படுகொலை செய்யப்பட்டதென்று குறிப்பிட்டுப் பேசினேன் என்று. நான் இங்கே அன்றையதினம் பேசியது உண்மை. நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்; காவல் துறையின் அலட்சியப்போக்கைத் தீர்க்க வேண்டுமென்பதற்கான வகையிலேதான் பேசியிருக்கிறேன், குறிப்பைப் பார்க்க வேண்டும். ஆனால், கள்ளச் சாராயம் ஆறாகப் பெருக்கெடுத்து ஓடுகிறது என்று இந்த அவையிலே பேசிய பழனிச்சாமி வீட்டிற்குப் போவதற்குள்ளாக, அவர் வீட்டிலேயே கள்ளச் சாராயத்தை வைத்துப் பிடித்த அரசு, அ.தி.மு.க. அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) சுடலைமுத்து மணல் திருடர்களால் கொலை செய்யப்பட்டார் என்று குறிப்பிட்டுச் சொல்லுகிறபொழுது, அந்தக் கொலைக் குற்றவாளிகளே தவறான வழக்குப் பதிவு செய்து, அவர்கள்மீது P.C.R. வழக்குப் போடுகிறார்கள் என்றுதான் நான் குறிப்பிட்டுச் சொன்னேனே தவிர, அரசியல் ஆதாயம் கருதி, சமூகப் பிரச்சினைகளை ஏற்படுத்தி எப்படியாவது சட்டம்–ஒழுங்கு கெட வேண்டுமென்று அ.தி.மு.க.தான் விரும்புகிறதே தவிர, கம்யூனிஸ்டு கட்சி அப்படிப்பட்ட காரியங்களிலே என்றைக்கும் ஈடுபடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், நீங்கள் தொடர்ந்து பேசுங்கள். (குறுக்கீடு) எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்கள் பேசும்போது, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்கள், ஏற்கெனவே இந்த அவையில் சொன்னதை மேற்கோள் காட்டித்தான் பேசினார். அவரைக் குற்றஞ்சாட்டிச் சொல்லவில்லை. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்கள், அவராகவே முன்வந்து அடிக்கடி இப்படி அப்ரூவராக மாறிக்கொண்டிருக்கின்ற ஒரு அவல நிலை ஏற்பட்டிருக்கிறது!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. வை. சிவபுண்ணியம், சொல்லுங்கள்.

*முற்பகல் 11–50*

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்ரூவராக மாறுகிற பழக்கம் எனக்கில்லை. ஆனால், தொடர்ந்து குற்றவாளிகளாகவே இருப்போம் என்று உறுதியாக அ.தி.மு.க.வினர் இருப்பதுதான் விநோதமாகவும் இருக்கிறது; வருத்தமாகவும் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், நீங்கள் தொடர்ந்து பேசுங்கள்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்டைக் காலத்திலே, மன்னர்களுடைய அவையிலே, பொன்னுக்கும், பொருளுக்கும் பாடுவதற்கென்று தனியாகப் புலவர்கள் இருப்பார்கள். அதைப்போல இங்கே சில புலவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் என்னுடைய நேரத்தை எடுத்துக்கொள்ளாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

இம்மாமன்றத்தைச் சேர்ந்த கோவை சட்டமன்றக் கழக உறுப்பினர்கள்மீது வன்கொடுமைச் சட்டத்தின்கீழ் வழக்குப் போடப்பட்ட நிகழ்வுகள் ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், கொஞ்சம் சீக்கிரம் படித்து முடியுங்கள்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** நான் என்ன செய்கிறேன்? கடமையாற்றுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயகக் கடமையாற்றிட. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி கே. பாலபாரதி, என்ன?

***செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னர் ஆட்சியில் பொன்னுக்கும், புகழுக்கும் பாடுவார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். சென்ற அ.தி.மு.க ஆட்சியில் காவல் துறைமீது இப்படி நாங்கள் எல்லாம் பேசியிருந்தால், நாங்கள் வீட்டிற்கே திரும்பிச் செல்ல முடியாது.



பேசிய அனைத்துமே சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்பேட்டில் நீங்கள் எடுத்துப் பார்த்தால் எல்லாமே சபைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டு, Star மட்டும்தான் இருக்கும். ஆகவே, கிடைத்திருக்கக்கூடிய ஜனநாயகத்தை அவர் சரியாகப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, இங்கு கருத்துச் சொல்லக்கூடிய அனைவரின்மீதும் அவதூறு பொழிவது, காவல் துறையின்மீது அவதூறு பொழிவது என்று, அவர்கள் பேசிக் கொண்டிருப்பது, அ.தி.மு.க. கடந்த காலத்திலே எப்படி இருந்தது என்பதை அவர்கள் மறந்திருக்கலாம். ஆனால், மக்கள் மறக்கவில்லை. நாங்கள் எல்லாம் மறக்கவில்லை, இந்தச் சபை மறந்திருக்காது என்பதைப் பதிவு செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, சிவகங்கையிலே பேசிய பேச்சுகள் பத்திரிகையில் வந்திருக்கின்றன. அது என்னவென்று படித்துக் காட்ட விரும்புகிறேன். "இந்த தி.மு.க. ஆட்சியில் போலீஸ் நிருவாகம் கட்டுப்பாட்டில் இல்லை. போலீஸ் அதிகாரிகள் தி.மு.க. மாவட்ட ஒன்றியச் செயலாளர்களைப்போல செயல்படுகின்றனர். அதுமட்டுமல்ல; அரிசி கப்பலிலே வெளிநாட்டிற்குக் கடத்தப்படுகிறது" என்று பேசியிருக்கிறார். வெளியே ஒன்றும், உள்ளே ஒன்றுமாக நாடகமாடக் கூடாது என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ள நான் விரும்புகிறேன்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளியே ஒன்றும், உள்ளே ஒன்றும் பேச வேண்டிய அவசியம் மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சிக்குக் கிடையாது. அவர்கள் அம்மாவின் முன்னாலேயே பேச முடியாதவர்கள், இப்படிப் பேசுவது சரியல்ல. சிவகங்கையில் நான் அவ்வாறு பேசவில்லை என்பதை இந்த மன்றத்திலே பதிவு செய்ய முன்வருகிறேன். ஆகவே, அ.தி.மு.க. உறுப்பினர்கள் அவதூறுகளைப் பொழியக் கூடாது. உண்மையைப் பேசுவதற்கு நீங்கள் முன்வாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடம் ஆதாரம் இருக்கிறது.

இம்மாமன்றத்தைச் சேர்ந்த கோவை சட்டமன்றக் கழக உறுப்பினர்கள்மீது வன்கொடுமைச் சட்டத்தின்கீழ் வழக்குப் போடப்பட்ட நிகழ்வுகள். கடந்த செப்டம்பர் 21 ஆம் தேதி மேற்கு மண்டல ஐ.ஜி. அவர்களைக் கோவை மாவட்ட அ.இ.அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக நிருவாகிகள் சென்று சந்தித்து, கோவை மாவட்டத்தில் பொங்கலூர் பகுதியில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் தி.மு.க.வில் சேர வேண்டும் என மிரட்டப்பட்டு, அதற்கு அடிபணியாத காரணத்தினால், அவர்களை மிரட்டிப் பணிய வைக்கும் முயற்சியாக அவர்கள்மீது காவல் துறையின்மூலம் வழக்குப் போடப்பட்டதை எடுத்துக் கூறினோம். ஆனாலும், தொடர்ந்து அதே நிலை நீடித்தது. எனவே, இந்த வழக்குப் போடும் நிகழ்வுகள் குறித்து, மாண்புமிகு கழகப் பொதுச் செயலாளர் அம்மா அவர்களிடம் தெரிவிக்கப்பட்டது. இந்த அநாகரிகமான நிகழ்வுகளைக் கண்டித்தும், உண்மைக்கு மாறாக வழக்குப் போடும் காவல் துறையைக் கண்டித்தும், அ.இ.அ.தி.மு.க. சார்பில் ஒரு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம், பொங்கலூரில் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பாக, 1–11–2007 அன்று நடத்தப்பட்டது.

இதைப் பொறுத்துக்கொள்ளாத அந்தப் பகுதியின் சட்டமன்ற உறுப்பினர், பொதுப் பணித் துறை ஆய்வு மாளிகையில் அமர்ந்துகொண்டு, அங்கே பணியாற்றும் காவலரைப் பிடித்து, அவர்மூலமாக வழக்கு ஜோடிக்கப்பட்டு, அதனடிப்படையில் என்மீதும், என்னோடு சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. செ.ம. வேலுசாமி, திரு. எஸ்.பி. வேலுமணி உட்பட 50–க்கும் மேற்பட்டவர்களின்மீதும் வன்கொடுமைச் சட்டத்தின்கீழ் வழக்குப் பதிவும் மற்றும் பல்வேறு பிரிவுகளில் ஜாமீனில் வெளிவர முடியாத பிரிவுகளில் வழக்குப் பதிவும் செய்யப்பட்டது. மேலும், ஆதி திராவிடர் இனத்தைச் சேர்ந்தவர்கள்மீதே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வன்கொடுமைச் சட்டத்தின்கீழ் வழக்குப் பதிவு செய்து, சிறையில் அடைத்த பெருமை இந்த அரசையே சாரும்.

அதற்குப் பிறகு, பல நாட்கள் முன்ஜாமீன் பெறும் முயற்சியில் நாங்கள் ஈடுபட்டிருந்தபோது, எங்களை அவமானப்படுத்தவேண்டும்; கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும்; அதன்மூலம் கழகப் பணிகள் செய்வதை, மக்கள் பணி செய்வதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்ற கொடிய எண்ணத்தின் அடிப்படையில் சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமறைவாக இருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஏன் இந்தக் கொடுமை? கோவை மாவட்டத்



தொண்டர்கள் முதல் தலைவர்கள் வரை காவல் துறையினரால் துரத்தியடிக்கப்படுகின்ற அவலம். தீபாவளி அன்றுகூட மாவட்டத்தில் உள்ள அனைத்துத் தொண்டர்களும், நிருவாகிகளும் வீடுகளில் இல்லாத நிலைமை காவல் துறையால் ஏற்படுத்தப்பட்டது. பொங்கலூர் ஆய்வு மாளிகையில் நடைபெற்ற நிலைமைகளையெல்லாம் நீங்கள் ஆய்வு செய்ய வேண்டுமென்று இந்தப் பேரவையின்வாயிலாக முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த மார்ச் 8 ஆம் தேதி, மதுரை அண்ணா நகரில் உள்ள ஐஸ்கிரீம் பார்லரில் மலர்விழிதேவி என்ற 35 வயது பெண்ணை, இளைஞர் ஒருவர் பட்டப் பகலில் 2–30 மணியளவில் கழுத்தை அறுத்துக் கொலை செய்தார். இந்த வழக்கில், கொலையாளி பயன்படுத்திய மோட்டார் சைக்கிள், கொலை செய்துவிட்டு கடையைவிட்டு வெளியே வந்தபோது, அந்த இளைஞரை மற்றொரு பரிச்சயமான பெண் ஊழியரான பிரியா என்பவர் நேரில் பார்த்தது உள்ளிட்ட பல்வேறு துப்புகள் போலீசாருக்குக் கிடைத்தபோதும், இதுவரை குற்றவாளியைப் போலீசாரால் கண்டுபிடிக்க முடியவில்லையே, ஏன்?

*முற்பகல் 11–55*

நெல்லையைச் சேர்ந்த சகோதரர்கள் கரையாடி மாடசாமி, திருமலைவேலு ஆகியோர், வழக்கில் ஜாமீன் பெற்று, மதுரை தல்லாகுளம் காவல் நிலையத்தில் கையெழுத்திட வந்தபோது, கூலிப் படையினர் டி.ஐ.ஜி. அலுவலகம் முன்வைத்து வெட்டிக் கொலை செய்தனரே, இந்த வழக்கில் சிலரைப் போலீஸார் கைது செய்தாலும், முக்கியக் குற்றவாளிகள் 2 பேரை போலீஸ் இன்னும் கைது செய்யவில்லையே, ஏன்? தி.மு.க. கிளைச் செயலாளர் ஒருவரின் மகன் பாண்டி என்பவர், முன்விரோதம் காரணமாக தத்தனேரி மயானத்தில் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டார். இந்த வழக்குக் குறித்து போலீஸார் தங்களது விசாரணையைத் தொடர்ந்து நடத்திக்கொண்டே இருக்கிறார்களே, குற்றவாளி எப்போது கைது செய்யப்படுவார்?

ஏப்ரல் 20 ஆம் தேதி, மதுரை தெப்பக்குளத்தில் ராஜேந்திரன் மகன் தங்கப்பாண்டி என்பவரை, ஒரு கும்பல் கத்தியால் கழுத்தை அறுத்துக் கொலை செய்துவிட்டுத் தப்பிச் சென்றதே, இந்த வழக்கில் இதுவரை குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லையே, மே 4 ஆம் தேதி ஆட்டோவில் வந்த மதுரை தெற்கு வாசல் பகுதியைச் சேர்ந்த அப்பள வியாபாரி மதிமோகன் என்பவரை காந்தி மியூசியம் அருகே

அரிவாளால் வெட்டிக் கொலை செய்துவிட்டு, அவரிடமிருந்து ரூ.80 ஆயிரம் பணத்தைக் கொள்ளையடித்துச் சென்ற சம்பவத்தில் இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லையே, ஏன்?

மதுரை, வண்டியூர் பூங்கா பகுதியில் அதிகாலை நேரத்தில் ரோந்துப் பணி மேற்கொண்டிருந்த போலீஸ்காரர்களைக் கத்தியால் குத்திவிட்டு, அவர்களின் மோட்டார் சைக்கிளை கொள்ளையடித்துச் சென்ற சம்பவத்தில் முக்கியக் குற்றவாளியான சந்திரனை, கடந்த இரண்டு மாதங்களாகப் போலீஸ் தேடி வருகின்றதே, இதுவரை குற்றவாளிகள் குறித்த எவ்விதத் தகவல்களும் போலீஸாருக்குக் கிடைக்கவில்லையா? இப்படி மதுரையில் கடந்த 2 மாதங்களாக 7 படுகொலைகள் நடைபெற்றும், இதுவரை குற்றவாளிகளைக் காவல் துறை கைது செய்யவில்லையே, ஏன்? மாண்புமிகு முதல்வர் அவர்கள் மதுரையில் என்னதான் நடக்கிறது என்பதைப் பற்றி ஓர் ஆய்வினை மேற்கொள்வாரா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கோவை செல்வபுரம் பகுதியில் உள்ள குடியிருப்புப் பகுதியில் 8 கட்சிகளுக்குக் கட்சி அலுவலகங்கள் அடுத்தடுத்து உள்ளன. ஆனால், அ.இ.அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அலுவலகத்தை மட்டும் இடிக்க வேண்டுமென்று நோட்டீஸ் அனுப்பி, அதற்கு மேல்முறையீடு செய்து 145 தடையுத்தரவு உள்ள நிலையிலே, கோட்டாட்சியரின் விசாரணை இருக்கும்போது, திடீரென்று மாநகராட்சி ஆணையாளர், அந்த அலுவலகத்தை இடிக்க வேண்டுமென்று ஆயிரக்கணக்கான போலீஸ்காரர்களோடு புறப்பட்டபோது, நானும், சட்டமன்ற உறுப்பினர்கள், செ.ம. வேலுசாமி, மலரவன், எஸ்.பி. வேலுமணி, சிங்கை சின்னசாமி ஆகியோர் நியாயம் கேட்டபோது, காலையில் இடிக்க மாட்டோம் என்றார்கள். மாலையில் இடிப்பது இல்லை என்றே கூறிக்கொண்டு காலம் தாழ்த்தி, நள்ளிரவிலே எங்களைக் கைது செய்து, ஒன்றும் அறியாத சட்டமன்ற உறுப்பினர்களை 15 நாள் சிறையில் அடைத்தார்களே, ஏன்? அதேவேளையிலே, கோவையிலே, சேலத்திலே, பொள்ளாச்சியிலே முக்கியப் பிரதான சாலைகளிலே, 'ஷாமியானா' போட்டு, பல்வேறு மறியல்களைச் செய்த ஆளுங்கட்சி அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள்மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று 'நெஞ்சுக்கு நீதி' எழுதிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை இந்த அவையின் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

கோவை மாவட்டத்தில், சமீப காலத்திலே பல்வேறு பரபரப்பான சம்பவங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. கோவை



மாவட்டத்தில் 70 மலைக் கிராமங்களில் நக்சலைட் தேடுதல் வேட்டை; கோவையில் புதிதாக அரைகுறை ஆடையுடன் அழகிகளின் ஆட்டம்; கிளப் மேலாளர்கள் மூன்று பேர் கைது; கோவையில் கூர்நோக்கு இல்லத்தில் சிறுவன் அடித்துக் கொலை; கண்காணிப்பில் குளறுபடிகள்; கோவையில் துப்பாக்கி பறித்த மூவருக்கு தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்படி சிறை; துப்பாக்கி பறிகொடுத்த போலீஸார் சஸ்பெண்டு; விசாரணைக் கைதிகளைத் தப்பவிட்ட அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா? கொடைக்கானல் மலையில் போலீஸார்மீது குண்டு வீசியதால் பெண் தீவிரவாதிகள் 4 பேர் கைது; கோவையில் துப்பாக்கிகளுடன் சிக்கிய இருவர் விசாரணைக் கைதிகளாக அழைத்துச் சென்றபோது மாயமான சம்பவத்தின் பின்னணி என்ன? தங்கக் காசு மோசடியில் சம்பந்தப்பட்டுள்ள முக்கிய நபர்கள் யார், யார்? திருவொற்றியூரில், அமைச்சரின் தொகுதியில், அந்தத் தொகுதிக்குட்பட்ட கே.வி. குப்பம் கிராமத்தைச் சேர்ந்த, அமைச்சரின் சொந்த ஊரில் செல்லத்துரை என்ற மீனவர், ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னால் காணாமல் போய், புகார் கொடுத்தும், இன்றைக்கு வரை கண்டுபிடிக்கப்படாமல் இருப்பதற்கான காரணம் என்ன? கோவை விசாரணைக் கைதி மாயமானதால் காவல் நிலையம் முற்றுகை; கோவை போலீஸின் துப்பாக்கிகள் பறித்துச் சென்ற சந்தனக் கொள்ளையர்களைப் பிடிக்க தனிப் படை கேரளாவிற்கு அனுப்பப்பட்டதே, குற்றவாளிகள் கைது செய்யப்பட்டார்களா?

1996 முதல் 2001 வரை தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஊழல் செய்து, வருமானத்திற்கு அதிகமாகச் சொத்து சேர்த்தாகக் கடந்த ஆட்சியின்போது பலர்மீது வழக்கு தொடுக்கப்பட்டதே, அந்த வழக்குகள் எல்லாம் இப்போது தொடர்ந்து விடுதலை ஆகிக் கொண்டிருக்கிறதே, இவற்றின்மீதெல்லாம் மீண்டும் அப்பீலுக்கு இந்த அரசாங்கம் செல்லுமா? கொப்பரை ஊழல் வழக்கிலே—57 வழக்கிலே—பல கோப்புகளில் நானும் அமைச்சராக இருந்தபோது D.V. & A.C. சம்பந்தப்பட்ட கோப்பிலே கையெழுத்திட்டிருக்கிறேனே, அதிலே 5 கோப்புகள் நிரூபணம் ஆகவில்லை என்று தள்ளுபடி செய்யப்பட்டனவே, மிச்சம் 5 கோப்புகளில் பாதி, அரசு அலுவலர்களிடத்திலே நிரூபணம் ஆகியுள்ளது என்றும், 47 கோப்புகள் முழுவதுமாக நிரூபணமான குற்றச்சாட்டுகள் என்றும் அன்றைய நிலையில் கட்டி வைக்கப்பட்டதே, கட்டி வைக்கப்பட்ட அந்தக் கொப்பரை ஊழல் வழக்குகளை எடுத்து மீண்டும் தூசி தட்டுவதற்கு 2 ஆண்டுகள் ஆகியும் இன்னும் காலம் கிடைக்கவில்லையா?

அன்றைக்கு எவ்வளவு வேகம் காட்டியவர், தற்போது அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒவ்வொருவரும் விடுதலை செய்யப்படுகின்றனர். விடுதலையானவர்களை எதிர்த்து மேல்முறையீடு செய்யவாவது நினைக்கிறீர்களா? அதேநேரத்தில், எதிர்க்கட்சிகளைப் பழிவாங்க, குறிப்பாகப் பிரதான எதிர்க்கட்சியான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை அழிக்கும் வகையில் கட்சியின் நிருவாகிகள்மீது பொய் வழக்குகள் போடச் சொல்லியும், எப்படியாவது அதை நிரூபித்து தண்டனை வாங்கித் தர முயற்சிக்கும்படியும், ஒரு தலைமைச் செயலாளரே உத்தரவிடும் கேவலமான நிகழ்ச்சியை ஒலிநாடாவின்மூலமாக இந்த நாடே கேட்க முடிந்ததே, இதைக் கண்டிக்க வேண்டிய முதல்வர், 'அவர் பேசியதில் என்ன தவறு?' என்று வெளிப்படையாகக் கேட்டு, தலைமைச் செயலாளருக்கு வக்காலத்து வாங்குகின்றாரே, இதன்மூலம் இலஞ்ச ஒழிப்புத் துறை என்பது, எதிர்க்கட்சியைப் பழிவாங்க மட்டுமே என்ற தத்துவத்தின் அடிப்படையில்தான் தி.மு.க ஆட்சியில் செயல்பட்டு வருவது மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

*நண்பகல் 12–00*

தனது தலைமைக்குக்கீழே உள்ள அமைச்சர்கள் ஒருவர் மாற்றி ஒருவர் வரிசையாக விடுதலையாவதைப் பார்த்து சந்தோஷப்படும் முதல்வர், எதிர்க்கட்சியான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை மட்டும் பழி வாங்கத் துடிக்கலாமா? அதற்கு மட்டும்தான் V. & A.C. போலீஸா?

கூட்டுறவுத் துறையில் கோடிக்கணக்கில் ஊழல் நடந்து, C.C.I.W. என்று சொல்லக்கூடிய Commercial Crime Investigation Wing–லே அந்த வழக்குகளெல்லாம் முடிக்கப்படாத நிலையிலே, 2006–லே நாங்கள் ஆட்சியிலேயிருந்து விடைபெற்றுச் சென்றோமே, ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேலே முறைகேடுகள் நடந்து, அந்த வழக்குகளெல்லாம், இப்போது C.C.I.W.–லே தொடர்ந்து நடத்தப்படுகின்றனவா? அல்லது அந்த வழக்குகளெல்லாம் கைவிடப்பட்டனவா என்பதைப் பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள்மூலம் நான் அறிய விரும்புகின்றேன்.

முன்னாள் அமைச்சர் தா. கிருட்டிணன் கொலை வழக்கில் தீர்ப்பு வந்துள்ள நிலையில் அரசு மேல்முறையீடு செய்யுமா? இந்த அவையில் உறுப்பினராக, அமைச்சராக இருந்தவரின் குடும்பம் அனாதையாக்கப்பட்டுள்ளது. அவரே தற்கொலை செய்துகொண்டாரா? இந்தக் கொலையிலுள்ள மர்ம முடிச்சுகளை அரசு அவிழ்க்குமா?



பொள்ளாச்சி அருகே தமிழகக் கேரள எல்லைப் பகுதியான மீனாட்சிபுரம் என்ற கிராமத்தில், குடிமைப் பொருள் அதிகாரிகளால் TN-59 A-4100 என்ற பதிவு எண்ணுள்ள லாரி, சுமார் 300 மூட்டை கடத்தல் அரிசியுடன் மடக்கிப் பிடிக்கப்பட்டிருக்கின்றது. அப்போது தி.மு.க. கொடி கட்டிய டாடா சுமோவில் வந்த ஒரு மர்மக் கும்பல் அதிகாரிகளை மிரட்டி லாரியை மீட்டுச் சென்றுவிட்டது. இதையொட்டி, அதிகாரிகள் அருகிலுள்ள ஆனைமலை போலீசில் புகார் கொடுத்துள்ளனரே, அதில் தப்பித்த லாரியின் பதிவு எண்ணையும் குறிப்பிட்டிருந்தனரே, இதே லாரி கேரளாவிற்குச் சென்றபோது அங்கு மடக்கிப் பிடிக்கப்பட்டிருக்கின்றதே, கேரள காவல் நிலையத்தில் லாரி நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றதே, இதற்கிடையில் லாரியின் உரிமையாளர், மற்றும் அரிசி கடத்தியவர்களுக்குத் தகவல் கொடுக்கப்பட்டு, அதே எண்ணை வேறொரு நெம்பர் பிளேட்டில் மாற்றி, ஆனைமலை காவல் நிலையத்தில் ஒரு ஃபோர்ஜரி லாரி அரிசியுடன் கொண்டு வரப்பட்டதே, அதோடு கேரளாவில் பிடிக்கப்பட்ட லாரி கேரளக் காவல் துறையால் ஆனைமலை காவல் நிலையத்திற்கு இரண்டு நாட்கள் கழித்துக் கொண்டு வரப்பட்டதே, இரண்டு லாரிகளும் ஒரே எண்ணோடு ஆனைமலை காவல் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டதே, இதனுடைய மர்மங்கள் முடிவுக்கு வந்துவிட்டதா? லாரியில் அரிசி கடத்தல் செய்த நபர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுவிட்டதா?

கொடைக்கானல் மலைப் பகுதியில் நக்சலைட் தேடுதல் வேட்டையில் எத்தனை தீவிரவாதிகள் பிடிபட்டனர்? எத்தனை பேர் என்கவுண்டரில் போட்டுத் தள்ளப்பட்டனர்? தற்போது கோவை மாவட்டத்தில் சுமார் 70 மலைக் கிராமங்களில் நக்சலைட் தீவிரவாதிகள் ஊடுருவி உள்ளதாகச் சொல்லப்படுகின்றதே, உண்மையா? இதன் எதிரொலியாகக் கோவை–மேட்டுப்பாளையம் இரயில் பாதையில் நாச வேலையின் காரணமாக பெரிய இரயில் விபத்து ஏற்பட இருந்ததாகப் பத்திரிகைகளில் செய்தி வந்ததே, உண்மை நிலைமை என்ன? தமிழகம் தீவிரவாதிகளின் கூடாரமாக மாறி வருகிறதா? இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றது? காவல் துறையின் ஈரல் கெட்டுவிட்டது என்று 1996–ல் இதே சபையில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் பதிய வைக்கப்பட்டுள்ளது. ஆனால் இன்றைக்குக் காவல் துறையில் 95 சதவீதம் பேர் தவறு செய்கின்றனர். இவர்களின் நடவடிக்கைகளை உளவுத் துறை கண்காணித்து அறிக்கை அளிக்கவேண்டும் என இந்த அரசு உத்தரவு

இட்டுள்ளதே, ஆக, இந்த அரசின் காவல் துறையில் ஈரல் மட்டுமல்ல; இதயம், நுரையீரல், மூளை உட்பட அனைத்துப் பாகங்களுமே சரி செய்ய முடியாத அளவிற்கு மோசமாகிப் போய்விட்டதா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மதுரை மேற்குத் தொகுதி இடைத் தேர்தலில் நாங்கள் தேர்தல் பணியாற்றியபோது, எங்கள்மீது, முன்னாள் மேயர் குழந்தைவேலு வீட்டைத் தாக்கியதாகவும், பூட்டப்பட்ட வீட்டிற்கு உள்ளே இருந்த டாடா சுமோ காரை (மணியடிக்கப்பெற்றது) பெட்ரோல் குண்டு வீசி எரித்ததாகவும். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொள்ளாச்சி ஜெயராமன், நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள். நீங்கள் பேச ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது. சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** அவரைக் கொலை செய்ய முயன்றதாகவும், பொய் வழக்குப் போடப்பட்டது. என்மீதும், சட்டமன்ற உறுப்பினர்கள் அனிதா ராதாகிருஷ்ணன், சேகர்பாபு மற்றும் 16 பேர்மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. முதலில் நடந்த மதுரை மத்திய தொகுதி இடைத் தேர்தலின்போது முன்னாள் அமைச்சர், திரு. மதுசூதனன்மீது கொலை வெறித் தாக்குதல் நடத்தப்பட்டதே, மதுரை உயர் நீதிமன்றக் கிளை இந்த வழக்கில் அரசிற்குக் கடும் கண்டனம் தெரிவித்துள்ளதே, இந்த வழக்கில் மதுரை மற்றும் கோவையில், ஒரு மாதம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாகிய நாங்கள், நிபந்தனை ஜாமீன் பெற்று தினசரி கையொப்பம் இட்டோமே, இது நியாயந்தானா என்று கேட்டு, பேரவைத் தலைவர் அவர்களே, காலத்தின் அருமை கருதி, தங்கள் வாயிலாக நான் கேட்டுக்கொள்வதெல்லாம், பொய் வழக்குகளைப் போட்டு ஆட்சியாளர்கள் எதிர்க்கட்சிகளை அடக்க நினைக்கின்ற காரியங்களைத் தவிர்த்துவிட்டு, ஆட்சியையும் மக்களையும் காப்பாற்றவேண்டிய கடமையை இந்த அரசு கையாள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய பேச்சின் முடிவாக, தமிழகக் காவல் துறை ஸ்காட்லாந்து யார்டு போலீஸுக்கு இணையாக இருந்தவர்கள்தான்; ஆனால், போலீஸ் அதிகாரிகள் எங்களுக்கு நண்பர்கள்தான்; போலீஸ் நண்பர்கள் அம்பு போன்றவர்கள்; அந்த அம்பு ஆட்சிப் பீடத்தில் இருக்கின்ற வில்லில் இருந்து யாரை நோக்கி எய்தப்படுகின்றதோ அவர்களை நோக்கிப் பாய்கின்றது; போலீஸ் இலாகாவிற்குப் பொறுப்பேற்றிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர்



என்ற வில்லிற்குத் தி.மு.க. என்கிற நாண் ஏற்றப்பட்டிருக்கின்றது; அம்பு புறப்படுகின்ற இடம் முதலமைச்சர் என்ற வில்லாக இருந்தாலும், தி.மு.க. என்ற நாண்களிலிருந்து புறப்படுகிறது; அம்புகளை நாங்கள் நோவதற்குத் தயாராக இல்லை; வில்லை வளைத்து, வளைத்து நாணை ஏற்றும்போது, நாண் அறுந்துவிடாமல் காத்துக்கொள்வது மாண்புமிகு முதலமைச்சரின் கடமை என்று கூறி, யார் ஆட்சியில் இருந்தாலும், எதிர்க்கட்சியில் இருந்தாலும், இந்த நாட்டில், இந்த மண்ணில்தான் வாழ்ந்தாக வேண்டும்; பேரவைத் தலைவர் அவர்களே. அவர்களைக் காக்கின்ற கடமை காவல் துறைக்கு இருக்கின்றது; காவல் துறை என்பது காக்கும் கரங்களாக, ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்ற பாகுபாடில்லாமல், அனைவருக்கும் பொதுவானது எனக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். இன்றைய காவல் துறை, ஆட்சி அதிகார மையங்களின் கோரப் பிடியில் சிக்கித் தவிக்கும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது என்பதைப் பார்க்கும்போது பரிதாபப்பட முடிகிறதே தவிர, வேறு எதையும் சொல்லும் நிலையில் இன்றைய காவல் துறையின் நிலை இல்லை என்று கூறி அமர்கின்றேன், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

*பிற்பகல் 12–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலுரை. (குறுக்கீடுகள்) திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே முன்னாள் அமைச்சர் திரு. பொள்ளாச்சி ஜெயராமன் அவர்கள் பேசுகின்றபோது, திராவிட முன்னேற்றக் கழகம் என்ற வில்லிலிருந்துதான் அம்பு புறப்படுகிறது; அதேபோன்று, பொய் வழக்குகள் போடுவதாகக் குற்றச்சாட்டு சொன்னார்கள். இவர்கள் ஆண்ட காலத்தில் பல்வேறு வழக்குகள் போடப்பட்டன; அவையெல்லாம் அன்றைய முதலமைச்சர் அவர்களாலே போடப்பட்ட வழக்குகளா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை, தீயணைப்புத் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை ஆகிய மூன்று துறைகளின்மீதான விவாதம் பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க.–வின் சார்பில் தொடங்கி,

விவாதத்தை திரு. சேகர்பாபு தொடங்கி வைத்து, ஆளுங்கட்சியின் சார்பில் திரு. உதயசூரியனும், காங்கிரஸ் கட்சியின் சார்பில் அம்மையார் திருமதி யசோதா அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் திரு. ஜி.கே. மணி அவர்களும், சி.பி.எம். சார்பில் செல்வி பாலபாரதி அம்மையார் அவர்களும், சி.பி.ஐ. சார்பில் திரு. வை. சிவபுண்ணியம் அவர்களும், ம.தி.மு.க. சார்பில் திரு. வீர. இளவரசன் அவர்களும், விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் திரு. கு. செல்வம் அவர்களும், புரட்சி பாரதம் சார்பில் திரு. ஜெகன் மூர்த்தி அவர்களும், மீண்டும் காங்கிரஸ் கட்சியின் சார்பில் திரு. கரி. இராமசாமி அவர்களும், நேற்று, அ.தி.மு.க. சார்பில் திரு. கலைராஜன் அவர்களும், இன்றையதினம் தி.மு.க. சார்பில் திரு. குத்தாலம் அன்பழகன் அவர்களும், காங்கிரஸ் கட்சியின் சார்பில் அதன் சட்டமன்றத் தலைவர் திரு. சுதர்சனம் அவர்களும், அ.தி.மு.க. சார்பில் முன்னாள் அமைச்சர் திரு. பொள்ளாச்சி ஜெயராமன் அவர்களும், ஆக மொத்தம் 14 பேர் உரையாற்றியிருக்கிறார்கள்.

பொள்ளாச்சி ஜெயராமன் அவர்கள் இறுதியாக ஓர் எச்சரிக்கை விடுத்தார். அம்பை எய்துகின்ற வில்லில் நாணாக இருக்கின்ற நீங்கள், நாணை ஏற்றி அறுத்துவிடாதீர்கள் என்று சொன்னார்கள். நான், நாணையும் அறுத்துவிடமாட்டேன்; நானும் அறுந்துபோக விடமாட்டேன் என்பதை நான் என்னுடைய பழைய நண்பர் பொள்ளாச்சி ஜெயராமன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அவர்கள் அடுக்கிக் காட்டினார்கள், குற்றங்களையெல்லாம். இவ்வளவு குற்றங்களுக்கு என்ன பதில் சொல்கிறீர்கள், என்ன பதில் சொல்கிறீர்கள் என்று குற்றங்களையெல்லாம் அடுக்கிக் காட்டினார்கள். குற்றங்கள் பரிமாறிக்கொள்ளப்படுவது, இதுபோன்ற காவல் துறை மானியங்களில் எதிர்க்கட்சியும், ஆளுங்கட்சியும் இயல்பாகவே கடைப்பிடிக்கின்ற ஒன்றுதான். இதற்கு என்ன பதில் என்று எதிர்க்கட்சி கேட்பது, அதற்குப் பதில் அளித்துவிட்டு ஆளுங்கட்சி இதற்கு என்ன பதில் என்று இவர்கள் கேட்பது, இப்படிப்பட்ட கேள்வி, பதில்கள் பட்டிமன்றங்களாக மாறி, நாம் இந்தத் துறையின்மூலமாக என்ன செய்யப் போகிறோம் என்பதைப் பற்றி விவாதிப்பதையே விட்டுவிடுகிறோம். அதுதான் பெரிய துரதிருஷ்டம் என்று பழைய பாணியிலே சொல்ல வேண்டும்.



பிற்பகல் 12–10

உழவர்களைப் பற்றிய மானியம் என்றால், அந்த உழவர்களுடைய கஷ்ட நஷ்டங்கள், அவர்களுடைய தேவைகள், அவர்களுக்கு ஏற்படுகின்ற இயற்கைச் சீற்ற பாதிப்புகள் இவற்றை எடுத்துச் சொல்லி அவர்களுக்கு இழப்பீடு தர வேண்டும்; அவர்களுக்கு ஏற்பட்ட விபத்துகள், தொடர்ந்து ஏற்பட்டுக் கொண்டிருக்கிற விபத்துகள் அதற்கெல்லாம் நிவாரணம் அளிக்க வேண்டும்; அவர்களுக்கு, விவசாயத்தை நம்பியிருக்கிற அந்த மக்களுக்கு அரசு உறுதுணையாக இருக்க வேண்டும் என்று, அவர்களுக்கு ஆதரவு தருகிற அரசாக இந்த அரசு இருக்க வேண்டும் என்று பேசுவதுதான் எதிர்க்கட்சியினுடைய பணியாகவும், ஆளுங்கட்சியினுடைய பணியாகவும் இருக்கும். ஆனால் பிரதான எதிர்க்கட்சியின் சார்பிலே, குறிப்பாக அ.தி.மு.க.வின் சார்பிலே பேசிய நண்பர்கள், யாருடைய மானியமோ, அந்தப் போலீஸ்காரர்களையே, காவல் துறை நண்பர்களையே தாக்கிப் பேசுகிற ஒரு சூழ்நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது.

காவல் துறை என்பது ஒரு பொதுவான துறைதான். அது நாங்கள் ஆட்சியிலே இருந்தாலும், எங்களுக்குக் கட்டுப்பட்ட துறை. நீங்கள் ஆட்சியிலே இருந்தாலும், உங்களுக்குக் கட்டுப்பட்ட துறை. நாங்கள் ஆட்சியிலே இருந்து நள்ளிரவிலே போய் இன்னாரைக் கைது செய் என்று சொன்னால், அவர்கள் செய்துதான் தீர வேண்டும்; வேறு வழியில்லை. வேண்டுமானால் மீண்டும் நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, எங்களிடத்திலே வந்து மன்னித்துக்கொள்ளுங்கள் என்று கேட்டு, 'மறப்போம், மன்னிப்போம்' என்று சொன்ன தலைவருடைய தம்பியாயிற்றே; ஆகவே மன்னித்து விடுவார்கள் என்ற நம்பிக்கையோடு மன்னிப்பைப் பெற்றவர்களும் உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) நான் அந்த விவரங்களுக்கெல்லாம் சென்று இந்த விவாதத்திலே எந்தச் சூடு இதிலே ஏற்படக் கூடாது என்று கருதினேனோ, எத்தகைய உஷ்ணம் இந்த விவாதத்தின்மூலம் இந்த மாமன்றத்திலே பரவக் கூடாது என்று எண்ணினேனோ, எத்தகைய எரிச்சலும், கொதிப்பும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய உள்ளங்களில், யாருடைய உள்ளத்திலும் இந்த விவாதத்தால் ஏற்படக் கூடாது என்று எண்ணினேனோ, அதற்கு மாறாக அதற்கு வழி வகுத்துவிடக் கூடாது என்பதற்காக, அந்த விவரங்களுக்குள்ளே எல்லாம் நான் செல்ல விரும்பவில்லை.

நம்முடைய பொள்ளாச்சி ஜெயராமன் அவர்கள் பேசும்பொழுது ஒவ்வொன்றாகச் சொல்லி, "இதற்கு என்ன சொல்கிறீர்கள்? இதற்கு

என்ன சொல்கிறீர்கள்? ஏன்? ஏன்? ஏன்?" என்று கேட்டார்கள். நான் அந்தக் கேள்விகளை ரசிக்கின்றேன், கேட்ட முறையை. அந்தக் கேள்விகளிலே உண்மை இருக்கிறதா, அல்லவா, அது ஆராய்ச்சிக்குரிய விஷயம். அந்தக் கேள்விகளுக்குத் திராவிட முன்னேற்றக் கழக அரசால் பதிலளிக்க முடியுமா? முடியாதா? அது எல்லோருக்கும், பொது மக்களுக்கும் தெரிந்த விஷயம். உண்மையில் நடந்தது என்ன, இவர் பேசுவது என்ன என்பதை மக்கள் புரிந்து கொண்டுதான் இருக்கின்றார்கள். ஆனால் நான் அவருக்குச் சொல்ல விரும்புகிறேன், ஏட்டிக்குப் போட்டியாக குற்றங்களைச் சொல்லிக் கொண்டிருந்தால்—நேற்றையதினம்கூட, நம்முடைய அருமை நண்பர் சேகர்பாபு அவர்கள் பேசும்பொழுது, சென்ற ஆண்டு குற்றங்களைவிட, தி.மு.க. ஆட்சியில் இந்த ஆண்டு குற்றங்கள் அதிகம் என்று சொன்னார். நிரம்ப தந்திரமாகப் பேசினார். அதைத்தான் எதை ஒப்பிட வேண்டுமோ, அதை ஒப்பிட்டார். சென்ற ஆண்டுக்கும், இந்த ஆண்டுக்கும், என்ன வித்தியாசம்? அதைவிட இந்த ஆண்டு ஆயிரமோ, ஐந்நூறோ அதிக குற்றங்கள் என்று சொன்னார். ஆனால், அவர் அதே கணக்கை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, 3 ஆண்டுகளுக்கு முன்பு என்ன என்று சொல்லியிருந்தால் மாட்டிக்கொண்டிருப்பார். அவரா மாட்டுவார்? எனக்கு நன்றாகத் தெரியும். அதனால்தான் அந்தக் கணக்கை 4, 5 ஆண்டு காலக் கணக்காக எடுத்துக்கொள்ளாமல், சென்ற ஆண்டு, இந்த ஆண்டு என்ற அந்த ஒப்பீட்டை மாத்திரம் இங்கே செய்து, சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு கொஞ்சம் அதிகம்தான், தி.மு.க. ஆட்சியிலே குற்றங்கள் என்று சொன்னார்.

*பிற்பகல் 12–15*

நாம் இதைப் பொதுவாகப் பரந்த நோக்கத்தோடு பார்க்க வேண்டும். சென்ற ஆண்டு, இந்த ஆண்டு என்று குறுகிய நோக்கத்தோடு பார்த்தால் அதிலே பயன் இல்லை. பரந்த நோக்கத்தோடு இதைப் பார்க்க வேண்டும். மொத்தத்தில் தி.மு.க. ஆட்சியிலும், அ.தி.மு.க. ஆட்சியிலும் கடந்த 4, 5 ஆண்டுகளில் நடைபெற்ற குற்றங்களின் எண்ணிக்கை எவ்வளவு? அந்தக் குற்றங்கள், கொலைக் குற்றங்களாக, கற்பழிப்புக் குற்றங்களாக, கொள்ளைகளாக, களவுகளாக, பகற் கொள்ளைகளாக, சாலைக் கொள்ளைகளாக, இப்படியெல்லாம் எத்தனையோ குற்றங்கள் இருக்கலாம். அப்படிப்பட்ட அந்தக் குற்றங்களின் எண்ணிக்கையைப் பார்த்தால், நீங்கள் இந்த அளவிற்கு ஆத்திரப்பட்டு ஏன், ஏன், ஏன் என்று கட்டபொம்மன் நாடகத்திலே சிவாஜி குரல் எழுப்புவதைப் போல, பொள்ளாச்சி நண்பர் குரல் எழுப்பியிருக்க வேண்டிய



தேவையில்லை. நான் உள்ளபடியே ரசித்தேன் அந்தப் பேச்சை. அந்த ஏன், ஏன் என்ற அந்தக் கம்பீரமான வார்த்தை இருக்கிறதே, அதை ரசித்தேன். வார்த்தையிலே கம்பீரம் இருந்தது; வசீகரம் இருந்தது; ஆனால், உண்மை எவ்வளவு இருந்தது? (சிரிப்பு) ஒப்பிட்டுப் பார்க்க வேண்டாமா என்பதற்காகத்தான் இதைச் சொல்கின்றேன். அவர் சொன்னார், தி.மு.க. ஆட்சியிலே அதிகமான குற்றங்கள் என்று குற்றங்களினுடைய எண்ணிக்கையைச் சொன்னார். அந்த எண்ணிக்கையை ஒரு முறை பார்ப்பது நல்லது என்று நான் கருதுகிறேன். அந்த எண்ணிக்கை பல்லாயிரக்கணக்கில்—அளவில் வித்தியாசமானவை. அதில் சொத்து சம்பந்தமான குற்றங்கள் என்று எடுத்துக் கொண்டால், 2006, இப்போது தி.மு.க. ஆட்சியில் 17,589 குற்றங்கள். 2007, தி.மு.க. ஆட்சியில் 17,652 குற்றங்கள். ஆனால், 2002, அ.தி.மு.க. ஆட்சியில் 25,050 குற்றங்கள், 2003, அ.தி.மு.க. ஆட்சியில் 23,818 குற்றங்கள், 2004, அ.தி.மு.க. ஆட்சியில் 22,340 குற்றங்கள், 2005, அ.தி.மு.க. ஆட்சியில் 20,173 குற்றங்கள். ஒன்றும் பெரிய வித்தியாசம் இல்லை. ஆனால் வித்தியாசம் இருக்கிறது. அதை மறைத்துவிட்டு தி.மு.க. ஆட்சியிலே அது என்ன ஆயிற்று, இது என்ன ஆயிற்று என்று கேட்பதிலே பயன் இல்லை. நீங்களும் பொது மக்களுக்காகத்தான் ஆட்சி நடத்தினீர்கள்; நாங்களும் பொது மக்களுக்காகத்தான் ஆட்சி நடத்துவதற்காக இந்தப் பொறுப்பைச் சுமந்துகொண்டிருக்கிறோம்.

*பிற்பகல் 12–20*

ஆனால், அந்தப் பொறுப்பை நிறைவேற்றுகின்ற நேரத்தில் நீங்கள் கண்ட பலன் என்ன? நாங்கள் கண்ட பலன் என்ன? ஆக, எண்ணிக்கை வாரியாகப் பார்த்தால், நாங்கள் நல்ல பலன் கண்டிருக்கிறோம். நீங்கள் அதிகமான குற்றங்களுக்குச் சொந்தக்காரர்களாக ஆகியிருக்கின்றீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) Total Violent Crimes—2002 முதல் 2007 வரையில், 2007, இப்போது தி.மு.க. ஆட்சியில் 22,969, Violent Crimes கொலை உட்பட; 2006, தி.மு.க. ஆட்சியில் 18,798. 2002, அ.தி.மு.க. ஆட்சியில் 28,876. 2003, அ.தி.மு.க. ஆட்சியில் 37,292. 2004, அ.தி.மு.க. ஆட்சியில் 37,492. 2005, அ.தி.மு.க. ஆட்சியில் 37,429. இப்போது நானும் பேச முடியும் அல்லவா? ஏன்? ஏன்? ஏன்? இந்த உயர்வு உங்கள் ஆட்சியிலே என்று நானும் கேட்க முடியும் அல்லவா? அதற்காகவா நாம் வாதங்கள் நடத்திக் கொண்டிருக்கிறோம். இல்லை. இவை எல்லாம் இன்னமும் கட்டுப்படுத்தப்பட வேண்டும். இன்னமும் குறைய வேண்டும். உங்கள் ஆட்சியானாலும், எங்கள் ஆட்சியானாலும், எந்த ஆட்சியானாலும்

அந்த ஆட்சியில் நாளைக்கு யாருடைய ஆட்சி இங்கே நடைபெற்றாலும், அந்த ஆட்சியிலே மக்கள், சட்டம்–ஒழுங்கு, அமைதி இவற்றைப் பாதுகாத்து, கட்டுப்பட்டு, அதற்கு அடங்கி நடப்பவர்களாக பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்று எண்ணுவது தவறா? அதைப்பற்றி நாம் பேசாமல் நீ அதிகம் குற்றம் செய்தாயா, நான் அதிகம் குற்றம் செய்தேனா என்று இந்த விவாதத்திலே ஈடுபடுவது எதிர்காலத்திற்கு நல்லது அல்ல; இந்த விவாதத்திற்கும் அது முத்தாய்ப்பாக அமைய முடியாது என்பதைத்தான் நான் சொல்ல விரும்புகின்றேன்.

அதைப்போலவே மிகக் கொடுமையான விஷயம், கற்பழிப்பு. இது 2002–ல் அ.தி.மு.க. ஆட்சியில் 512; 2003–ல் 557. 2004–ல் 618; 2005–ல் 571. தி.மு.க. ஆட்சியில் 2006–ல் இந்த 500 விவகாரமே கிடையாது; 457 தான். மானபங்கப்படுத்தியது அ.தி.மு.க. ஆட்சியில் 2002–ல் 1,866, 2003–ல் 2,022, 2004–ல் அ.தி.மு.க. ஆட்சியில் 1,861. 2005–ல் அ.தி.மு.க. ஆட்சியில் 1,764. 2006 தி.மு.க. ஆட்சியில் குறைகிறது; 1,179. அறவே குறைந்து விட்டது என்று நான் சொல்லவில்லை; மார்தட்டிக்கொள்ளவில்லை. குறையத் தொடங்கியிருக்கிறது. காவல் துறையினர் முடுக்கிவிடப்பட்டிருக்கிறார்கள் என்றுதான் இதற்குப் பொருள். இதைப் புரிந்து கொள்ளாமல், இதிலே ஒருவருக்கொருவர் போட்டா போட்டி, காட்டா குஸ்தி என்பதைப்போல நீங்கள் அதிகமா, நான் அதிகமா என்று போரிட்டுக் கொள்வதிலே எந்தப் பொருளும் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 12–25*

பொதுவாக, நம்முடைய தமிழகத்தில் நகரங்கள் என்று எடுத்துக்கொண்டாலே அதற்கு ஒரு ஒப்பீடு பார்த்தாலே, ஐதராபாத்தில் 2006–ல் நடைபெற்றுள்ள கொலைகள் 193; கொள்ளைகள் 12; மொத்த குற்றங்கள் 17,295. டெல்லியில் கொலைகள் 396; கொள்ளைகள் 12; மொத்த குற்றங்கள் 26,284. மும்பையில் கொலைகள் 239; கொள்ளைகள் 29; மொத்த குற்றங்கள் 31,070. ஆனால், சென்னையில் மொத்த கொலைகள் 131 தான். கொள்ளைகள் 5; மொத்த குற்றங்கள் 16,168. இப்படி குற்றங்கள், களவுகள், கற்பழிப்புகள், கொலைகள், இவையெல்லாம் மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போதுகூட, நாம் குறைவாகத்தான் இருக்கிறோம். நம்முடைய துறையினுடைய நடவடிக்கைகள் நேர்த்தியாகத்தான் இருக்கின்றன, பொறுப்புணர்வோடுதான் இருக்கின்றன. இருந்தாலும்கூட, இன்னும் எவ்வளவுதான் நேர்மையானவர்களாகக் காவல் துறையினர் இருக்க



வேண்டுமென்று விரும்பினாலும்கூட, அதிலும் ஒன்றிரண்டு கறுப்பு ஆடுகள் வரக்கூடும். கறுப்பு ஆடுகள் என்கின்ற வார்த்தைகூட நான் கண்டுபிடித்தது அல்ல. முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்கள் உதிர்த்த வார்த்தைதான், கறுப்பு ஆடுகள் என்பது. அந்தக் கறுப்பு ஆடுகள் இருந்துதான் தீரும். அந்தக் கறுப்பு ஆடுகளும் ஒழிக்கப்பட வேண்டும். எல்லோரும் சேர்ந்துதான் கறுப்பு ஆடுகளை ஒழிக்க வேண்டுமேயல்லாமல், நான் மாத்திரம் கறுப்பு ஆடுகளை ஒழிப்பேன் என்று நான் மார்தட்டிக்கொள்வதோ, ஏன் ஒழிக்கவில்லை என்று என்னைக் கேட்பதோ சரியல்ல.

நம்முடைய நண்பர் நேற்றைக்குப் பேசும்போது சேகர்பாபு கேட்டார். அவர் இரண்டு, மூன்று கேள்விகளை என்னைப் பார்த்துக் கேட்டார். அதிலே முக்கியமாக அவர் கேட்டது, நீதியரசர் சண்முகம் கமிஷனை நியமித்தீர்களே, அந்த அறிவிக்கையை இவ்வளவு நாளாகியும் வெளியிடாதது ஏன் என்று கேட்டார். நான் அவரைப் பார்த்துத் திருப்பிக் கேட்கிற கேள்வி, இவ்வளவு நாளாகியும் பத்திரிகையிலே வெளிவந்து அதை இன்னும் படிக்காதது ஏன் என்றுதான் நான் அவரைப் பார்த்துக் கேட்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 15–4–2008 அன்றைக்கே அரசாங்க கெசட்டில் அந்தச் செய்தி வெளியிடப்பட்டுவிட்டது. 25–4–2008 அன்று எல்லா ஏடுகளிலும் விளம்பரம் செய்யப்பட்டுவிட்டது. ' Tamil Nadu Government Gazette Extraordinary ' என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் கெசட்டிலும் ஒரு பத்திரிகையிலே 'The Hindu'–வில், இன்னொரு தமிழ்ப் பத்திரிகையிலே வெளியிட வேண்டுமென்பதற்காக 'தின மலர்'–இல், இரண்டிலும் வெளிவந்திருக்கிறது. ஆதாரம் வேண்டுமானால் என்னுடைய கையிலே ஆங்கிலம், தமிழ்ப் பத்திரிகைகளிலே வந்த அந்த விளம்பரங்கள் இருக்கின்றன; வந்திருக்கின்றன.

இன்னொன்று கேட்டார்; நீங்கள் நீதி விசாரணையைப் போட்டுவிட்டு, ஓர் அதிகாரியின் அலுவலகத்திற்குச் சென்று அங்கே raid செய்யலாமா என்று கேட்டார். ஆனால், உண்மை அதுவல்ல. Raid எதுவும் செய்யவில்லை. அரசால் அமைக்கப்பட்ட நீதியரசர் சண்முகம் அவர்களுடைய கமிஷனின் சார்பில், அவர்கள் தங்களுடைய விசாரணைக்காக, இலஞ்ச ஒழிப்புத் துறை அலுவலகத்திலேயிருந்த கம்ப்யூட்டரை எடுத்துச் சென்றார்கள்; அவ்வளவுதான். அதற்கும், அரசுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது. அரசின் சார்பாக எந்த ஆர்டரும் போட்டதும் கிடையாது. அதுமாத்திரம் அல்ல, நீதியரசர் சண்முகத்தினுடைய கமிஷனின் சார்பாக அந்த

அதிகாரியினுடைய அலுவலகத்திலேயிருந்த கம்ப்யூட்டரை மாத்திரமல்ல; தலைமைச் செயலாளர் திரு. திரிபாதி அவர்களுடைய அலுவலகத்தினுடைய கம்ப்யூட்டரையும் எடுத்துச் சென்றிருக்கிறார்கள், விசாரணைக்காக. இதிலிருந்து, இதிலே எந்தத் தவறும் இல்லை என்பதை மிகச் சுலபமாகப் புரிந்துகொள்ளலாம்.

திரு. கலைராஜன் பேசும்போது கேட்டார். இப்போது வழக்கறிஞர்களும், காவல் துறையினரும் அடிக்கடி மோதிக்கொள்கிறார்களே, அது பொது மக்களுக்கு நல்லது அல்லவே என்ற நல்ல எண்ணத்தோடு கலைராஜன் கேள்வியைக் கேட்டார். வழக்கறிஞர்கள் மற்றும் காவல் துறையினருக்கிடையே நடக்கும் பல்வேறு பிரச்சினை குறித்து, நீங்கள் ஒரு தனிக் குழு அமைத்து விசாரிக்க வேண்டும் என்றார். அதுவும் காலம் கடந்து அவர் சொன்னதுதான். என்ன வேடிக்கை என்றால், இந்த அவையில் சில நண்பர்கள் நடந்தவைகளைப்பற்றிப் பிறகு கேட்கிறார்கள். அப்படித்தான் கலைராஜனும் கேட்டார். ஏற்கெனவே அந்தக் குழுவை 28-12-2006 அன்றே அமைத்து அரசாணையாக வெளியிடப்பட்டுவிட்டது. அந்தக் குழுவிலே உயர் நீதிமன்ற நீதிபதி தலைவராகவும், அரசுத் தலைமை வழக்கறிஞர், தலைமைச் செயலாளர், உள் துறைச் செயலாளர், காவல் துறை தலைமை இயக்குனர், காவல் துறை தலைமை இயக்குநர் (சட்டம்-ஒழுங்கு) (பொறுப்பு) அவர்களும் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இந்தக் குழு, அவ்வப்போது பிரச்சினைகள் ஏற்படும்போதெல்லாம் கூடிப் பேசித் தீர்வு காண வழிவகைகள் செய்து வருகிறது. கலைராஜனுடைய கவலையோடு நானும் கலந்துகொள்கிறேன். பொதுவாக, வேறு யாருக்குமிடையே தகராறு என்றால் அதைத் தீர்த்துவைக்கக்கூடியவர்கள் காவலர்களும், அதற்காக வாதாடக்கூடிய வழக்கறிஞர்களும்தான்; ஆனால் வேடிக்கை என்னவென்றால், வழக்கறிஞர்களும், காவலர்களுமே மோதிக்கொள்வது நல்லதல்ல; அதற்காக ஏன் குழு போடவில்லை என்று கேட்டார். அது போட்டு நிரம்ப நாள் ஆயிற்று என்ற பதிலைத்தான் நான் கலைராஜனுக்குச் சொன்னேன்.

*பிற்பகல் 12-30*

அவர் இன்னொரு குறை சொன்னார்; நான் துப்பாக்கி லைசென்ஸ் கேட்கிறேன். ஏன் கொடுக்கவில்லை என்று. அவருக்கு ஏதாவது பயமாக இருக்கலாம்; அது வேறு விஷயம். ஏனென்றால் என்னைப் பார்த்தே, என்னை நோக்கியே இந்த அவையிலே முன்வரிசை



வரையிலே வந்த கலைராஜன், துப்பாக்கி கொடுத்துவிட்டால் என்ன செய்வாரோ? யாருக்கும் தெரியாது. அதனால் சொல்லியிருக்கலாம். துப்பாக்கி எதற்கு? நான் ஒரு முறை அறிஞர் அண்ணா அவர்களுடன் வட ஆற்காடு மாவட்டத்திற்குச் சுற்றுப் பயணம் சென்று இருந்தேன். வட ஆற்காடு மாவட்டத்திலே முல்லைக்கொம்பை என்று ஓர் ஊர். நம்முடைய ஞானசேகரனுடைய சொந்த ஊர். முல்லைக்கொம்பையிலே வடிவேல், முல்லை சக்தி என்ற இரண்டு உயிர் நண்பர்கள் எனக்கு உண்டு. அந்த முல்லைக்கொம்பையிலே போய் நாங்கள் இறங்கியதும், அண்ணா அவர்கள் கட்டிலிலே படுத்துக்கொண்டார். நாங்கள் தாழ்வாரத்திலே சென்று முல்லை சக்தியோடும், வடிவேலுவிடமும் பேசிக்கொண்டு இருந்தோம். அப்போது வடிவேல் சொன்னார், "இப்படி அர்த்த இராத்திரியிலே 12 மணிக்கெல்லாம் இந்த கிராமங்கள் வழியாகப் பயணம் செய்கிறீர்களே, இதெல்லாம் காடாரம் அல்லவா? ஒரு துப்பாக்கியாவது வைத்துக்கொள்ளக்கூடாதா?" என்று என்னைக் கேட்டார் முல்லை வடிவேல். "எனக்கு ஏன் துப்பாக்கி எல்லாம்? வருகிறவன் கொண்டு வருவான். நமக்கு எதற்குத் துப்பாக்கி? அதுதான் வருகிறவனே கொண்டு வருவான்" என்று சொன்னேன்! (சிரிப்பு) "நமக்கு எதற்குத் துப்பாக்கி. வருகிறவனே கொண்டு வருவான" என்றுதான் நான் நம்முடைய கலைராஜனுக்குச் சொல்லிக்கொள்கிறேன். (பலத்த சிரிப்பு) நான் அவரைக் குறைத்து மதிப்பிடவில்லை. வருகிறவனே கொண்டு வருவான், அதைப் பிடுங்கி அவர் சுடலாம் அல்லவா? அதற்காகச் சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நான், போலீஸார் நம்மைப் பற்றி, பொது மக்களைப் பற்றிக் கவலைப்படவேண்டும் என்று சொல்கிற அதேநேரத்தில், போலீஸ் துறையிலே இருக்கின்றவர்களைப் பற்றியும் நாம் கவலைப் படவேண்டும். அவர்களும் அரசு ஊழியர்களைப் போல, ஆசிரியர்களைப் போல, நம்மவர்கள் என்ற நிலையில் நமக்கு நண்பர்களாக வாழ்ந்துகொண்டிருப்பவர்கள்தான்; திகழ்ந்து கொண்டிருப்பவர்கள்தான். அதைத்தான் 1962 ஆம் ஆண்டிலேயே நான் இதே அவையிலே, அப்போது முதலமைச்சராக திரு. பக்தவச்சலம் இருந்தபோது, "நான் எழுதிய உதயசூரியன் நாடகத்தை ஏன் தடை செய்தீர்கள்?" என்று கேட்டபோது, "நீங்கள் போலீஸ்காரர்களைத் தூண்டிவிட்டு அவர்களுக்குச் சம்பளம் போதவில்லை என்றெல்லாம் சொல்லி அவர்களைத் தூண்டிவிட்டு நாடகம் எழுதியிருந்தீர்கள்; ஆகவேதான் தடை செய்தேன்" என்று சொன்னார்கள். "நாடகத்தைத் தடுத்து நிறுத்திவிட்டீர்கள்; அதில் என்ன எழுதியிருந்தேன் தெரியுமா?

என்று சொல்லி, அதில் எழுதியதை முழுவதும் இந்த அவையிலே அவருக்கு நேராக இந்த அவையிலே அன்றைக்குச் சொன்னேன். அதைத்தான் நேற்று உதயசூரியன் பாடிக் காட்டினார். ஆனால், அதனுடைய விளைவு ஒன்றும் வீண்போகவில்லை. 1962–ல் உதயசூரியன் நாடகம் தமிழகத்திலே நான் நடித்து, நடைபெற்ற அந்தக் காலக்கட்டத்தில் தொடர்ந்து இதே அவையில் நான் பேசும்போதே குறிப்பிட்டேன், 65 ரூபாயிலே தொடங்கி, ஆண்டு ஒன்றுக்கு ஒரு ரூபாய் மாத்திரம் உயர்வு பெற்று, 70 ரூபாய் அளவுக்கு வந்த பின்னால், இரண்டு ரூபாய் அளவிற்கு ஆண்டுதோறும் உயர்வு பெற்று, கடைசியில் 90 ரூபாய் வரையிலும் போலீஸார் சம்பளம் வாங்கினார்கள். இவ்விதம் 90 ரூபாய் சம்பளம் பெறுவதற்கு 15 ஆண்டு வரையில் அவர்கள் சேவை செய்தார்கள் என்ற நிலையில் இருக்கிறார்கள்.

பிற்பகல் 12–35

இந்த அடிப்படைச் சம்பளத்தை உயர்த்த வேண்டும் என்று நான் அன்றைக்குப் பேச்சிலே வற்புறுத்தினேன். அதற்குப் பிறகுதான் ஆட்சி மாறிற்று. 1967–லே தி.மு.க. ஆட்சி வந்தது. எங்களை ஆளாக்கி வளர்த்த அண்ணா மறைந்த பிறகு, அவர் விட்டுச் சென்ற பொறுப்பை, முதல்வர் பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டேன். ஏற்றுக்கொண்டவுடன், இந்தியாவிலேயே முதல் தடவையாக போலீஸாருடைய துயரங்களை ஆராய்ந்து, நிவர்த்தி செய்ய, முதல் போலீஸ் கமிஷனை திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் அமைத்தது. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி அமைத்த பிறகு, அவர்களுடைய ஊதியம், பிற சலுகைகள் அனைத்தும் உயர்வதற்கு அந்தக் கமிஷன்மூலமாகப் பல பரிந்துரைகள் வழங்கப்பட்டன. அந்தப் பரிந்துரைகளையெல்லாம் நாங்கள் ஏற்ற காரணத்தால், தி.மு.கழக அரசு ஏற்ற காரணத்தால், அவர்களுக்கு என்ன ஆதாயம் தெரியுமா? அவர்களுடைய ஆதாயம், படிப்படியாக சம்பள அளவில் உயர்ந்தது. 2–10–1970–க்கு முன்பு, ஒரு காவலருடைய ஊதியம், முதல் ஊதியக் குழுவிற்குப் பிறகு, எந்த அளவிற்குப் பெருகிற்று என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

2–10–1970–க்கு முன்பு 70 ரூபாயிலே தொடங்கி 95 ரூபாய் வரையிலே மாத ஊதியம், காவலர்களுக்கு. முதல் ஊதியக் குழுவிற்குப் பிறகு, 150 ரூபாயிலே தொடங்கி 225 ரூபாய். இப்படிப் படிப்படியாக உயர்ந்து, இன்றைக்கு நாம் எல்லாம் மகிழத்தக்க அளவிற்கு, அவர்களும் மகிழ்ச்சியிலே ஆழ்ந்திருக்கின்ற அளவிற்கு, இன்னும் மகிழப்போகின்ற அளவிற்கு இன்றைக்கு அவர்களுடைய மொத்த ஊதியம் 9,413 ரூபாய்.



(மேசையைத் தட்டும் ஒலி) நான் இதை இந்த அவையிலே பேசியபொழுது 70 ரூபாய். இதே அவைக்கு நான் மீண்டும் வந்து, பதில் தெரிவிப்பேன் என்று நான் அப்போது எண்ணியதில்லை. ஆனால், எப்படியோ அந்த எண்ணம் நிறைவேறி, இன்றைக்குச் சொல்லுகிறேன், 70 ரூபாயாக இருந்த ஊதியம் 9,413 ஆக மாறியிருக்கிறது. தலைமைக் காவலருக்கு 90–2–110 என்று இருந்த ஊதியம், இப்பொழுது 12,415 ரூபாய். எஸ்.ஐ.–க்கு 140–5–220 என்று இருந்த ஊதியம், 300–15–420–20–500 என்று படிப்படியாக உயர்ந்து, இப்பொழுது 16,684 ரூபாய், இன்ஸ்பெக்டர்கள் 225–375 என்று இருந்த ஊதியம் இப்பொழுது, 20,832 ரூபாய் என்று மாறியிருக்கிறது. இன்னும் 6–வது ஊதியக் குழு வந்தால் இதைவிட உயரும் என்ற நம்பிக்கையும், மகிழ்ச்சியும் நமக்கெல்லாம் இன்றைக்கு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–40

ஒரு பெரிய குற்றச்சாட்டை இறுதியாக எதிர்க்கட்சி சார்பில் பேசிய நம்முடைய பொள்ளாச்சி நண்பர் இங்கே குறிப்பிட்டார். எதிர்க்கட்சித் தலைவருக்குப் பாதுகாப்பே கொடுக்கவில்லை என்று குறிப்பிட்டார். கொடுத்த பாதுகாப்பு போதுமானதல்ல என்றும் குறைபட்டார். அவர்கள் இப்பொழுது நீதிமன்றத்திற்குச் சென்று பாதுகாப்பை மேலும் பெருக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். ஆனால் நாம் கொடுத்துள்ள பாதுகாப்பு குறைவானதா என்பதை தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள், Z Plus பாதுகாப்புப் பெறத் தகுதியுடையவர்; மறுக்கவில்லை. மத்திய அரசு ஒவ்வொரு வகையான பாதுகாப்பு நிலைக்கும் என்னென்ன பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட வேண்டுமென்று, விரிவாக மாநில அரசுகளுக்கு ஆணை வழங்கியுள்ளது. அந்த அடிப்படையிலே ஒரு துளியும் குறையாமல் முன்னாள் முதலமைச்சருக்கு எந்தவிதமான குறைபாடும் இல்லாமல், மேலும் சொல்லப்போனால் மத்திய அரசு கூறியிருக்கும் பாதுகாப்பு வசதிகளைவிட கூடுதலாகத்தான் இந்த அரசால் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன, பாதுகாப்பிற்காக. இது சம்பந்தமாக முன்னாள் முதலமைச்சர் அவர்கள் உயர் நீதிமன்றத்தில் தமிழக அரசுக்கு எதிராக வழக்குத் தொடுத்துள்ளார். அந்த வழக்கில் குறிப்பாக, அவர் தனது வீட்டைச் சுற்றிலும் closed circuit T.V., அவர்

பயணம் செய்யும்போது Jammer வாகனம், ஒரு ஆம்புலன்ஸ் வண்டி வழங்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். Z Plus பிரிவில் பாதுகாப்பைப் பெறுபவர்களுக்கு இந்த மூன்றும் தரப்பட வேண்டுமென்று மத்திய அரசின் ஆணையில் குறிப்பிடவில்லை. மேலும், அவர்களுக்கு அரசின் சார்பில் வழங்கப்படும் அனைத்து வண்டிகளும் பெட்ரோல் வாகனங்களாக இருக்க வேண்டுமென்றும், டீசல் வண்டியே அனுப்பக் கூடாது என்றும் அவர்கள் ஒரு கோரிக்கை வைத்து, அதைத் திட்டவட்டமாகத் தெரிவித்தார். அவர் பயணம் செய்வதற்காக, குண்டு துளைக்காத கார் ஒன்று வேண்டுமென்று கேட்டார். எனக்கு எந்த வகையான, முதலமைச்சருக்கு குண்டு துளைக்காத கார் அரசின் சார்பில் தரப்பட்டிருக்கிறதோ, அதேபோன்ற ஒரு கார் அவருக்குத் தற்போது வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அவர் அதைப் பயன்படுத்துவதில்லை. மேலும் அவர் தன்னுடைய பாதுகாப்பிற்காக எந்தெந்த அதிகாரிகளை வேண்டுமென்று கேட்டாரோ, அவர்கள் எல்லாம் அனுப்பப்பட்டுள்ளார்கள். அவர்களுடைய பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்பார்வை செய்ய ஓய்வு பெற்ற காவல் துறைத் தலைவர் மற்றும் இரண்டு அதிகாரிகளைக் கொண்ட, மூன்று பேர் கொண்ட குழு ஒன்றை அமைக்க வேண்டுமென்றும் அவர் தொடுத்த வழக்கிலே சொல்லியிருக்கிறார். இவையெல்லாம் மத்திய அரசால் நமக்கு அனுப்பப்பட்ட தாக்கீதில் இல்லாத காரணத்தால் நாம் நீதிமன்றத்திற்கு இந்தப் பதிலைச் சொல்லிக் கொண்டிருக்கின்றோம். நாம் அம்மையார் அவர்களுடைய பாதுகாப்பைப்பற்றிக் கவலைப்படாதவர்கள் அல்ல. எல்லோருடைய பாதுகாப்பிற்கும் இந்த அரசு உத்தரவாதம் அளிக்கக்கூடிய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் எது முடியுமோ அதைத்தான், எது சட்டத்திற்கு உட்பட்டதோ, அதைத்தான் நாம் செய்ய முடியும் என்பதால் அதைச் செய்துகொண்டிருக்கின்றோம். இதற்கு மேலும் பாதுகாப்பு வேண்டுமென்று உயர் நீதிமன்றமோ, உச்ச நீதிமன்றமோ கட்டளையிடுமேயானால், அதனைத் தருவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதை நான் மீண்டும் மீண்டும் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தெரிவித்துக்கொள்வதோடு வழக்கமாக, அறிவிப்புகள் சிலவற்றை இந்த மாமன்றத்திலே வெளியிட விரும்புகின்றேன்.

பிற்பகல் *12–45*

தமிழக அரசு அமைத்த மூன்றாவது காவல் ஆணையம், தனது அறிக்கையை *13–2–2008* அன்று அரசுக்கு அளித்தது. அறிக்கையிலே



உள்ள *444* பரிந்துரைகளையும் ஓராண்டு காலத்திற்குள் பரிசீலனை செய்து ஆணையிட வேண்டுமெனவும், அதற்காக *4* பேர் கொண்ட அதிகாரிகள் குழு ஒன்றை அமைக்க வேண்டுமெனவும், காவல் ஆணையம் பரிந்துரை செய்துள்ளது. அதன்படி, அதிகாரிகள் குழு அமைக்கப்பட்டு, கடந்த *2* மாதங்களில் *444* பரிந்துரைகளில் *104* பரிந்துரைகள் பரிசீலனை செய்யப்பட்டு, அவற்றில் பெரும்பாலானவற்றை ஏற்கலாம் என அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே மிக, மிக ஒன்றிரண்டு—துறைகளைப் பொறுத்தது என்ன பரிந்துரைகள் என்பதை மட்டும்—இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த அரசு பொறுப்பேற்றபோது, நம்முடைய மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் சுதர்சனம் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல், காவலர் பதவிகள் காலியாக இருந்தன. அவற்றில் ஏறத்தாழ *12,000* காவலர் பதவிகள் காலியாக இருந்தன. அவற்றில் *2006–2007* ஆம் ஆண்டில் *5,000* காவலர்களையும், *755* உதவி ஆய்வாளர்களையும், *2007–2008* ஆம் ஆண்டில், *6,262* காவலர்களையும், *2008–2009* ஆம் ஆண்டில் *4,000* காவலர்களையும் நிரப்பிட அரசு ஆணைகள் வெளியிட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தற்போதுள்ள நடைமுறைப்படி, இரண்டாம் நிலைக் காவலர்கள் மற்றும் சார்பு ஆய்வாளர்களை நியமிக்க அரசு அவ்வப்போது ஆணையிடுகிறது.

காலியிடங்களை நிரப்புவதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்த்திடும்வகையில் மூன்றாவது காவல் ஆணையம் அளித்துள்ள பரிந்துரை. இது மிக முக்கியமான பரிந்துரை. மாண்புமிகு உறுப்பினர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அந்தப் பரிந்துரையை ஏற்று, இனி ஒவ்வோர் ஆண்டும் காலியிடங்களை மதிப்பீடு செய்து, தமிழ்நாடு காவலர் தேர்வு வாரியம்மூலம் தேர்வு செய்ய ஆணையிடும் அதிகாரத்தைக் காவல் துறை தலைமை இயக்குநருக்கு வழங்கிட தற்போது அரசு முடிவு செய்துள்ளது. இந்த மாற்றம் *2009–2010*–இலிருந்து நடைமுறைப்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்குக் கைதட்டல் கொஞ்சம் குறைவாகத்தான் இருக்கும் என்பது எனக்குத் தெரியும்! (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

2009-2010 ஆம் ஆண்டிலிருந்து காவலர் இடங்கள் நிரப்பப்படும்போது சிறப்புக் காவல் படை மற்றும் பிற காவலர்களுக்குத் தனித் தனியாக தேர்வு நடத்தி நிரப்பப்படும்.

தற்போது மாநிலத்தில் காவல் பயிற்சிப் பள்ளிகள், வேலூர், கோயம்புத்தூர் மற்றும் பேரூரணியில் இயங்கி வருகின்றன. மூன்றாவது காவல் ஆணையம், மேலும் 3 காவல் பயிற்சிப் பள்ளிகள் தொடங்கப்பட வேண்டுமெனப் பரிந்துரை செய்துள்ளது. இந்தப் பரிந்துரையை ஏற்று, முதல் கட்டமாக 2008-2009 ஆம் ஆண்டில் திருச்சியில் ஒரு புதிய காவல் பயிற்சிப் பள்ளி தொடங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

காவலர்களுக்குக் குறைந்த விலையில் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் தற்போது எண்ணெய் மற்றும் பருப்பு வகைகளைத் தவிர, மற்ற பொருட்களுக்கு 50 சதவீத மானியம் அளிக்கப்பட்டு வருகிறது. மூன்றாவது காவல் ஆணையத்தின் பரிந்துரையை ஏற்று, இனி வருங்காலங்களில் எண்ணெய் மற்றும் பருப்பு வகைகளுக்கும் 50 சதவீத மானியம் அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு ஆண்டு ஒன்றுக்கு 80 இலட்சம் ரூபாய் கூடுதலாகச் செலவாகும்.

தற்போதுள்ள வழக்கப்படி, மானிய விலையில் அளிக்கப்படும் அத்தியாவசியப் பொருட்களை அந்தந்தச் சரகத்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள் பெற்றுக் காவலர்களுக்கு அளிக்கும் நிலை உள்ளது. இதில் பல நடைமுறைச் சிக்கல்கள் உள்ளதால், இனிக் காவலர்கள் தங்கள் பகுதியிலே உள்ள நியாய விலைக் கடைகள்மூலம் அத்தியாவசியப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளும்வகையில் மாற்றுத் திட்டம் ஒன்று, வரும் அக்டோபர் ஒன்றாம் தேதியிலேயிருந்து செயல்படுத்தப்படும்.

ஒவ்வோர் ஆண்டும், தமிழ்நாடு காவல் துறை கருணைக் கொடைத் திட்டத்திற்கு அரசு 50 இலட்சம் ரூபாய் மானியம் அளித்து வருகிறது. மேலும், மாவட்ட அளவில் அரசுப் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் முதலிடம் பெறும் காவலர்களின் குழந்தைகளுக்கு ஆண்டுதோறும் அரசு நிதி ஒதுக்கீட்டிலிருந்து பரிசுகள் அளிக்கப்பட்டு வருகின்றன. மூன்றாவது காவல் ஆணையத்தின் பரிந்துரையையொட்டி, இத்திட்டத்தில் பின்வரும் மாற்றங்களைச் செய்ய அரசு முடிவெடுத்துள்ளது:



பிற்பகல் 12-50

ஒவ்வொரு மாவட்டத்திலும் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்புத் தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெறும் காவல் துறைப் பணியாளர்களின் குழந்தைகளுக்கு, 10 ஆம் வகுப்புக்குத் தற்போது வழங்கப்படும் 3 பரிசுகளை 10 பரிசுகளாகவும், 12 ஆம் வகுப்புக்குத் தற்போது வழங்கப்படும் 3 பரிசுகளை 10 பரிசுகளாகவும் உயர்த்தி வழங்கப்படும்; (மேசையைத் தட்டும் ஒலி) பரிசுத் தொகைகளும் உயர்த்தி வழங்கப்படும்.

மேலும், காவலர் குழந்தைகளின் மேற்படிப்பிற்கு அளிக்கப்படும் உதவித் தொகையானது, தற்போது அவர்களின் உயர் படிப்பின் மொத்தக் காலத்திற்கும் சேர்த்து, முதல் மதிப்பெண் வாங்குபவர்களுக்கு நான்கு தவணைகளில் 40 ஆயிரம் ரூபாயும், இரண்டாம் இடத்திலிருந்து ஒன்பதாம் இடம் வரை மதிப்பெண் பெறுபவர்களுக்கு நான்கு தவணைகளில் 20 ஆயிரம் ரூபாயும், ஆக மொத்தம் ஒன்பது பேருக்கு வழங்கப்படும். இனிமேல், இந்த உதவித் தொகை பெற விண்ணப்பம் அளிப்பவர்களில், அதிக மதிப்பெண்கள் பெறும் முதல் 100 மாணவர்களுக்கு, ஆண்டிற்கு அவர்கள் செலுத்தும் கல்விக் கட்டணமோ அல்லது 20 ஆயிரம் ரூபாயோ, இதில் எது குறைவோ, அந்தத் தொகை அவர்கள் மேற்படிப்பு முடியும் வரை அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

சீரமைக்கப்பட்ட இந்தத் தமிழ்நாடு காவல் துறை கருணைக் கொடைத் திட்டத்திற்கான அரசின் பங்கு, ஆண்டொன்றிற்கு 50 இலட்சம் ரூபாயிலிருந்து 1 கோடி ரூபாயாக உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மூன்றாவது போலீஸ் கமிஷன்—காவல் ஆணையம்—அடுத்த 5 ஆண்டுகளுக்குப் புதிய காவல் நிலையங்கள், மிக மிக அவசியம் என்று கருதப்படும் இடங்களைத் தவிர, பிற இடங்களில் திறக்க வேண்டியதில்லை என்றும், தேவையானால் தற்போது உள்ள காவல் நிலையங்களின் தரத்தை உயர்த்தலாம் என்றும், 5 ஆண்டுகளுக்குப் பிறகு நிலைமையை மறுபரிசீலனை செய்யலாம் என்றும் பரிந்துரை செய்துள்ளது.

வாகனங்களின் எண்ணிக்கை அடிப்படையிலும், போக்குவரத்து நிலைமைகளைக் கருத்திற்கொண்டும், புதிய போக்குவரத்துக் காவல் நிலையங்கள் திறக்கப்படும்.

படிப்படியாக அனைத்துப் புறக்காவல் நிலையங்களும், முழு அளவிலான காவல் நிலையங்களாகத் தரமுயர்த்தப்படும். தற்போதுள்ள 5 வகைக் காவல் நிலையங்கள், இனி மூன்று வகைகளாக நிலை மாற்றம் செய்யப்படும்.

தமிழகத்தில் மொத்தமுள்ள 1,452 காவல் நிலையங்களில், சொந்தக் கட்டடம் இல்லாத 273 காவல் நிலையங்களுக்கு, அடுத்த மூன்று ஆண்டுகளில் புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

காவல் நிலைய வாகனங்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர எரிபொருள் அளவு, 60 லிட்டரிலிருந்து 150 லிட்டராக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒவ்வொரு காவல் நிலையத்திலும் பார்வையாளர்கள் அமர்வதற்கு வசதிகள் செய்து தரப்படும். காவல் நிலையங்களுக்கு வருபவர்களின் பெயர்களைப் பதிவு செய்ய, பார்வையாளர்களுக்கான வருகைப் பதிவேடு ஒன்று அனைத்துக் காவல் நிலையங்களிலும் வைக்கப்படும்.

11–வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குள் (2007–2012), தமிழ்நாடு சிறப்புக் காவல் படை, ஆயுதப் படைக் காவலர்களில் 75 சதவிகிதம் பேருக்கும், பிற காவலர்களில் 50 சதவிகிதம் பேருக்கும் குடியிருப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

காவலர்களுக்கான பல்வேறு படிகளை உயர்த்த காவல் ஆணையம் பரிந்துரைகளைச் செய்துள்ளது. அவற்றில் பின்வரும் படிகளை உடனடியாகவும், ஏனையவற்றை ஆறாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளையொட்டியும் உயர்த்தி அறிவிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

காவலர் முதல் ஆய்வாளர் வரை தற்போது மாதம் ஒன்றுக்கு ரூ.120– இடர்ப் படி (Risk Allowance) வழங்கப்படுகிறது. அதை 180 ரூபாயாகவும், துணைக் கண்காணிப்பாளர் மற்றும் கூடுதல் கண்காணிப்பாளர்களுக்கு மாதம் ஒன்றுக்குத் தற்போது வழங்கப்படும் 140 ரூபாயை 210 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும். இதற்கு ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 8 கோடி ரூபாய் கூடுதல் செலவாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

தற்போது காவலர்களுக்குச் சீருடை தைக்க, தையற்கூலி 150 ரூபாய் என்று தருவது, 250 ரூபாயாக உயர்த்திக் கொடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)



பிற்பகல் 12–55

2008 ஆம் ஆண்டில் 53 தலைமைக் காவலர்கள் சிறப்பு உதவி ஆய்வாளர்களாக நிலை உயர்த்தப்படுவார்கள்.

2007 ஆம் ஆண்டில் 12 புறக் காவல் நிலையங்கள் முழு அளவிலான காவல் நிலையங்களாகத் தரம் உயர்த்தப்பட்டன. தற்பொழுது மாநிலத்தில் 94 புறக் காவல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் அமைச்சர் திரு. சுப. தங்கவேலன் அவர்களின் கோரிக்கையை ஏற்று, இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள கீழ்செல்வனூர் புறக் காவல் நிலையமும், உத்திரமேரூர் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர் கே. சுந்தர் கோரிக்கையை ஏற்று, காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள பெருநகர் புறக் காவல் நிலையமும், (மேசையைத் தட்டும் ஒலி) சென்னை நகரத்திலே உள்ள அரசுப் பொது மருத்துவமனை மற்றும் ஸ்டான்லி மருத்துவமனை புறக் காவல் நிலையங்களும், நாகப்பட்டினம் மாவட்டத்திலே உள்ள பாகசாலை, விழுப்புரம் மாவட்டத்திலே உள்ள எடக்கல், மதுரையிலே உள்ள வி. சத்திரப்பட்டி, விருதுநகர் மாவட்டத்திலே உள்ள காட்டனூர், சிவகங்கையிலே உள்ள பூலாங்குறிச்சி மற்றும் தருமபுரி மாவட்டத்திலே உள்ள பெரும்பாளை ஆகிய 10 புறக் காவல் நிலையங்களும் முழு அளவிலான காவல் நிலையங்களாக 2008–2009–ல் மாற்றம் செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2007–2008 ஆம் ஆண்டில் 15 காவல் நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு பணியாளர்களுடைய எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டது. 2008–2009–ல், மேட்டுப்பாளையம், உடுமலைப்பேட்டை, ஓசூர், கம்பம் தெற்கு, காரைக்குடி வடக்கு, தஞ்சாவூர் தெற்கு, பட்டுக்கோட்டை, திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி, வேளாங்கண்ணி, சிதம்பரம், திருவண்ணாமலை தாலுகா காவல் நிலையம், திருப்பரங்குன்றம், சிலைமான் மற்றும் புளியங்குடி ஆகிய 15 காவல் நிலையங்கள் தரம் உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

காவல் ஆணையம், பொதுவாக, அடுத்த 5 ஆண்டுகளுக்குப் புதிய காவல் நிலையங்கள் திறக்கப்பட வேண்டாமெனப் பரிந்துரை செய்துள்ளபோதிலும், அத்தியாவசியத் தேவையைக் கருதி, வேலூர் மாவட்டம், அரியூரிலே உள்ள பொற்கோவில் வளாகத்தில் பெருமளவில் திரளுகின்ற பொது மக்கள் நலன் கருதி, ஒரு புதிய

காவல் நிலையம் தொடங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல், சென்னைப் புறநகர்ப் பகுதியில் உள்ள செம்மஞ்சேரியிலும் காவல் நிலையம் ஒன்று தொடங்கப்படும்.

அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள் கோரிக்கையை ஏற்று, கடலூர் மாவட்டம், மங்கலம்பேட்டை காவல் நிலையத்தை இரண்டாகப் பிரித்து, ஆலடியில் காவல் நிலையம் ஒன்று புதியதாகத் தொடங்கப்படும். சட்டமன்ற உறுப்பினர் திரு. என்.ஆர். ரங்கராஜன் அவர்களின் கோரிக்கையை ஏற்று, பட்டுக்கோட்டையில் கூடுதலாகப் புதிய காவல் நிலையம் ஒன்று அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்களின் கோரிக்கையை ஏற்று, செய்யாறிலும், சட்டப் பேரவை துணைத் தலைவர் திரு. வி.பி. துரைசாமி அவர்களின் கோரிக்கையை ஏற்று, நாமக்கல்லிலும், பல்லடம், கடலூர், சிதம்பரம், கன்னியாகுமரி, திருவாரூர், பெரியகுளம், வாணியம்பாடி, ராசிபுரம் ஆகிய ஊர்களிலும், மொத்தம் 10 இடங்களில் போக்குவரத்துக் காவல் நிலையங்கள் 2008–2009ஆம் ஆண்டில் திறக்கப்படும்.

கடலூர் மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் அலுவலகம். கடலூர் மாவட்டக் காவல் துறை அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் 3 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

திருநெல்வேலி காவல் துறை ஆணையர் அலுவலகப் புதிய கட்டடம், 3 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2007–2008 ஆம் ஆண்டில் 2,000 குடியிருப்புகளைக் கட்ட ஆணை வெளியிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) 2008–2009 ஆம் ஆண்டில் 110 கோடி ரூபாய் செலவில், மாநிலத்தில் மேலும் 2,000 குடியிருப்புகள் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

டிஜிட்டல் தொழில்நுட்பத்தோடு நுண்ணலை அமைப்பு. தகவல் தொடர்பு அமைப்பைச் சீரமைக்கும் நோக்குடன், பின்வரும் 9 இணைப்புகள் டிஜிட்டல் மைக்ரோவேவ் ஆக 2 கோடியே 56 இலட்சம் ரூபாய் செலவில் மாற்றப்படும்:



1. திருவாரூருக்கும் நாகப்பட்டினத்திற்கும் இடையேயும்,
2. மதுரைக்கும் சிவகங்கைக்கும் இடையேயும்,
3. சிவகங்கைக்கும் இராமநாதபுரத்திற்கும் இடையேயும்,
4. கொடைக்கானலுக்கும் அரங்கனலுக்கும் இடையேயும்,
5. அரங்கனலுக்கும் திண்டுக்கல்லுக்கும் இடையேயும்,
6. மேல்பட்டுக்கும் இன்னாடுக்கும் இடையேயும்,
7. இன்னாடுக்கும் திருவண்ணாமலை நகரத்திற்கும் இடையேயும்,
8. திருவண்ணாமலை நகரத்திற்கும் திருவண்ணாமலை காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கும் இடையேயும்,
9. விழுப்புரத்திற்கும் கடலூருக்கும் இடையேயும் இந்த இணைப்புகள் அமைக்கப்படும்.

பிற்பகல் 1–00

காவல் நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள். 2008–2009 ஆம் ஆண்டில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஆர்.எஸ்.புரம் அனைத்து மகளிர் காவல் நிலையம், நாமக்கல் மாவட்டத்தில் பரமத்திவேலூர், மோகனூர் மற்றும் நாமக்கல் காவல் நிலையங்கள், காஞ்சிபுரம் மாவட்டத்தில் செங்கற்பட்டு நகரம் மற்றும் வேலூர் மாவட்டத்தில் உள்ள வாலாஜாபேட்டை காவல் நிலையம் ஆகிய 6 காவல் நிலையங்களுக்குப் புதிய கட்டடம் கட்டப்படும்.

இவை தவிர, மாண்புமிகு அமைச்சர்களும், சட்டப் பேரவை உறுப்பினர்களும் காவல் நிலையங்களுக்குக் கட்டடம் கட்ட கோரிக்கை வைத்துள்ளார்கள். அமைச்சர்கள் திரு. க. பொன்முடி, திரு. எ.வ. வேலு, திரு. தங்கம் தென்னரசு, திரு. வெள்ளக்கோயில் மு.பெ. சாமிநாதன், திருமதி பூங்கோதை ஆலடி அருணா மற்றும் சட்டப் பேரவை உறுப்பினர்கள் திரு. டி. இராமச்சந்திரன், திரு. சி. தமிழ்ச்செல்வன், திரு. கே.பி. இராமசுவாமி, திரு. கு. சின்னதுரை, திரு. மா. அன்பழகன், திரு. சி. அய்யப்பன், திரு. சி. சண்முகவேல், திரு. சபா. இராஜேந்திரன், திரு. இரா. மாணிக்கம் மற்றும் திரு. வீர. இளவரசன் ஆகியோரது கோரிக்கைகளை ஏற்று விழுப்புரம், திண்டிவனம், தெள்ளாறு, வந்தவாசி தெற்கு, நரிக்குடி, காரியாப்பட்டி, வெள்ளக்கோயில், வீரகேரளம்புதூர், கெலமங்கலம், உத்தனப்பள்ளி, ஏத்தாப்பூர், ராசிபுரம் நகரம், வீரகனூர், பழனி நகரம், ரெட்டிச்சாவடி,

தளி, நெல்லிக்குப்பம், குளித்தலை மற்றும் திருமங்கலம் நகரம் ஆகிய 19 காவல் நிலையங்களுக்கு 2008–2009 ஆம் ஆண்டில் புதிய கட்டடங்கள் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், வனத் துறை அமைச்சர் திரு. என். செல்வராஜ், மணச்சநல்லூர் காவல் நிலையத்திற்கும், சட்டப் பேரவை காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. சுதர்சனம் அவர்கள், பூந்தமல்லி காவல் நிலையத்திற்கும், திரு. மாலைராஜா, தச்சநல்லூர் காவல் நிலையத்திற்கும் கட்டடம் கட்ட கோரிக்கை வைத்துள்ளனர். நிலம் தேடப்படுகிறது. நிலம் கிடைத்தவுடன் உடனடியாகக் கட்டடம் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

துணைக் காவல் கண்காணிப்பாளர்களுக்கான அலுவலகக் கட்டடம். 2008–2009 ஆம் ஆண்டில் காஞ்சிபுரம் மாவட்டம் மதுராந்தகத்திலும், திருவண்ணாமலை மாவட்டம் போளூரிலும், நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்திலும், தருமபுரி மாவட்டம் பர்கூரிலும், விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூரிலும் துணைக் காவல் கண்காணிப்பாளர்களுக்கான அலுவலகம் மற்றும் குடியிருப்புகளுக்கான கட்டடம் கட்டப்படும்.

கோயம்புத்தூர் காவல் ஆணையர் அலுவலகத்தில் கணினிவழி குற்றப் பிரிவு (Cyber Cell) ஏற்படுத்துதல். இணைய தளம் மற்றும் கணினி தொடர்பான குற்றங்களை விசாரிக்க, கோவை காவல் ஆணையர் அலுவலகத்தில் தனியாக ஒரு கணினிவழி குற்றப் பிரிவு இந்த ஆண்டு உருவாக்கப்படும்.

தடய அறிவியல் துறையின்கீழ் Narco Lab நிறுவுதல். குற்றவாளிகளின் ஆழ்மனதில் பதிந்துள்ள உண்மைகளை நவீன அறிவியல்பூர்வமான முறையில் விசாரித்துக் கண்டறிவதற்கான வசதிகள் தற்பொழுது பெங்களூரு, மும்பை மற்றும் காந்திநகர் ஆகிய இடங்களில் உள்ளன. இதுபோன்ற வசதிகள் கொண்ட Narco Lab என்ற மையம், 2008–2009 ஆம் ஆண்டில் சென்னையில் தடய அறிவியல் துறையின்கீழ் நிறுவப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

தற்போது 225 இல்லப் பணியாளர்கள், மாதம் 2,000 ரூபாய் தொகுப்பூதியத்தில் பணிபுரிந்து வருகிறார்கள். நடப்பாண்டில் இவர்கள் அனைவரும் அலுவலக உதவியாளருக்கான கால முறை ஊதிய விகிதத்தில் பணி வரன்முறைப்படுத்தப்படுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



காவல் நிலையங்களில் பணியாற்றும் பகுதி நேர துப்புரவுப் பணியாளர்கள் தொடர்ந்து தங்களுடைய தொகுப்பூதியத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டுமெனக் கோரிக்கை வைத்துள்ளார்கள். ஆறாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளின்மீதான ஆணைகள் வெளியிடப்படும்போது, இந்தக் கோரிக்கையும் பரிவுடன் பரிசீலிக்கப்பட்டு நல்ல முடிவு அறிவிக்கப்படும்.

தமிழ்நாட்டில் பணியாற்றும் இந்திய காவல் பணி அதிகாரிகளுக்கு அலுவலகப் பயன்பாட்டிற்காக ஒரு மடிக் கணினி (Laptop Computer) வழங்கப்படும்.

காவல் துறையினருக்கு Common User Group தொலைபேசி வசதி செய்து கொடுத்தல். மாவட்டக் காவல் கண்காணிப்பாளரிலிருந்து மாவட்டத்தில் பணிபுரியும் சார்பு ஆய்வாளர்கள் வரை அனைவருக்கும் Common User Group அடிப்படையில் செல்லிட தொலைபேசிமூலம் அலுவலகப் பணிக்காகக் காவல் துறையினரிடையே தொடர்பு கொள்வதற்காகும் கட்டணத்தை அரசு ஏற்கும்.

பிற்பகல் 1–05

பணி நிமித்தம் சென்னைக்கு வரும் காவலர்கள் தங்க வசதி. பல்வேறு நீதிமன்றப் பணிகளுக்காகச் சென்னைக்கு வரும் காவலர்கள் தங்குவதற்குரிய இட வசதி இல்லாததைக் கருத்திற்கொண்டு, 200 பேர் தங்குவதற்கான தங்கும் வசதி (dormitory) உடனடியாக உருவாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை நகரக் காவல் ஆணையரகத்தின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வாழும் மக்கள் தொகையின் எண்ணிக்கை, சுமார் ஒரு கோடியே இருபது இலட்சம் ஆகும். சென்னையைச் சுற்றியுள்ள புறநகர்ப் பகுதியிலே உள்ள குடியிருப்புகளின் எண்ணிக்கையும், வாகனங்களின் எண்ணிக்கையும் பெருகி வருவதோடு, பல்வேறு தொழில் நிறுவனங்களும் இந்தப் பகுதியில் அமைந்துள்ளன.

மும்பை நகரத்தில் ஓர் ஆணையரகமும், அதன் புறநகர்ப் பகுதிகளிலே இரண்டு ஆணையரகங்களும், அதேபோல, ஐதராபாத் நகரத்தில் ஓர் ஆணையரகமும், அதன் புறநகர்ப் பகுதிகளுக்கென ஒரு தனி ஆணையரகமும் அமைக்கப்பட்டுள்ளன. அதே அடிப்படையில், நிருவாக நலன் கருதி, சென்னை நகரக் காவல் ஆணையரகத்தைப் பிரித்து, புறநகர்ப் பகுதிகளுக்கென ஒரு தனிக் காவல் ஆணையரகம்

ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இது மூன்றாவது காவல் ஆணையத்தின் பரிந்துரைப்படி, தேவைக்கேற்ப கூடுதல் காவலர்களின் எண்ணிக்கை போதுமான அளவிற்கு உயர்த்தப்படும்.

2006-2007 ஆம் ஆண்டில் தி.மு.க. அரசு பொறுப்பேற்றவுடன் மாநிலக் காவல் துறைத் தலைமை அலுவலகத்திற்கு ஓர் இணைப்புக் கட்டடம், 20 கோடியே, 31 இலட்சம் ரூபாய் செலவிலும், சென்னைக் காவல் ஆணையரகத்திற்குப் புதிய கட்டடம் 20 கோடியே 65 இலட்சம் ரூபாய் செலவிலும் கட்ட அனுமதியளிக்கப்பட்டு, அதற்கான முதற்கட்டப் பணிகள் முடிவடைந்துள்ளன. குற்றப் புலனாய்வுத் துறை மற்றும் சிறப்புப் புலனாய்வுப் பிரிவு, Admiralty கட்டடத்தில் இதுவரை இயங்கிவந்தன. Admiralty கட்டடம், சட்டப் பேரவைக்குப் புதிய கட்டடம் கட்ட ஏதுவாக இடிக்கப்பட்டுள்ளதால், இந்த அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களுக்குத் தற்காலிகமாக மாற்றப்பட்டுள்ளன. சென்னை நகரக் காவல் ஆணையரக வளாகத்திலுள்ள காலியிடத்தில், குற்றப் புலனாய்வுத் துறை மற்றும் சிறப்புப் புலனாய்வுப் பிரிவுகளுக்குச் சொந்தக் கட்டடம் விரைவில் கட்டப்படும்.

பணிக் காலத்தில் எவ்விதத் தண்டனையும் பெறாமல், குறைந்தது பத்தாண்டுகள் பணி முடித்த காவலர்கள் மற்றும் தலைமைக் காவலர்களுக்குத் தமிழ்நாடு முதலமைச்சரின் காவலர் பதக்கம் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. இந்தப் பதக்கத்தைப் பெறும் காவலர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 40 ரூபாயும், தலைமைக் காவலர்களுக்கு 50 ரூபாயும் ஊதியத்தோடு கூடுதலாக தற்போது வழங்கப்படுகிறது. ஆனால் பணியிலே சேர்ந்து, ஒருசில ஆண்டுகளாகி, ஒரு தண்டனை பெறும் காவலர்கள் இந்தப் பதக்கத்தைப் பெறமுடியாத சூழ்நிலை இப்போது உள்ளது. மூன்றாவது காவல் ஆணையத்தின் பரிந்துரையை ஏற்று, மீண்டும் 10 ஆண்டுகளுக்குத் தொடர்ந்து தண்டனையில்லாமல் பணியாற்றும் காவலர்களுக்கும், தலைமைக் காவலர்களுக்கும் முதலமைச்சர் பதக்கமும், படியும் வழங்கப்படும். முதல் தண்டனைக்குப் பிறகு, இன்னொரு தண்டனை பெற்றாலும் அவர்களுக்கு இந்தப் பரிசும், படியும் உண்டு என்பது இதற்குப் பொருள்.

காவலர்களுக்கு வழங்கப்படும் உடல் தகுதித் தேர்வுப் படி. தற்போது காவலர்களுக்கு உடல் தகுதித் தேர்வின் அடிப்படையில், மாதம் ஒன்றுக்கு ரூபாய் பத்து, சிறப்பு ஊதியமாகத் தரப்பட்டு வருகிறது. இனி, இந்தத் தொகை மாதம் ஒன்றுக்கு 20 ரூபாய் வீதம் உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)



மின்சாரத் துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா. வீராசாமி, வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் மற்றும் மீன்வளத் துறை அமைச்சர் திரு. கே.பி.பி. சாமி ஆகியோரின் கோரிக்கைகளை ஏற்று, கலவை, சூரமங்கலம் மற்றும் திருவொற்றியூர் ஆகிய இடங்களில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-10

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடம். தமிழ்நாட்டிலுள்ள மொத்தம் 283 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களில், 161 நிலையங்கள் சொந்தக் கட்டடங்களிலும், 30 நிலையங்கள் பகுதி நிரந்தரக் கட்டடங்களிலும், 92 நிலையங்கள் வாடகைக் கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. மத்திய நீதி மற்றும் சட்டத் துறை இணை அமைச்சர் திரு. கே. வேங்கடபதி, சட்டப் பேரவை உறுப்பினர்கள் திரு. தா. உதயசூரியன், திருக்கச்சூர் திரு. ஆறுமுகம், திரு. வை. சிவபுண்ணியம், திரு. கே. திருநாவுக்கரசு, திரு. குத்தாலம் க. அன்பழகன் ஆகியோருடைய கோரிக்கைகளை ஏற்று, சங்கராபுரம், திருக்கழுக்குன்றம், கூத்தாநல்லூர், உளுந்தூர்பேட்டை மற்றும் குடவாசல் ஆகிய இடங்களிலுள்ள தீயணைப்பு நிலையங்களுக்கு, 2008-2009 ஆம் ஆண்டில் புதிய கட்டடங்களைக் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பழைய தீயணைப்பு வாகனங்களுக்குப் பதிலாக புதிய வாகனங்கள். தற்சமயம், தீயணைப்புத் துறையில் 15 ஆண்டுகளுக்கும் மேலான 130 தீயணைப்பு வாகனங்கள் உள்ளன. இவற்றிற்குப் பதிலாக, புதிய வாகனங்கள் படிப்படியாக வாங்கப்படும். அதன்படி, நடப்பாண்டில் 25 தீயணைப்பு வாகனங்கள் 4 கோடி ரூபாய் செலவில் வாங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

சாதி, மத சச்சரவுகளைப் பொறுத்தவரையில், எந்தவித அசம்பாவிதமும் நிகழாவண்ணம் அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது. திருவரங்கத்தில் பெரியார் சிலை சேதப்படுத்தப்பட்டபோதும், சமீபத்தில் மதுரையில் தேவர் திருமகனார் சிலை, அண்ணல் அம்பேத்கர் சிலை களங்கப்படுத்தப்பட்டபோதும் நிலைமை சமாளிக்கப்பட்டு, இப்பிரச்சினைகள் பெரிதாகாமல் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டதை அனைவரும் அறிவர்.

மேலும், இதுபோன்ற நேர்வுகளில் நிலைமையை ஒருசிலர் தவறாகப் பயன்படுத்தி, சாதி, மத உணர்வுகளைத் தூண்டுவதால் ஏற்படும் மோதல்களைத் தவிர்க்க இதுபோன்ற நபர்களின்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க ஏதுவாக, தமிழ்நாட்டில் குண்டர் சட்டத்தில் சில திருத்தங்களைச் செய்ய அரசு முடிவு செய்துள்ளது. அதற்கான மசோதா இந்தக் கூட்டத் தொடரில் தாக்கல் செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தீயணைப்புடன் என்னுடைய உரை நிறைவுபெறுகிறது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) காவல், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் மற்றும் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆகிய மானியக் கோரிக்கைகள் குறித்து உறுப்பினர்கள் வழங்கியுள்ள வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கின்றேன். வணக்கம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி டி. யசோதா.

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமராஜர் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட புலனாய்வுத் துறையில் S.B.,C.I.D. and Detachment D.S.P.–கள் நியமிக்கப்பட்டனர். தற்பொழுது அத்துறையில் அப்பணியில் இருந்தவர்களின் பதவி குறைக்கப்பட்டு ஆய்வாளர்களாக மாறியிருக்கிறார்கள். அவர்கள்தான் துல்லியமாகப் புலன் விசாரணை செய்து, உண்மையான தகவல்களைத் தந்து, அரசுக்குப் பெருமை சேர்த்தவர்கள். இவர்களுக்கு மீண்டும் பதவி உயர்வு தருவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், என்னுடைய ஸ்ரீபெரும்புதூர் தொகுதியில் நிறைய தொழிற்சாலைகள் இருக்கின்றன. ஒரு தீயணைப்பு நிலையம்கூட இல்லை. அதையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார்.

***திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பு 19–ல், சென்னைப் புறநகர்க் காவல் ஆணையரகம் அமைப்பது குறித்து, அதனுடைய காரணங்களை இங்கே தெரிவித்திருக்கிறார்கள். ஒரு கோடியே 20



இலட்சம் பேர் வசிக்கின்ற சென்னை மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிக்கான ஆணையரகத்தைப் பிரித்து, புதிய ஆணையரகம் அமைப்பதற்கு வழிகோலுவதாக இங்கே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நான் இங்கே சொல்லுகின்ற கருத்து, தற்போது இந்தியத் தேர்தல் ஆணையம், தொகுதி எல்லை வரையறை நிர்ணயம் செய்ததன் அடிப்படையில், சென்னையை எடுத்துக்கொண்டால் புறநகர்ப் பகுதி மொத்தம், வட சென்னை, மத்திய சென்னை, தென் சென்னை இந்த மூன்று பகுதிகளையும் உள்ளடக்கும்பொழுது, கிட்டத்தட்ட ஒன்றரைக் கோடிக்கு மேற்பட்ட மக்கள் இருக்கின்ற சூழ்நிலையில், முதலமைச்சர் அவர்கள், வட சென்னை, மத்திய சென்னை, தென் சென்னை என்ற அடிப்படையில் காவல் துறை ஆணையரகம் அமைப்பதற்கு அறிவிப்பு 19–ஐத் திருத்தி, நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

*பிற்பகல் 1–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, திரு. தி. வேல்முருகன்? சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மற்றவர்கள் உட்காருங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் ஒருங்கிணைந்த மாவட்டத்திற்கு, மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் கட்டடம் கட்ட வேண்டுமென்று நான் தொடர்ந்து கடந்த இரண்டு ஆண்டுகளாக வலியுறுத்தி வந்ததை ஏற்றும் மேலும், எங்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட அமைச்சர்கள் கோரிக்கையினை ஏற்றும், ரூ.3 கோடியே 80 இலட்சம் செலவில் ஒருங்கிணைந்த அலுவலகம் கட்டுவதற்கு உத்தரவிட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, காவலர்களிலிருந்து உதவி ஆய்வாளர் பணிகளுக்கு, இளைஞர்கள் தங்களுடைய இலட்சியக் கனவாக இருக்கின்ற காவல் துறைக்குத் தேர்வு செய்யப்பட வேண்டுமென்கின்ற எண்ணத்தோடு இருக்கின்றவர்களுக்கு, இத்தனை ஆண்டு கால அரசியல் வரலாற்றில், அவர்களுக்கு அந்த வாய்ப்புகள் மறுக்கப்பட்டு வந்ததை மாற்றி, ஒவ்வோர் ஆண்டும் காவல் துறையின் டி.ஜி.பி. அவர்களுடைய உத்தரவிற்கிணங்க, காவல் துறைப் பணிக்கு ஆட்கள் தேர்வு செய்யப்படுவார்கள் என்ற முறையைக் கொண்டுவந்த தமிழக

முதலமைச்சர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, பண்ருட்டி தொகுதியில் முத்தாண்டிக் குப்பத்திற்கும், குள்ளஞ்சாவடிக்கும் ஒரு தீயணைப்பு நிலையம் வேண்டுமென்று வேண்டுகோள் வைத்திருந்தேன். அதற்கான கோப்புகள் எல்லாம் தயாராகியிருந்தும்கூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவிப்பிலே, அது இடம்பெறவில்லையென்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, குள்ளஞ்சாவடியிலும், முத்தாண்டிக்குப்பத்திலும் ஒரு தீயணைப்பு நிலையத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அமைப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதைப் பேரவைத் தலைவர் அவர்களின்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என்.ஆர். ரங்கராஜன்.

***திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை மக்களுடைய கனவுகளை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பின்பு, ஒவ்வொன்றாக இன்றைக்கு நிறைவேற்றிக் கொண்டு வருகிறார்கள். பட்டுக்கோட்டையிலே புதிய காவல் நிலையம் வேண்டுமென்ற எனது கோரிக்கையை ஏற்று, காவல் நிலையம் அமைப்பதற்கு உத்தரவிட்டுள்ள தஞ்சை மண்ணினுடைய தலைமகனுக்குத் தலைவணங்கி, எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் திருக்கழுக்குன்றத்திலே தீயணைப்பு நிலையத்திற்குப் புதிய கட்டடமும், அதேபோன்று செங்கல்பட்டு நகரத்தினுடைய காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடமும் வழங்கியதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு கோரிக்கையை முதலமைச்சர் அவர்களுக்கு வைக்க விரும்புகிறேன். மகேந்திரா தொழில் நிறுவனத்திலே ஒரு புதிய காவல் நிலையத்தினை உருவாக்க வேண்டுமென்று கோரியிருந்தேன். அதையும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, செங்கல்பட்டு, மாமல்லபுரம் ஆகிய டி.எஸ்.பி. அலுவலகங்களுக்குப் போதிய இடவசதி இல்லை. அதற்கும்



பரவலாக்கிட கூடுதல் கட்டடம் கட்ட வேண்டுமென்ற கோரிக்கை வைத்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டே நான் clarification time–ல் கேட்டிருந்தேன். சத்துவாச்சாரியில் காவல் நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்ட வேண்டுமென்று நான் கேட்டிருந்தேன். சத்துவாச்சாரியில் நிரந்தரக் கட்டடத்திற்கு இன்னும் முதலமைச்சர் அவர்கள் ஆணையிடவில்லை. அதேபோல சத்துவாச்சாரியில் போக்குவரத்துக் காவல் நிலையம் கேட்டிருந்தேன். . .

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** திரு. ஞானசேகரன், சத்துவாச்சாரியா? Sorry. *(பலத்த சிரிப்பொலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (ஆ) கோரிக்கை எண் 22–காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மானியக் கோரிக்கை எண் 22–காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை). 9–5–2008* **அன்று முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப் படுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன்.**

*(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)*

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

**"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.2,204,94,31,000/–, மூலதனக் கணக்கில் ரூ.219,43,28,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,00,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.**

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

## (ஆ) கோரிக்கை எண் 23–தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 23–தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை). 9–5–2008 அன்று முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன்.

*(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)*

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.123,46,40,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.5,78,86,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.



பிற்பகல் 1–20

## (இ) கோரிக்கை எண் 37–மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 37–மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை). 9–5–2008 அன்று மாண்புமிகு உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

*(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)*

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.53,84,75,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (13–5–2008) செவ்வாய்க்கிழமை காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–20 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

[2008 மே 12

# 4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

63. அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள 118 நாடுகளைச் சேர்ந்த தூதரகங்கள் அல்லது உதவித் தூதர் அலுவலகங்கள், அவற்றின் தூதர்கள் மற்றும் விருந்தினர்கள் தமிழ்நாட்டிற்கு வருகை தரும்போது ஆடம்பர வரி செலுத்துவதிலிருந்து விலக்களித்தது குறித்தும் மற்றும் அமெரிக்க ஐக்கிய நாடுகளைச் சேர்ந்த தூதரகம் அல்லது உதவித் தூதர் அலுவலகம், அதன் தூதர்கள் மற்றும் விருந்தினர்கள் தமிழ்நாட்டிற்கு வருகை தரும்போது ஆடம்பர வரி செலுத்துவதிலிருந்து விலக்களித்தது குறித்தும் வணிக வரிகள் மற்றும் பதிவு(சி2)த் துறையின் 29–2–2008 ஆம் நாளிட்ட 22 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 6/1981) 21 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

64. கேபிள் தொலைக்காட்சி கட்டமைப்பு மற்றும் தொலைக்காட்சிமூலம் தொலைக்காட்சித் திரையில் காட்டப்படும் திரைப்படங்களுக்குச் செலுத்தத்தக்க கேளிக்கை வரியிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவு(சி1)த் துறையின் 27–3–2008 ஆம் நாளிட்ட 34 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) 16 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

65. 2006–2007 ஆம் ஆண்டிற்கான காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், வேலூர், திருவண்ணாமலை, சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு, கோயம்புத்தூர், நீலகிரி, தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்ட ஊராட்சிகளின் ஆண்டறிக்கைகள். [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)



2008 மே 12]

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

235. மதிப்பீட்டுக் குழுவின் இருபத்தொன்றாவது அறிக்கை. (2007–2008)

236. மதிப்பீட்டுக் குழுவின் இருபத்திரண்டாவது அறிக்கை. (2007–2008)

—0—

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
228413
சென்னை-600 008
நகல்

அரசு மைய அச்சகம், சென்னை–600 079.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Principal Secretary to Government and
Commissioner of Stationery and Printing,
Chennai-600 002.